# பிழைக்கும் வழி

வித்யா விஹாரிணியும் சேர்ந்தது.

# PRACTICAL LIFE.

WITH WHICH IS INCORPORATED THE VIDYA VIHARINI.



ஜி. எ. வைத்யராமன், பி. எ.,
பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B.A.,
EDITOR.



புஸ்தகம் 5. Vol. 5. | ப்ரமாதீசஸு கார்த்திகைமீ, NOVEMBER 1913. | ஸஞ்சிகை 11 No. 11.


## Practical Life.

A popular illustrated Tamil monthly magazine of general information and instruction devoted largely to agriculture, trade, industry, economics, story, biography, citizenship, and popular, scientific and technical education.

'Practical Life' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | *Inland.* Rs. A. P. | *Foreign.* Rs. A. P. |
|---|---|---|
| Per annum ... | 4 0 0 | 6 0 0 |
| Single copy ... | 0 6 0 | 0 8 0 |
| Sample copy ... | 0 2 0 | 0 3 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | |
|---|---|---|
| 1 Page | ... 5 0 0 | per month. |
| ½ do | ... 2 8 0 | do |
| ¼ do | ... 1 4 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors**:—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Sunkurama Chetty Street, Georgetown, Madras.

## பிழைக்கும் வழி.

முக்யமாய் விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில், பொருளாதாரம், கதை, ஜீவ்ய சரித்ரம், ப்ரஜா லக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய ஸகலருக்கும் உபயோகமான ஒரு மாஸாந்தத் தமிழ்ப்பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள், மாணுக்கர்கள், இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'பிழைக்கும் வழி'யை வாங்கிவருகிறுர்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

| | உள் நாடு. | அந்ய நாடு. |
|---|---|---|
| வருஷம் 1 க்கு ... | 4 0 0 ... | 6 0 0 |
| தனிப்ரதி ... | 0 6 0 ... | 0 8 0 |
| மாதிரி காபி ... | 0 2 0 ... | 0 3 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | |
|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | 5 0 0 |
| ½ பக்கத்திற்கு | ,, ,, | 2 8 0 |
| ¼ பக்கத்திற்கு | ,, ,, | 1 4 0 |

வ்யாஸம்எழுதுகிறவர்கள்கவனிக்கவேண்டியவை

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் ப்ரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனைசெய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானுலும் மறுபடி ப்ரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை கிருபநேயர்கள் அறியவேணும்.

**ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,**
3, & 4, சுங்குராம செட்டித் தெருவு, ஜார்ஜ் டவுன்,
மதராஸ்.

## PRIZE ESSAY COMPETITION.

### வ்யாஸங்களுக்கு வெகுமதிகள்

1913-ம் வருஷம் ஜூலை மாஸம் முதல் நமது பத்ரிகையில் ஒரு வ்யாஸப் போட்டி நடத்தப்பட்டு வருகிறது. எந்த விஷயத்தைப் பற்றி வ்யாஸம் எழுதவேண்டும் என்பதை ஒவ்வொரு ஸஞ்சிகையிலும் குறிப்பிடுவோம். சந்தாதாரர்கள் மட்டும் இந்தப் போட்டியில் சேரலாம். வ்யாஸங்களை ஸுலபமானதும் தெளிவானதுமான தமிழ்நடையில் எழுதவேண்டும்.

ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரே பக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். ஜனவரி மாஸத்து வ்யாஸம், நமது பத்ரிகையில் ஒரு பக்கம் அதாவது 1600 எழுத்துக்களுக்கு மேல்போகக்கூடாது. வ்யாஸங்களைத் தராதரம் பார்ப்பதில் பத்ராதிபருடைய தீர்மானம் முடிவானது.

ஜனவரி மாஸத்துக்கு வ்யாஸம் எழுதுவதற்கு விஷயம்.

அக்டோபர் மாஸத்து ஸஞ்சிகையில் வெளிவந்த விளம்பரங்களில் எந்த விளம்பரம் உங்களுக்குப் பிடித்திருக்கிறது ?

அதற்குக் காரணங்கள் என்ன ?

எந்த விளம்பரத்துக்கு அதிக வோட்டுகள் கிடைக்கின்றனவோ அந்த விளம்பரம் உயர்ந்ததென்பதற்கு தகுந்த காரணங்கள் தெரிவிப்பவர்க்கு இரண்டு ரூபாய் பரிசு அளிக்கப்படும்.

வ்யாஸங்களை ஜனவரிமீ 31வ்க்குள் அனுப்பிவிடவேண்டும். அந்தத் தேதிக்குப் பின் அனுப்பப்படும் வ்யாஸங்கள் வ்யாஸப் போட்டிக்கு அங்கீகரிக்கப்படமாட்டா—பத்ராதிபர்.

## THE OCTOBER PRIZE ESSAY COMPETITION.

### அக்டோபர் மாஸத்து வ்யாஸப்போட்டி.

சென்ற ஆவணி மாஸத்து ஸஞ்சிகையில் அக்டோபர் மாஸத்து வ்யாஸப் போட்டிக்காக "நூறு ரூபாய் முதல் போடக்கூடிய ஏழை ஸ்த்ரீ எந்தத் தொழிலைச் செய்தால் அதிக லாபம் கிடைக்கும் ?" என்ற விஷயத்தைப் பற்றி எழுதவேண்டுமென்று குறிப்பிட்டிருந்தோம். இந்த விஷயத்தைப்பற்றி வந்த வ்யாஸங்களில் மிஸ்டர் பி. வி. வாமன மூர்த்திராவ் எழுதிய வ்யாஸந்தான் மற்ற வ்யாஸங்களைவிட மேலானதாயிருக்கிறதால் அவருக்கு வெகுமதி யளிக்கப்பட்டிருக்கிறது. அந்த வ்யாஸத்தை 'ஸ்த்ரீகள் பகுதி' யில் ப்ரசுரித்திருக்கிறோம். ஆலவேலி மிஸ்டர் எம். வைத்யநாதன் பால் நெய் தயிர் வ்யாபாரத்தால் 100 ரூபாய் முதல் உள்ள ஒரு ஸ்த்ரீ மாஸம் குறைந்தது 20 ரூபாய் லாபம் அடையலாம் என்று காட்டியிருக்கிறார். இதை மற்றொரு ஸஞ்சிகையில் ப்ரசுரிப்போம். இந்த பால் தயிர் வ்யாபாரத்தைப்பற்றி எழுதியிருக்கிற இன்னொருவர் மாடுகளுக்கு ஆகும் வைக்கோல் செலவைச் சேர்க்க மறந்து விட்டார்.

வ்யாஸம் எழுதியவர்கள் கைத்தொழில்களுக்காகும் செலவுகளைக் கணக்குப் போட்டதில் எல்லாரும் 100 ரூபாயையும் மாடு வாங்குவதிலும் நெல் வாங்குவதிலும் செலவழிக்கும்படி கணக்கில் காட்டியிருக்கிறார்கள். சிறு மூல தனமாகிய 100 ரூபாயையும் மாடு நெல் முதலியவை வாங்குவதற்கு உபயோகித்து விட்டால் நடை முதலுக்கு பணம் இராமல் தொழில் நடவாதென்பதை கவனிக்கவில்லை.

# The Agricultural World.

# விவஸாயப்பகுதி.

## REMISSION OF ASSESSMENT.

### தீர்வை வஜா.

இந்த மாஸம் 11-தேதி கூடிய சென்னை லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் ஆனரபிள் மிஸ்டர் எ. எஸ். க்ருஷ்ணராவ் தீர்வை வஜா ஸம்பந்தமாக ஒரு தீர்மானங்கொண்டு வந்தார். அந்தத்தீர்மானமாவது:—"அதிவ்ருடியினாலாவது, அனாவ்ருஷ்டியினாலாவது, அல்லது உயர்த்துகள் தடுக்கக்கூடாத காரணங்களினாலாக்கு மாஸூலின் மொத்தமதிப்பானது ஸாதா மாற்றப்க் கிடைக்கக்கூடியதற்கு மூன்றி தீர்மானபங்குக்கு மேற்படாமல் போனால் தீர் கௌன்வஜா செய்யும்படி கவர்ன்மெண்டார் மிஸ்டர் செய்யவேண்டும் என்று இந்த ஸபை டிஸ்ட்ர செய்கிறது."

மொந்தத் தீர்மானத்தை ஆனரபிள் மிஸ்டர் ...ஷ்ணராவ் ப்ரேரித்தபோது பின் வருமாறு பேசினார். நன்செய் நிலங்களில் பயிர் விளையாமல் போய்விட்டால் ரயத்துகளுக்கு நிலவரியை வஜா செய்யவேண்டியது ந்யாயம் என்று பலகாலமாக எண்ணப்பட்டு வருகிறது. இந்தக்கொள்கை பல வருஷங்களாக அனுஷ்டானத்திலிருப்பதாக தெரிந்திருந்தும், கொஞ்ச காலத்துக்கு முன்னால், ரயத்துகளுக்கு தீர்வை வஜா பெறுவதற்கு யாதொரு பாத்யமுமில்லையென்று போர்டு ஸ்டாண்டிங் ஆர்டரில் ஒரு மாறுதல் செய்யப்பட்டது. சட்டப்படி கவர்ன்மெண்டார் தீர்வை வஜா செய்யக்கடமைப்பட்டிருக்கிறார்களா இல்லையா என்பது ஒருபுறமிருக்க, கவர்ன்மெண்டாருக்கும் ரயத்துகளுக்கும் உள்ள ஏற்பாட்டினாலேயே ரயத்துகளுக்கு தீர்வை வஜா கேட்க பாத்யமுண்டென்று தெரிகிறது. இந்தக் கொள்கையினால்தான் ரயத்துகள் தங்களுடைய வயல்களுக்கு ஸர்க்காருடைய ஜலாதாரங்களிலிருந்து நீர்பாய்ச்சிக்கொண்டால் நஞ்சைத் தீர்வை கொடுக்கவேண்டியிருக்கிறது.

நிற்க, 14-15-வருஷத்துக்கு முன்னால் கவர்ன்மெண்டார் ஒரு ரூல் ஏற்படுத்தியிருந்தார்கள். அதன்படி, ஒரு வருஷத்தில் கிடைத்த மாஸூலில் வழக்கப்படி கிடைக்கும் மாஸூலுக்குக் கால் பங்காக இருந்தால் நிலவரியை வஜா செய்யவேண்டியது. பிற்பாடு ராஜதானி முழுவதும் தீர்வை வஜா ஒரே மாதிரியாக இருக்கவேண்டுமென்பதற்காக அறுவடையான மாஸூலில் ஸாதாரணமான மாஸூலில் 16-ல் ஒரு பாகமாயிருந்தால் மாத்ரம் தீர்வை வஜா செய்யலாம் என்று புதிதாக கவர்ன்மெண்டார் ரூல் ஏற்படுத்தினார்கள். இப்படி ஏன் உத்தரவை மாற்றினார்கள் என்பது தெரியவில்லை. அந்த ரூல் 1902-ம் வருஷம் ஜூன் மாஸம் 11-தேதி வரையில் அமுலில் இருந்து வந்தது. பிறகு கவர்ன்மெண்டார் இது விஷயமாக ஒரு உத்தரவு செய்தார்கள். இப்போது இதுவிஷயமாய் ரூல் எப்படியிருக்கிறதென்றால், தீர்வை வஜா செய்யலாம் செய்யக்கூடாதென்பதை கலெக்டர்களுக்கு உசிதம் என்று தோன்றுகிறபடி தீர்மானிக்கவேண்டும் என்பதே. இப்படி மாற்றிவிட்டதால் ரயத்துகள் ஜமாபந்தி ஆபீஸருடையவும் கலெக்டருடையவும் இஷ்டத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்க வேண்டியிருக்கிறது.

ஸெட்டில்மெண்ட் ஆபிஸர்கள் ஸாகுபடிச் செலவை கணக்குப்போடுவதில் ஏற்படும் கஷ்டங்களை கவனித்துப் பார்ப்போமானால்,

உண்மையில் ரயத்துகளுக்கு தீர்வை வஜாவே கிடைப்பதில்லை யென்று தெரியவரும். ஸாகுபடிச்செலவு இவ்வளவென்று திட்டமாய்க் கண்டுபிடிப்பது கஷ்டந்தானென்று ஸெட்டில்மெண்ட் மான்யூலில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

மேலும், கால் நடைகளுக்குத் தீனி போடுதல், அவைகளைக்கட்டி வைப்பதற்கு கொட்டில் கட்டுதல், ஆகிய இவைகளுக்கு ஆகும் செலவை மான்யூலில்ஸரியானபடிகணக்குப்போடவில்லை. நிலத்தில் கிடைக்கும் வைக்கோலே கால் நடைகளுக்குத் தீனியாகிறதென்று சொல்லப்படுகிறது. அப்படிக்கிடைக்கும் வைக்கோல் கால்நடைகளுக்குப்போதாது. தவிர ஸாகுபடிக்காகும் செலவு நிலத்தின் செழுமைக்குத் தகுந்தபடி அதிகமாக இருக்கிறதென்று சொல்கிறார்கள். அதுவும் ஸரியல்ல. பீடான நிலத்துக்குத்தான் அதிகச்செலவாகிறது. இன்னம், உயர்ந்த மாஸூல் 1-ரூபாய் மாஸூலென்று வைத்து ஸாதாரணமாஸூல் 12-அணு விளைச்சல் என்று ஏற்படுத்தியிருப்பதாலேயே கால்ரூபாய் வீதம் தீர்வை வஜா செய்திருக்கிறதென்று சொல்லுகிறார்கள். சென்ற 8-வருஷமாய் வெளியிட்ட மாஸூல் ரிபோர்ட்டுகளால் கவர்ன்மெண்டார் மதிப்புப்படிக்கு மாஸூலானது ஸாதாரண மாஸூலைவிடக் குறைவாயிருக்கிறதென்று தெரியவருகிறது. அப்படியிருக்க ரயத்துகள் கால் ரூபாய் வீதம் தீர்வை வஜா பெறுகிறார்கள் என்று சொல்வது ஸரியல்ல. ரயத்துகள் ஸுபிக்ஷமான காலத்தில் சேர்த்துவைப்பதைக்கொண்டு க்ஷாமகாலத்தில் ஸரிக்கட்டிக்கொள்ளலாம் என்று சொல்வது அனுபவத்துக்கு ஒத்து வரவில்லை.

ரயத்துகளில் பெரும்பாலர் 30-ரூபாய்க்குக் குறைந்த வரி செலுத்துகிறவர்களாயிருக்கிறார்கள். விலைவாசி உயர்ந்துபோய் விட்டது. வேலையாட்களுக்குக் கொடுக்கும் கூலி அதிகரித்து விட்டது. எருவின் க்ரயம் அதிகமாகி விட்டது. நிலத்தில் கிடைக்கும் மாஸூலோ ரொம்பவும் குறைந்து விட்டது. ஆகையால் இவர்கள் ஸுபிக்ஷகாலத்தில் மிச்சம் பிடிப்பதென்பது முடியாத கார்யம். அறுவடையாகும் மாஸூல் கிடைக்கவேண்டிய மாஸூலில் கால் பங்கா அல்லது மூன்றிலொரு பங்கா என்பதை மதிப்பிடுவது முடியாததல்ல - என்று இப்படிப் பேசினர்.

ஆனரபிள் மிஸ்டர் கே. சிதம்பரநாத முதலியார் இந்தத்தீர்மானத்தைத் தாங்கி பேசுகையில் இப்போதுள்ள தீர்வை வஜா ஸம்பந்தமான ரூல்களால் விவஸாயிகளுக்கு ...ந்தன. நிர்ப்பந்தங்கள் நேரிடுகின்றன ஒரு நாள் மாஸூலைக் கணக்கிடுவதிலும் ஒரு... தீர்வை வஜா அடையவேண்டியவ... நிர்ணயிப்பதிலும், திட்டமாயிருக்கு...றைக்குத் த்தங்கள் செய்யவேண்டும் என்றும் ... எலு ணர். ... தரை

கவர்ன்மெண்ட் தரப்பில் ஆனரபிள் ... ஜான் அட்கின்ஸன் இந்தத் தீர்மானத்தை ஆக்ஷேபித்துப்பேசினர். தீர்வை வஜா கொடுப்பது தயா விஷயமே ஒழிய கட்டாயமாய் சட்டப்படி கொடுக்க கவர்ன்மெண்டார் கடமைப்பட்டவர்கள் அல்லர் என்று போர்ட் ஸ்டாண்டிங் ஆர்டரில் ஒரு பிரிவு சேர்க்கப்பட்டதைப்பற்றிப் பேசுகையில், ரயத்துகளுக்கு தீர்வை வஜா பெறுவதற்கு சட்டப்படி பாத்யதை யுண்டு என்று எண்ணி வந்த தப்பெண்ணத்தை மாற்றுவதற்காகவே அப்படி ஆர்டரில் மாறுதல் செய்யப்பட்டதென்றும், ரயத்துகளுக்கு சட்டப்படி தீர்வை வஜா பெறுவதற்கு யாதொரு பாத்யமும் கிடையாதென்ற கொள்கையை எப்போதும் கவர்ன்மெண்டார் கொண்டிருப்பதால் அக் கொள்கையை வ்யக்த

மாய்த் தெரியப்படுவதற்காக அந்தப்பிரிவு சேர்க்கப்பட்டதே யன்றி, கவர்ன்மெண்டார் தங்களுடைய கொள்கைகளை மாற்றி அப்ப டிக்கொள்கையை மாற்றினதற்காக சேர்க்கப் படவில்லை யென்றும் சொன்னார். மேலும், தமக்குத் தெரிந்த வரையில் இப்போது ரெமிஷன் தாராளமாய்க் கொடுக்கப்பட்டு வருகிற தென்றும் சொன்னார். இன்னம், "ஒரு மாஸூல் கால் விளைச்சலா, அரைக் கால்விளைச்சலா அல்லது மூன்றிலொரு பங்கு விளைச்சலா, என்று சொல்வது ஸுலபமல்ல; இதைத்தீர்மானிப்பதில் அபிப்ராய பேதமுண் ரயத்லாம். ஒரு மாஸூலும் கிடைக்காமல் வது, மகப் போய்விட்டதென்றால் அதை எவ ரணமாய்ளிதில் சொல்லிவிடலாம். இதனால் லொரு ப்ராவும் சாவியாய்ப் போனால்தான் வையை எ கொடுக்க வேண்டுமென்று ஏற் உத்தரவ கிறது. பூராசாவியாய்ப் போகாத சிபார்ஸில் எவ்வளவு நஷ்டமென்று திட்ட இ சொல்வது ரொம்பவும் கஷ்டம். ஒரு க்ஸூலால் ரயத்துகளுக்கு யாதொரு ப்ர யோஜனமும் இல்லையென்றால், அப்போது பூரா வும் சாவியென்றே சொல்லப் படுகிறது. இவ்வளவு மாஸூல் கிடைத்தால் பூரா சாவியா அல்லது அரைக்கால்வாசி அல்லது கால்வாசி விளைச்சலா என்று ஏற்படுத்து வதைவிட, ஜமாபந்தி ஆபிஸரே நேரில் விசா ரித்து மாஸூல் எப்படிப்பட்டது என்று சொல்வது நல்லது. மிஸ்டர் க்ருஷ்ணராவ் ஸாகுபடிச்செலவை ஸரியானபடி கணக்கிடுவ தில்லை என்று குறை கூறினார். ஸரியானபடி கணக்கிடுவது கஷ்டமென்று சொல்லி, கால் நடைகளுக்காகும் செலவுகளைச்சேர்த்துக்கொ ள்ளவில்லை யென்றும் சொன்னார். கால் நடை களுக்கு ஆகும் செலவு வைக்கோல் வரும்படி யில் அடங்கிவிடுகிறது. வைக்கோலில் கிடை க்கும் வருப்படி அநேக ஸமயங்களில் நிலத் துக்குப்போட்டிருக்கும் பூராத்தீர்வையைவிட ரொம்ப அதிகமாயிருக்கிறது. மேலும், கால் நடைகளை வயலோரங்களிலும் குளம், கிணறு இவைகளின் கரைகளிலும் மேய விடுவதால் கால் நடைகளுக்கு அநேகமாய் செலவே பிடிப்பதில்லை. வெளியில் மேயப்போகாமல் கொட்டிலிலேயிருக்கும் மாடுகளுக்கோ வைக் கோல் வரும்படி போதுமானது. நிற்க, ஆன ரபிள் மிஸ்டர் க்ருஷ்ணராவ் இந்தியா கவர்ன் மெண்டின் நிலவரி பாலிஸி என்னும் புஸ்தகத் தில் காட்டியிருக்கும் இரண்டு கணக்குகளைப் பற்றிப்பேசவில்லை. அந்தப் புஸ்தகத்தில் ஸர் ப்ரெடரிக் நிக்கல்ஸன் ஸாகுபடிக்கு ஆகும் செலவு இவ்வளவு என்று மதிப்பிட்டிருப் பது போதுமானதென்று சொல்லியிருக்கிறார். ஸாகுபடிச்செலவு மொத்தமாஸூலில் பாதி யாகிறதென்றும், ராஜதானி முழுவதிலும் பாதிவாரத்துக்குக் குத்தகை விடுவது ஸகஜ மாயிருக்கிறதென்றும் சொல்லுகிறார். நிலஸ் வான் மொத்தமாஸூலில் பாதி எடுத்துக் கொண்டு, ஸாகுபடிச்செலவும் மொத்தமாஸூ லில் பாதியாகிவிட்டால் ஸாகுபடி செய்பவ னுக்கு யாதொரு ஆதாயமும் இல்லை யென்று ஏற்படுகிறது. அப்படி ஆதாயமே இல்லையென்றால், நிலங்கள் ஸாகுபடியாகாமல் தரிசாகப்போய்விட வேண்டியதுதான். ஆனா லோ, லக்ஷணக்கணக்கான ஏகர் நிலங்கள் வாரத்துக்கு ஸாகுபடிக்கு விட்டிருக்கி றார்கள். இந்த இரண்டு விஷயங்களும் எப்படி பொருந்தும்? ஸர் ப்ரெட ரிக் நிக்கல்ஸன் அதற்கு பின் வருமாறு காரணம் சொல்லுகிறார். ஸர்க்கார்ப் பங்கை திட்டப்படுத்தியதில் குறைச்சலாக திட்டம் போட்டிருக்கலாம். அல்லது மொத்த மா ஸூலை குறைவாக மதிப்புப் போட்டிருக்க லாம். ஸாகுபடிச்செலவு அதிகமாகும்படி கணக்குப்போட்டிருக்கலாம். அல்லது வைக்

கோலில் கிடைக்கும் வரும்படி யதிகமாக இருக்கலாம். ஸாகுபடிச் செலவுக்காக பணம் செலவழியாமல், பயிரிடுவோனே வேலைகளை யெல்லாம் ஸொந்தத்தில் செய்து வந்திருக்க லாம். அல்லது ரயத்துவாரி நிலஸ்வான் வார ஸாகுபடி செய்பவனுக்கு யாதொரு லாபமும் கிடைக்காதபடி எல்லா லாபத்தையும் அடைந்து வரலாம். இதனால் கவர்ன்மெண்டார், வாய்தாவிஷயத்தில் ரொம்ப மிதமாகவே யிருக்கிறார்கள் என்று தெரிகிறது-என்றார்.

மிஸ்டர் ராவ் கொண்டுவந்த தீர்மானத்தால் மூன்றிலொரு பங்கு விளைச்சல் ஸாகுபடிச் செலவுக்குப்போய் விடுகிறதென்று சொல்லுவதாகத் தெரிகிறது. ஆனால் தாம் (ஸர்ஜான் அட்கின்ஸன்) தயாரித்துள்ள ஒரு கணக்கால், எல்லா ஜில்லாக்களிலும் மூன்றி லொரு பங்கு விளைச்சலின் மதிப்பானது ஸாகுபடிச்செலவை விட இரண்டு மூன்று மடங்கு அதிகமாக இருக்கிற தென்று தெரிகிறது. அப்படி யிருக்க மூன்றிலொரு பங்கு விளைச்சல் கிடைத்தபோது ஸாகுபடிச் செலவுக்குத்தான் ஆயிற் றென்றும் நிலஸ்வானுக்கு ஒன்றும் மிச்சமில்லை யென்று சொல்வது ஸரியல்ல. மேலும், ரயத்துகளில் பெரும்பாலார் ஸ்வல்ப தொகை யான வரி செலுத்துபவர்களாக இருப்பதால் அவர்கள் மிச்சம் பிடித்து வைக்கமுடியா தென்று சொன்னார். ஆனால் அது ஸரியல்ல, ஒரு ரயத்து தன்பேரில் பல பட்டாக்கள் வைத்துக் கொண்டிருக்கலாம். தஞ்சாவூர், மலையாளம் ஜில்லாக்களில் ஒரு பட்டாதார் தன் பேரில் இருநூறு முன்னூறு நானூறு பட்டாக்கள் வரையில் வைத்திருப்பதுண்டு. மேலும் ஸ்வல்ப வாய்தா செலுத்தும் பட்டாதாரனுக்கு வேறு வழிகளில் வரும்படிவரும். கால ஸ்திதி மாறுபட்டு அதனால் விளைச்சலில் ஏற்றக்குறைவு ஏற்படும் என்றே தீர்வைபோடும் போதும், அதற்காகக் கொஞ்சம் தள்ளி விடுகிறார்கள். ஆகையால்தான் தீர்மானத்தில் கேட்டுக் கொண்டிருக்கிறபடி ஒன்றும் செய்வதற்கில்லை.

மேலும் இன்னொரு விஷயம். எப்பேர்ப்பட்ட விளைச்சல் என்று ரூபித்து அதற்கு ஸரியானமதிப்பும் போடுவது விளைச்சல் பூராசாவியானால்தான் ஸாத்யமாகும். கொஞ்சம் விளைச்சல் என்று சொன்னால் எவ்வளவு விளைந்தது என்று ரூபிப்பதும் அதற்கு ஸரியாக மதிப்புப் போடுவதும் முடியாத கார்யம். இதனால் தான் இந்தத் தீர்மானத்தை கவர்ன்மெண்டார் அங்கீகரிக்கவில்லை, யென்று ஸர் ஜான் அட்கின்ஸன் சொன்னார்.

ஆனரபிள் மிஸ்டர் ராமச்சந்த்ர ராவ் தீர்மானத்தைத் தாங்கிப் பேசுகையில், ஒரு ரூபாயும் அதற்குக் குறைந்த தொகையும் தீர்வையாகச் செலுத்துகிறவர்களுக்கு வேறு ஜீவனோபாயம் இருக்கிறதென்று சொல்வது எடுத்து[illegible]ம் பேசும் விஷயத்துக்குப் பொருந்தின தில்லையென்றும், ஜனங்களில் பெரும்பாலார் அன்[illegible]டம் காய்ச்சிக் குடிப்பவர்கள் என்று தாம் நம்பியிருப்பதாகவும், சொன்னார்.

ஆனரபிள் மிஸ்டர் பி. என். சர்மா தீர்மானத்தைத் தாங்கிப் பேசுகையில், சில ஜில்லாக்களில் ஸாகுபடிச் செலவானது மாஸூலில் மூன்றில் ஒரு பங்குக்குமேல் ஆகிறதென்று சில கணக்குகளைக் கொண்டு ரூபித்து, ஸுபிக்ஷ காலத்தில் விவஸாயிகள் மிச்சம் பிடித்து வைத்திருக்கக் கூடியதிலிருந்து க்ஷாமகாலத்தில் வரிசெலுத்தட்டும் என்று சொல்வது ந்யாயமில்லை யென்றும், ஸுபிக்ஷகாலத்தில் விவஸாயிகள் மிச்சம் பிடித்துவைத்து க்ஷாம காலத்தில் வரி செலுத்துவார்கள் என்று எதிர் பார்ப்பது முடியாத கார்யம் என்று இந்தியா கவர்ன்மெண்டார் சொல்லி யிருப்பதாகவும் சொன்னார். ஆனரெபிள் மிஸ்டர் கேசவபிள்ளை,

கால் நடை வைத்திருக்க ரயத்துக்குயாதொரு செலவும் இல்லையென்பது தவறு என்றார்.

ஸர் ஜான் அட்கின்ஸன் முடிவில் பேசின போது மாஸூல் விளைவு குறைவாக இருந்தால் அப்படிக் குறைந்துபோனதற்குக் காரணம் நிலத்தில் ஸ்வபாவமாக உள்ள தன்மையா அல்லது தற்செயலாக நேர்ந்த ஸம்பவமா என்பதைக் கண்டுபிடிப்பது கஷ்டமென்றும், ஸெட்டில்மெண்ட் காலத்தில் நிலத்தில் ஸ்வபாவமாக உள்ள காரணங்களால் மாஸூல் குறையுமென்றால் அதற்கு தகுந்தபடி ஸெட்டில்மெண்டில் ஏற்பாடு செய்திருக்கிறார்கள் கப்பும், தற்செயலாய் நேரும் காரணங்களில் உணவுப்ருகங்களால் அழிவு நேரிடக்கூடிய மாய்க் க்கு ஸெட்டில்மெண்டிலேயே வேண் குஞ்சுநறைத்திருக்கிற தென்றும், மற்ற மென்றுஇ் எல்லாம் வருஷாவருஷம் நேருவவை அனைன்றும், இவைகளுக்காகவும் ஸெட்டிக்கூடண்டில் வேண்டிய அளவு தள்ளிக்கொயழிக்கிறார்கள் என்றும், சொல்லி, கவர்ன் குண்டார் தீர்மானத்தை ஒப்புக்கொள்ள முடியாதென்று சொன்னார். தீர்மானத்தை வோட்டுக்கு விட்டதில் 14-மெம்பர்கள் தீர்மானத்துக்கு ஸாதகமாயும் 20 மெம்பர்கள் விரோதமாயும் வோட்டுக்கொடுக்கவே தீர்மானம் நிறைவேறாமல் போயிற்று.

## TRAINING THE FARM HANDS.

பண்ணையாட்களை வேலையில் பழக்குதல்.

விவஸாய டிபார்ட்மெண்டார் அங்கங்கே ஏற்படுத்தி யிருக்கும் ஸர்க்கார்ப்பண்ணைகளில் ஸொந்தத்தில் பயிரிடும் குடியானவர்களையும், மேஸ்த்ரிகளையும், பண்ணையாட்களையும் குறிப்பிட்ட சில விவஸாய வேலைகளையும், விவஸாயத்திற்கு உதவும் லேசான மெஷீன்களை உபயோகிக்கவும் பழக்கிவைப்பார்கள் என்று ஸமீபத்தில் வெளியான விவஸாயத் துண்டுபத்ரிகையில் சொல்லியிருக்கிறது, நிலஸ்வான்கள் பொறுக்கியெடுத்த சில பண்ணையர்களை அனுப்பி வேலை பழக்கிவைத்துக்கொள்ளலாம். பூமிகளில் பாடுபட்டு பண்ணைவேலைகளில் பழக்கமுள்ளவர்களாயும் ஸர்க்கார்ப் பண்ணையிலிருக்கும் கூலிகளோடு கூலியாய் வேலைசெய்யக் கூடியவர்களாயும் இருப்பவர்களை மட்டுமே டிபார்ட்மெண்டார் வேலை பழக்கச் சேர்த்துக்கொள்ளுவார்கள்.

வேலையாட்கள் தங்கள் வழிச்செலவை தாங்களே போட்டுக்கொள்வதோடு குடியிருக்க இடமும் தாங்களே தேடிக்கொள்ளவேண்டும். ஆனால் அவர்கள் செய்யும்வேலைக்கு ஸர்க்கார்ப் பண்ணையில் கூலிகொடுப்பதுபோலவே கூலி கொடுத்துவிடுவார்கள். பொதுவாய் ஆயில் இன்ஜின், மோட்டார் (oil-engine motors) இவைகளை ஓட்டக் கற்றுக்கொடுப்பதில்லை. வேலை பழக்குவதைக்குறித்த விவரம் கீழே கண்டிருக்கிறது.

கற்றுக்கொடுக்கும் வேலையின் விவரமும் கற்றுக்கொடுக்கப் பிடிக்கும் காலமும் கீழே குறிப்பிடுகிறோம்.

### கோயமுத்தூர்ப் பண்ணை.

(1) உழவு; மண்ணைப் புரட்டும் சிறகுள்ள இரும்புக்கலப்பைகளை தகுந்தபடி உபயோகிக்க, ஒருமாஸம். எருதுகளையும் பழக்க அனுப்பலாம்.

(2) விதைக் கலப்பை (கொர்ருக்கலப்பை) யால் விதைக்க, ஒருமாஸம், ஆக்ஸ்டு 15 முதல் ஸெப்டம்பர் 15 வரை.

(3) வெல்லம் காய்ச்சுதல், ஒருமாஸம் ஏப்ரல் அல்லது மே.

(4) நெல் நாற்று நட, நாற்றங்கால் தயார் செய்து நாற்றுப் பாவி ஒற்றை நாற்றாய் நடவும் பசுந்தாள் உரப்பயிர் ஸாகுபடி செய்யவும். இரண்டுமாஸம் ஏப்ரல் முதல் ஜூலை வரை. ஆண்பிள்ளை ஆட்களோடு அவர்கள் வீட்டுப் பெண்பிள்ளை ஆட்கள் வந்தால் ஒற்

றை நாற்று நடவும் தூற்றுகிற மெஷீன் வேலையும் பழக்குவார்கள்.

ஹகரி (பல்லாரிஜில்லா,) நந்தியால் (கர்நூல் ஜில்லா).

(1) ஏரங்காடு என்று சொல்லும் கரிசல் நிலத்துக்கேற்ற இரும்புக் கலப்பைகளைக் கொண்டு உழப்பழகுதல், இரண்டுமாஸம் ஜனவரி, பிப்ரவரி.

(2) சோளத்திற்கு கரிப்பான் நோய் வராதபடி சோளவிதையைப் பாடம்செய்ய, எக்காலத்திலும் அது தெரிகிற மட்டும்.

ஸாமல்கோட்டா (கோதாவரிஜில்லா).

(1) நெல்; நாற்றங்கால் தயார்செய்து நாற்றுப்பாவி பிடுங்கி ஒற்றை நாற்றாய் நடவும் பசுந்தாளுரப் பயிர்களை ஸாகுபடி செய்யவும், மூன்றுமாஸம் மே, ஜூன், ஜூலை.

(2) கரும்பு; வெல்லம் செய்யவும் கரும்பை வரிசையாய் நட்டு பயிரிடும் முறையைப் பழகவும், இரண்டுமாஸம் பிப்ரவரி முதல் ஏப்ரல் வரை.

பாலூர் (தென்ஆற்காடு ஜில்லா)

(1) விதைபொறுக்கி எடுத்தல், ஒருவாரம் ஆகஸ்டு, ஸெப்டம்பர்.

(2) விந்துக் கலப்பையால் உழுதல், ஸாம்ஸன் ஆரம் என்று சொல்லும் முள்ளுப்பலுகால் பலுகடித்தல், ஜனவரி, பிப்ரவரி மாஸங்களில் ஜூன், ஜூலைமாஸங்களில் ஒருவாரம்.

(3) கரும்பு நடல், மார்ச்சுமாஸம் இரண்டு வாரம்.

கோயில்பட்டி. (திருநெல்வேலி ஜில்லா).

(1) கரிசல் கலப்பை என்று சொல்லும் இரும்புக் கலப்பையை ஸரியானபடி பூட்டவும் உழவும்பழக; கோடையில் அதாவது மே, ஜூன், ஜூலை மாஸங்களில் இரண்டு வாரம்.

(2) கொர்ருக் கலப்பை விதைப்புக்கேற்ற கருவிகளை உபயோகப்படுத்திப்பழக, ஸெப்டம்பர், அக்டோபர் மாஸங்களில் ஒருமாஸம்.

(3) மாட்டுக் களைவெட்டியால் களை வெட்ட (அதாவது தந்துவடிக்க), டிஸம்பர், ஜனவரி மாஸங்களில் இரண்டுவாரம்.

தளிப்பரம்ப (மலையாளம் ஜில்லா).

கரும்பு ஆலை ஆடி வெல்லம் காய்ச்சும் முறைகளில் பழக, அப்போதே ஆலை அடுப்புக் கட்டும் விதத்தையும் பழக்குவார்கள், ஜனவரியில் ஒரு மாஸம்.

கோயமுத்தூர் காலேஜில் சேருகிறவர்கள் அந்தக்காலேஜ் ப்ரின்ஸிபலுக்கும், ஹகரி, நந்தியால், ஸாமல்கோட்டை முதலிய இடங்களில் சேருகிறவர்கள் பல்லாரியிலிருக்கும் [illegible]மை பாகம் விவஸாய டிபுடி டிரெக்டருக்கும் [illegible]ஸாயக் [illegible]லூர், கோயில் பட்டி, தளிப்பரம்பா [illegible] அடிக் [illegible]ளில் சேருபவர்கள் திருச்சிணுப்பள்ளி உள்ளூர் [illegible]கும் விவஸாய டிபுடி டிரெக்டருக்கும் [illegible]ர்களாம். [illegible]ய்துகொள்ளவேண்டும். எப்போது [illegible]லிய அவ சேர்க்கமுடியும் என்பதையும் அவ[illegible]த்தமாக வேணுமானல் குடியிருக்க இடத்தையும் [illegible]வ்விடத்து அவர்களுக்கு எழுதினல் பதில் [illegible]று வார்கள்.

## THE HEN.

### பெட்டைக் கோழி.

பெட்டைக்கோழியைப் பற்றிய ஒரு வ்யாஸத்தில் "உதயதாரகை" சில குறிப்புகள் எழுதியிருக்கிறது. நல்ல முட்டைகள் வேண்டுமானல் ஸௌக்யமும் பலமுமுள்ள கோழிகளை வாங்கி அவைகளுக்கு நல்ல உணவு கொடுத்து வளர்க்கவேண்டும். முட்டையிடும் கோழிகளுக்கு கோதுமை ஓட்ஸ் முதலிய தான்யங்களை ஸமபங்காகக் கலந்து தீனியாகப்போடுவது உத்தமம். தவிடும், மாட்டு இறைச்சித்தூளும், எப்பொழுதும் அவைகள் உண்ணத் தக்கதாக திறந்தபாத்ரத்தில் வைக்கவேண்டும்.

பெட்டை ரொம்ப ஓடியாடி அலைந்தால்

அதிக முட்டையிடும். ஆகையால் அவைகளுக்குப் போடும் தான்யங்களை கனத்த புல் படுக்கையில் தூவிவிடுவது நல்லது. கீரை, உருளைக்கிழங்கு, முளைகொண்ட ஓட்ஸ் முதலியவைகளும் அவைகளுக்கு ஏற்ற தீனியாகும். குஞ்சுகள் பொரித்து மூன்றுநாள்களுக்கு நன்றாய் வேகவைத்த முட்டையையும் காய்ந்த ரொட்டியையும் ஸரிபங்காகக் கலந்து கொடுக்கவேண்டும். அல்லது ரொட்டியைப் பாலில் பிசைந்து பாலைப்பிழிந்துவிட்டுக் கொடுக்கலாம். அதற்குப்பிறகு கோதுமை அல்லது டிவேறு தான்யங்களின் குறுணையை தீனியா என்று போடலாம். கோழிகளுக்கு பச்சை காட்டும் சுத்த ஜலமும் முதல்நாளில் ஏராள நிலங்களுகொடுக்கவேண்டும்.

டியபடி குளுக்கு எவ்வளவு உணவு வேண்டு காரணங்களும் கொடுக்கலாம். தினம் 5-தட தில்லை பெவகளுக்கு தீனி போடவேண்டும். கோடில் மெகளில் பூச்சிகள் இருந்தால் அவைகளை டுத்திரு கூடுகளிலும், அவைகளிலுள்ள இடுக்மெள்ளிலும் கிரோஸின் எண்ணெய் பூசவேண்டும். கூடுகளுக்கு அடிக்கடி வெள்ளையடிக்கவேண்டும்.

கோழிகள் கழியும்போது கோதுமை மாவும் தவிடும் கொடுப்பது நல்லது. அதனோடு ஒரு டீஸ்பூன் ஆமணக்கெண்ணெயும் 5-துளி "டர்பண்டைன்" (Turpentine) எண்ணெயும் கலந்து கொடுப்பது நல்லது.

கோழிகள் வளர்ப்பதில் பின்வரும் விஷயங்கள் கவனிக்கத் தக்கவை.

(1) கோழிக் கூடுகளை அடிக்கடி சுத்தம் செய்யவேண்டும். ஒருகூட்டில் 4-கோழிகளுக்குமேல் இருக்கக்கூடாது.

(2) முட்டைகளை தினம் இரண்டுமுறை எடுக்கவேண்டும்.

(3) முட்டைகளைக் குளிர்ந்த ஈரமற்ற இடத்தில் வைக்கவேண்டும்.

(4) குஞ்சு பொரிக்குங்காலம் முடிந்தபின் சாவல்களை பெட்டையினிடம் அணுகவிடக்கூடாது.

## MANURES AND FERTILISERS.

எருக்களும் உரங்களும்.

ஒரு மாஸூலின் வருமானத்தை அதிகப்படுத்தும் பொருட்டு நிலத்தில் சேர்க்கப்படும் சரக்குகள்தான் எருக்கள் அல்லது உரங்கள் என்னப்படும்.

அப்படிச் சேர்க்கும் சரக்குகளில் நைட்ரஜன், பாஸ்பாரிக் ஆஸிட், பொட்டாஷ் இவைகளை பயிருணவாகச் சேர்ப்பது முக்யகருத்து. இதோடு சில சரக்குகள் அவைகளிலடங்கிய இந்த்ரியவஸ்துக்களை நிலத்திற்குச் சேர்த்து நிலத்தின் ஸ்வபாவவளத்தையும் வ்ருத்தி செய்கின்[illegible]ன.

இது விஷயமாய் 'சாஸ்த்ரீய உரத்தில்' ஒரு வ்யாஸம் எழுதப்பட்டிருக்கிறது. தொழு எரு, தழை, சாம்பல் முதலிய ஏராளமாய் சேர்க்கப்படும் எருக்கள் நிலத்தின் ஸ்வபாவவளத்தை விசேஷமாய் வ்ருத்தி செய்யக்கூடியவைகள். மேற்கண்ட சரக்குகள் நிலத்தின் ஸ்வபாவவளத்தை வ்ருத்திசெய்வதோடு அந்தச் சரக்குகளிலுள்ள எளிதில் பயிருணவாகாத நைட்ரஜன், பாஸ்பாரிக் ஆஸிட், பொட்டாஷ் இவைகளும் பயிருணவாகின்றன. முதலாவது, எருக்களிலுள்ள இந்த்ரிய வஸ்து நிலத்தின் ஸ்வபாவவளத்தைவ்ருத்திசெய்கிறது. அதாவதுரொம்ப கெட்டியான களிமண்ணைது தண்ணீர், காற்று முதலியவைகள் அதற்குள் தாராளமாய் ப்ரவேசிக்கும்படி தளர்கிறது. மணல் பூமியில் மக்கின இந்த்ரிய வஸ்து இடையில் ப்ரவேசித்து தண்ணீர் தங்கும்படி செய்கிறது. இரண்டாவது, மேற்கூறியவாறு இந்த்ரிய வஸ்து சேருவதுடன், மண்ணிலுள்ள அநிந்த்ரிய வஸ்துக்களோடு இந்த்ரியவஸ்துக்கள் கலப்பதாலுண்டாகும் ரஸாயன

மாறுதல்களினால் ஏற்கனவே மண்ணிலுள்ள கரையாத பயிருணவு ஸத்துக்கள் கரைந்து பயிருணவாகின்றன. ஸாதாரணமாய் நாட்டு எருக்களுக்கும், ரஸாயன உரங்களுக்கும் உள்ள வித்யாஸம் இதுவே. நாட்டு எருக்களோ நிலத்தின் ஸ்வபாவ வளத்தை வ்ருத்தி செய்வதும் தவிர அவைகளிலுள்ள ஸ்வல்பமான பயிருணவு ஸத்துக்களையும் உபயோகப்படும்படி செய்கின்றன. ரஸாயன உரங்களோ ஏராளமான நைட்ரஜன், பாஸ்பாரிக் ஆஸிட், பொட்டாஷ் ஆகிய பயிருணவு ஸத்துக்களைச் சேர்ப்பதில் மாத்ரந்தான் உபயோகப்படுகின்றன. நாட்டு எருக்களால் சேர்க்கப்படுகிற நைட்ரஜன், பாஸ்பாரிக் ஆஸிட், பொட்டாஷ் ரொம்பகுறைவு. ஆகிலும் பூமியில் ஏற்கனவே இருக்கிற ஸத்துக்களை உணவாக்குவதால் பயிர்கள் வளர்கின்றன. ஓயாமல் ஸாகுபடியாகிற நிலங்களில் ஏற்கனவேயிருக்கிற ஸத்துக்கள் நாளடைவில் குறைந்து விடுகின்றன. ஆகையால்நாம் போடும் உரத்தில் ஏராளமாய் ஸத்துக்களைச் சேர்த்தாலொழிய ஸாகுபடி லாபகரமாயிராது. அப்படிச்சேர்க்க நாட்டு உரங்களில் ஸத்துரொம்ப குறைவு. இதனால் ஸத்து அதிகமாயுள்ள ரஸாயன உரம் அவச்யமென்பது தெளிவாகிறது. ரஸாயன உரங்களில் நைட்ரஜன், பாஸ்பாரிக் ஆஸிட், பொட்டாஷ் இவைகள் அதிகமாகவும் உடனே தண்ணீரில் கரைந்து உணவாகக்கூடிய நிலைமையிலும் இருக்கிறபடியால் இவைகளை உபயோகித்த ஸாகுபடி லாபகரமாகத்தான் இருக்க வேண்டும் என்று 'சாஸ்த்ரீய உரம்' சொல்லுகிறது.

## AGRICULTURAL IMPLEMEMTS.

### விவஸாயக் கருவிகள்.

மைஸூரில்விவஸாயக்கருவிகளைவாங்கிவைத்து ஜனங்களுக்கு விற்பதற்காக ஒரு விவஸாயக்கருவி டெப்போ சென்ற 1910-ம் வ்ருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. சென்ற மூன்று வருஷகாலமாக அந்தடெப்போவில் வேலைத்ருப்திகரமாக நடந்து வருகிறதென்று மைஸூர் விவஸாய டிரெக்டர் அதைப்பற்றிய தமது ரிபோர்ட்டில்தெரிவித்திருக்கிறார். அதில் முக்யமாய் கலப்பைகளும், அவைகளின் தனி பாகங்களும், மற்ற கருவிகளும் விற்கப்படுகின்றன. இன்னம் பத்து வருஷத்துக்கு அந்தடெபோவை வைத்திருக்கும்படி கவர்ன்மெண்டார் உத்தரவு செய்திருக்கிறார்கள். சென்ற மூன்று வருஷகாலத்தில் 18000 ரூபாய் பெறுமான விவஸாயக்கருவிகள் அந்தடெப்போவில் விற்றிருக்கிறார்கள், அந்தந்த ப்ரதேசத்து நிலை, பா[illegible]களுக்கும் தேவைக்கும் தகுந்தபடி விவ[illegible]இவைக[illegible] கருவிகளில் மாறுபாடுகள் செய்தும் [illegible]யிலிருக்கடி தேவையாயிருக்கும் பாகங்களை [illegible] மனுசெ[illegible]களிலே செய்து கொண்டும் வருகிற[illegible]ஆள்களைச் [illegible] அமெரிக்காவிலிருந்து கலப்பை முத[illegible]ர்களுக்கு [illegible]ச்யமான கருவிகளின் பாகங்களை மொ[illegible]ம் குறி[illegible] அமெரிக்காவிலிருந்து வரவழைத்து இழுது[illegible]த்தில் சிலபட்டணங்களில் அவைகளை ஒ[illegible] சேர்த்து கலப்பை முதலியவைகளாக்கி விற்க வேண்டுமென்று கவர்ன்மெண்டார் சொல்லியிருக்கிறார்கள்.

## THE POONA AGRICULTURAL CONFERENCE.

### பூனா விவஸாய கான்பரேன்ஸ்.

ஸமீபத்தில் பூனாவில் கூடிய விவஸாய கான்பரென்ஸில் சில முக்யமான தீர்மானங்கள் செய்யப்பட்டன. அவையாவன, (1) விவஸாய இலாகாவில் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு ஸ்கீமில் செலவு செய்யப்படும் பொருட்டு, ரூபாய்க்கு ஒரு பைஸா வீதம் நிலத்தீர்வையோடு சேர்த்து வஸூல் செய்ய டிஸ்ட்ரிக்ட் போர்டுகளுக்கு அதிகாரம் கொடுக்க வேண்டும். (2) பருத்தியும் மற்ற விவ்ஸாயப்பொருள்களும் விற்பதற்காக சந்தைப்பேட்டைகள்

ஏற்படுத்த கவர்ன்மெண்டார் ஸ்தலஸ்தாபனங்களுக்கு அதிகாரம் கொடுக்க வேண்டும். (3) பட்டணங்களில் ஜனங்களுக்கு நல்ல பால் கிடைக்க வேண்டியதின் அவச்யத்தை உத்தேசித்து கால் நடைகளை வளர்ப்பதில் பலமான முயற்சிகள் செய்ய வேண்டும்.

## LAND CESS.

நில ஸெஸ்.

இந்த மாஸம் நடந்த லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் ஆனரபிள் மிஸ்டர் நரஸிம்மய்யர் கொயம்புத்தூரிலும் மற்ற ஜில்லாக்களிலுமுள்ள டிஸ்ட்ரிக்ட்போர்டுகளுக்கு இப்போது [illegible]யக்கு 1 அணுவாக யிருக்கும் ஸெஸ்ஸை [illegible]துவதற்கு அதிகாரம் கொடுக்கும்படி [illegible]ராஸ் லோகல் போர்ட்ஸ் ஆக்டை [illegible]வேண்டியது அனுவச்யமென்று ஒரு [illegible] கொண்டு வந்தார். அதைப்பற்றி [illegible]லில் பேசு முன்னமே, ஆனரபில் [illegible]சிவஸ்வாமி அய்யர், அது விஷயமாய் [illegible]ரிக்ட் போர்டுகளுடைய அபிப்ராய[illegible]னனவென்று கவர்ன்மெண்டார் கேட்டுவிட்டிக்கிறதாகவும், எல்லாரும் இன்னம் தங்களுடைய அபிப்ராயத்தை கவர்ன்மெண்டுக்கு அனுப்பவில்லை யென்றும், பதில்கள் எல்லாம் சேர்ந்தபின் அவைகளைப்பற்றி கவர்ன்மெண்டார் ஆலோசித்து சட்டத்தை மாற்றவேண்டியது அவச்யந்தான் என்று தீர்மானித்தால், பிற்பாடு கௌன்ஸிலில் மெம்பர்கள் அந்த விஷயத்தைப்பற்றி பேசலாமென்றும், இப்போது அதைப்பற்றி அவஸரப்படவேண்டியதில்லையென்றும் சொன்னார். இதன்மேல் ஆனரபிள் மிஸ்டர் நரஸிம்மய்யர், லாண்ட் ஸெஸைப்பற்றிய கவர்ன்மெண்டு ஆர்டரில் உள்ள வார்த்தைகளால் கோயம்புத்தூருக்கு மாத்ரம் தனிச்சட்டம் ஏற்படுமோ என ஸந்தேகிக்க இடமிருந்ததென்றும், ஆனரபிள் மிஸ்டர் சிவஸ்வாமி அய்யர் அப்படியில்லையென்று சொல்லிவிட்டதால் தாம் தமது தீர்மானத்தை நிறுத்தி கொள்வதாகவும் சொல்லி தீர்மானத்தை வாப்ஸ்வாங்கிக்கொண்டார்.

## MINT.

புதினா.

புதினா அல்லது பொதினாக் கீரைக்கு ஈ எச்சமிட்டான் கீரை என்று ஒரு பெயர் உண்டு. ஈ எச்சமிடுவதிலிருந்து அது உண்டாவதால் அதற்கு அப்பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது பயிர் செய்யும் விதத்தைப்பற்றி "கிருஷிகனில்" ஒரு நிருபர் ஒரு குறிப்பு எழுதியிருக்கிறார்.

ஒரு கஜநீள அகலமுள்ள நிலத்தை நன்றாகக்கொத்தி புழுதியாக்கி சுற்றிலும் கரை கட்டிய பாத்திக்குள் மடித்துப்போன வைக்கோலை இடைவிடாமல் பரப்பி கருப்புக்கட்டியை ஜலத்தில் தேன்போல் கரைத்து வைக்கோலின் பேரில் ஈக்கள் வந்து மொய்க்கக்கூடிய பதத்துக்குத் தெளித்துவைத்திருந்தால் தித்திப்பை அருந்துவதற்காக ஈக்கள் ஏராளமாய் வந்து மொய்த்து கருப்புக்கட்டிப பானகத்தை அருந்தி அதில் எச்சமிட்டுப்போகும். மறுநாள் அவ்வெச்சத்தின் பேரில் மடித்த சாம்பல் எருவை உலர்த்தி வைத்திருந்து பாத்திமுழுமையும் $\frac{1}{2}$ அங்குலம் தூவி மறுநாள் அப்பாத்தியின்பேரில் தெளித்த எரு மண் ஒதுங்காமல் ஜலம் நன்றாய்ச் சுவரும்படி தெளிக்கவும். பிறகு தினம் ஒரு முறையாய் ஒரு வாரத்துக்குத் தெளிக்கவும். பாத்தியில் மடித்த வைக்கோலைப் பரப்புவதைவிட மடித்த சணல் சாக்கைப் பாத்தியின் அகலத்துக்கு விரித்து அதன்பேரில் அந்தப் பாகைத் தெளிப்பது நல்லது. கையினால் ஜலத்தைத் தெளிப்பதற்குப் பதிலாக பூச்செடிகளுக்குத் தண்ணீர் வார்க்கும் வாளியால் ஜலம் கொஞ்சம் நிற்கும்படி தண்ணீர் விடுவது மேல். மேல்கண்ட

விதம் செய்து பார்த்தால் ஈ எச்சமிட்டான் என்கிற பொதிஞக்கீரை பயிராகும்.

## CATTLE DISEASES.

### கால் நடைகளின் நோய்கள்.

கால் நடைகளுக்கு வரும் வ்யாதிகளில் சிலவற்றை ஸுலபமாய் ஸ்வஸ்தப்படுத்த சில வைத்ய முறைகளை 'சுதேசமித்ர'னில் ஒரு நிரு பர் குறிப்பிட்டிருக்கிருர். கால் நடைகளுக்கு இருமலும், வயிற்றுளைச்சலும், மேலெல்லாம் ஓர்விதத் தடிப்பும் கண்டால் துளசி இலை, வேளை இலை, தும்பை இலை, வேப்பிலை இவை களின் சாறு ஒவ்வொன்றிலும் இரண்டு அவு ன்ஸ் எடுத்து, அதில் இரண்டு அவுன்ஸ் வசம் பும், அரைஅவுன்ஸ் பெருங்காயமும் வெள்ளைப் பூண்டும் நன்ருக அறைத்துக்கலக்கி 4-மணி நேரத்திற் கொருதடவைக் கொடுத்து வரவும். வயிற்றுளைச்சலில்லா விட்டால் வசம்பிற்குப் பதிலாக சிவதை வேர் அல்லது ஜாலப்பு சேர் த்துக் கொள்ளவும். வயிறு க்ரமமாய்ப் போகு மாஞல், சிவதை வேரை நிறுத்திவிடவும். பாம்பு, ஜல மண்டலி முதலிய விஷஜந்துக்கள் தீண்டி தேகத்தில் தடிப்புக் கண்டால், உடனே தும்பைச்சாற்றில் 4 அவுன்ஸும், நல்லெண் ணெய் 4 அன்வுஸும், வாழைச்சாறு 4 அவு ன்ஸும் கலந்து ஒரு மணிக்கொருதடவைக் கொடுத்து வந்தால் உடனே குணமுண்டா கும்.

## ELECTRICITY AND THE GROWTH OF ANIMALS.

### மின்ஸாரமும், ப்ராணிகளின் வளர்ச்சியும்.

மின்ஸாரம் உபயோகப்படுத்திஞல் செடி, கொடிகள், ப்ராணிகள் ஆகிய இவைகளின் வளர்ச்சிக்கு எம்மட்டில் ஸாதகம் ஏற்படும் என்பதைப்பற்றி இங்க்லண்டில் சில காலமாக பரீக்ஷைகள் செய்து வருகிருர்கள். இங்க்லாந் தின் தென் பாகத்தில் ஒரு ஊரில் கோழிகள், வாத்துகள் ஆகிய இவைகளை வளர்க்கும் பெரி யபண்ணை ஒன்று இருக்கிறது. அந்தப்பண்ணை யில் 800 கோழிக்குஞ்சுகளை வெகு சீக்ரம் பெரியவையாய் வளரும்படி ஆகாராதிகள் கொடுத்து வளர்த்தார்கள். அவைகளில் 400 குஞ்சுகளை மின்ஸாரமுறையை உபயோகித்து வளர்த்தார்கள். மற்றவைகள் மேலே சொன்ன முறைப்படி ஆகாராதிகள் கொடுத்து வளர்க் கப்பட்டன. மின்ஸார முறையில் வளர்க்கப் பட்டவைகள் 5-வாரத்தில் விற்பனைக்கு தயா ராகும்படி பெரியன வாகிவிட்டன. மின்ஸார மில்லாத முறையில் வளர்க்கப்பட்டவைகளில் கிட்டத்தட்ட பாதி இறந்து போய்விட்டன பாக்கி உயிரோடிருந்தவைகள் மூன்று மா[illegible] கழித்து விற்பனைக்கேற்ற பருமனடை[illegible] மின்ஸாரத்தின் உபயோகம் நாளுக்[illegible] அதிகரித்துக்கொண்டே வருகிறது.

## PLANTING LIME SEEDLIN[illegible]

### எலுமிச்சங்கன்று நடுதல்.

எலுமிச்சையானது பயிரிடும் மு[illegible] தகுந்தபடி பலன் கொடுக்கக் கூடியது[illegible] மிச்சை நடுவதற்கேற்ற நிலம் மேட்டுத்[illegible] யாயிருக்கவேண்டும். அரை கஜ நீளம் அக[illegible] ஆழமுள்ளதாய்க் குழிதோண்டி, அதில்தொழு வத்தெரு, குப்பை, கூளம், முதலியவைகளையும் சாம்பலையும் போட்டு ஆடுமாடு அடைக்கப் படுமிடங்களிலுள்ள ஊத்தை மணலால் மூடி அதன்மேல் செம்மண் போட்டுப் பரப்பி அதன்மேல் ஆட்டுப்புழுக்கை எருவை மண் ணுடன் கலந்து நிலமட்டம் வரையில் கொட்டி மூடவேண்டும். எலுமிச்சங்கன்றை பள்ளத் தின் நடுவில் நடவேண்டும். கன்று தழைக் கும் வரையில் காலை மாலை இரண்டு வேளையும் தவருமல் தண்ணீர் பாய்ச்சி வரவேண்டும்.

## ODOURLESS ONION.

### நாற்றமில்லாத வெங்காயம்.

அநேகருக்கு வெங்காயம் சாப்பிட ப்ரிய மிருந்த போதிலும் அதில் நாற்றமிருப்பது ஒரு பெருந்தடையாக இருக்கிறது. அந்தக் கஷ்டம் இல்லாமலிருக்கும்படி ஒரு அமெரிக்க நிபுணர் கெட்ட நாற்றமில்லாத வெங்கா யம் புதிதாய் உற்பத்தி செய்திருக்கிருராம்.

# Co-operative World.

# கோவாபரேஷன் பகுதி.

## CO-OPERATIVE PROGRESS IN MADRAS.

### சென்னையில் கோவாபரேஷனின் முன்னேற்றம்.

சென்ற மாஸம் சென்னையில் கோவாபரேஷனின் முன்னேற்றத்தைப்பற்றி எழுதிய போது திவான் பகதூர் ராஜகோபாலாசார் யாருடைய அபிப்ராயங்களைத் தெரிவித்தோம். இந்தமாஸம் தற்போது கோவாபரெடிவ் ஸொஸைடிகளின் ரெஜிஸட்ராராயிருக்கும் திவான் பகதூர் எல்.டி. ஸ்வாமிக்கண்ணுப் பிள்ளையின் அபிப்ராயங்களையும் அனுபவங்களைப்பற்றி எழுதுவோம்.

1912ஹு ஜுன்மீ 30தேதியோடு முடிந்த வருஷத்தின் ரிபோர்ட்டில் அவர் தமது அபிப்ராயங்களையும் அனுபவங்களையும் தெரிவித்திருக்கிறார். அவைகளில் பின் வரும் விஷயங்களைப்பற்றிய அபிப்ராயங்களைக் குறிப்பிடுகிறோம். (1) புது ஸங்கங்கள் ஸ்தாபித்தல். (2) ஸங்கங்களுக்குப் பண உதவி. (3) புது இன்ஸ்பெக்டர்கள் ஏற்படுத்துவது. (4) சில ஸங்கங்களில் காணப்படும் குற்றங்குறைகள்.

(1) ராஜதானி முழுவதிலும், முக்யமாய் அதிக ஸங்கங்கள் இருக்கும் ஜில்லாக்களில், ஜனங்கள் இன்னம் அதிகமாக நாணய ஸங்கங்கள் ஸ்தாபிக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அன்லிமிடெட் லையபிலிட்டி, அதாவது பொறுப்பு வரையறுக்கப்படாத, ஸங்கங்களே ஸ்தாபிக்க வேண்டுமென்று சட்டமிருப்பது தெரிந்திருந்தும், அதற்காக பயப்படாமலே ஸங்கங்கள் ஸ்தாபிக்கவேண்டு மென்று ஜனங்கள்கேட்கிறார்கள். பொறுப்பு வரையறுக்கப்பட்டுப்போனால் வெளியிலிருந்து கடன் கிடைப்பது கஷ்டமென்பதை யவர்கள் அறிந்திருக்கிறார்கள் என்று எழுதியிருக்கிறார். இது கோவாபரேஷனில் ஜனங்களுக்கு உள்ள ஊக்கத்தைக் காட்டுகிறது. இது நல்ல குறியே ஆகும்.

(2) முன்போல் ஐக்யநாணயஸங்கங்களுக்கு கவர்ன்மெண்டார் பண உதவி செய்வதில்லை. ஆனால் ஐக்ய நாணய ஸங்கங்களின் கணக்குகளைத் தணிக்கை மாத்ரம் செய்து வருகிறார்கள். இப்படி கவர்ன்மெண்டார் தணிக்கையிருப்பதால் பணம் உள்ளவர்கள் ஐக்யநாணய ஸங்கங்களுக்கு தாராளமாய்ப் பண உதவி செய்து வருகிறார்கள் என்கிறார். இப்படிச் சொல்வதால் ஸங்கங்களை கவர்ன்மெண்ட் தணிக்கை செய்வது நின்றுவிட்டால், வெளியிலிருந்து பணம் வருவது நின்று போகுமா? நின்று போகுமென்றால் கோவாபரேஷன் முயற்சி இன்னம் வேரூன்றி விட்டதென்று சொல்வதற்கில்லை.

(3) ஜனங்களுக்குள் ஐக்ய பத்யத்தின் கொள்கைகளைப் பரவச்செய்யவும், ஸங்கங்களை மேம்பார்வை செய்து கணக்குகளைத் தணிக்கைசெய்யவும், இப்போது நியமிக்கப்பட்டிருக்கும் இன்ஸ்பெக்டர்களின் தொகை ஸங்கங்கள் அதிகமானால் போதாமல் போய் விடும். ஸங்கங்களின் லாபத்தில் ஒருபாகத்தை புது இன்ஸ்பெக்டர்கள் நியமிப்பதற்கு என்று எடுத்து வைத்துவிட்டால் புது ஸங்கங்களை ரெஜிஸ்டர் செய்து அவைகளை மேம்பார்வை பார்க்க புதியதாக இன்ஸ்பெக்டர்களை நியமித்து விடலாம். சிலர் கவர்ன்மெண்டாரே தங்கள் ஸொந்தச் செலவில் இன்ஸ்பெக்டர்கள் நியமித்து ஸங்கங்களை மேம்பார்வை பார்த்து வரவேண்டும் என்கிறார்கள். ஆனால்

அந்தச்செலவை ஸங்கங்கள் பொறுத்துக் கொள்ளவேண்டியதே ந்யாயமாகும்.

(4) சில இடங்களில் ஸங்கங்களின் அமைப்பு குறைவுள்ளதாகவும், ஸங்கங்களின் நிர்வாகம் ஒழுங்கீனமாயு மிருக்கின்றன வென்று தெரியவருகிறது. சில விடங்களில் மோசமும் நடந்து வருகிறதோ என்று ஸந்தேகிக்கவும் இடமிருக்கிறது. இந்த ஒழுங்கீனங்களில் முக்யமானவைகளை ஒன்பது பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. கைரொக்கம் அதிகமாயிருப்பது:—ஒரு ஸங்கமும் கையில் பணம் அதிகமாய் வைத்திருக்கவேண்டியதற்கு ந்யாயமில்லை. பணத்தை ஒன்று ஸெண்ட்ரல் பாங்கிக்கு அனுப்பிவிடவேண்டும், அல்லது மெம்பர்களுக்குக் கடனாகக் கொடுத்துவிட வேண்டும். பணம் வைத்துக்கொண்டிருப்பவர் வஸூலான பணத்தை ஸரியானபடி செலவழிக்காமல் ஸொந்தத்துக்கு உபயோகப்படுத்தி விட்டால் அப்போது கணக்கில் கையில் ரொக்கம் இவ்வளவென்று எழுதி வைத்து விடுகிறார். இன்ஸ்பெக்ஷன் வரும் வரையில் இப்படி எழுதி வைப்பதால் யாதொரு கெடுதியும் இல்லை. இன்ஸ்பெக்ஷன் காலத்திலோ செலவழித்த பணத்தை யாரிடமிருந்தாவது வாங்கி இன்ஸ்பெக்டரிடத்தில் கையில் மிச்சமாயுள்ள ரொக்கம் இவ்வளவு என்று காட்டி தப்பித்துக்கொள்ளலாம்.

2. மற்ற மெம்பர்களைவிட, பஞ்சாயத்தார்கள்தான் அதிக கடன் எல்லாருக்கு முன்னால் பெற பாத்யமுள்ளவர்கள் என்று அநேக ஸங்கங்கள் எண்ணி வருகின்றன. ஒரு ஸங்கத்தைப் புதிதாய் ஸ்தாபித்து அதில் சேரும்படி பஞ்சாயத்தார்களைத் தூண்ட அவர்களுக்கு இந்த ஸௌகர்யம் முதலில் செய்யவேண்டியிருந்திருக்கலாமென்றாலும், இப்பொழுது அவர்கள் பணத்தில் பெரும்பாகத்தை தாங்களே கடனாக அடையும்படி விடுவது கூடாது.

(3) பினாமி கடன்கள்.—சில ஸங்கங்களில் ப்ரெஸிடெண்டும் ஸெக்ரெடரியும் தங்களுக்கு பைலா ப்ரகாரம் கிடைக்கவேண்டிய தொகைக்குமேல் அதிகமாகக் கடன் வேண்டியிருந்தால், மற்ற மெம்பர்கள் தங்களை பக்ஷபாரமுள்ளவர்கள் என்று சொல்லாமலிருக்கும் பொருட்டு தங்களுடைய ஸ்நேகிதர்களுக்கு பினாமி அதாவது பேர் இரவலாகக்கடன் கொடுத்து அந்தக் கடனை இவர்கள் தங்கள் உபயோகத்துக்கு வைத்துக் கொள்வதுண்டு.

(4) ரசீது கொடுக்க மறுப்பது:—ரயத்துகள் வெகுவாய் ரசீது விஷயத்தில் அச்ரத்தையாயிருக்கிறார்கள். ரசீது கேட்பது மில்லை; கேட்டு வாங்கிக் கொண்டாலும் அதை பத்ரமாய் வைத்துக்கொள்வது மில்லை. ப்ரெஸிடெண்ட் அல்லது ஸெக்ரெடரி கொடுத்த பணத்துக்கு ரசீது கொடுக்காமல், பணத்தை தமது ஸொந்தத்துக்கு உபயோகப்படுத்திக் கொள்ளலாம். ரசீது இல்லாததால் கடன் வாங்கினவன் பணம் செலுத்தினதை ரூபிக்க முடியாமல் போகிறது.

5 நபர் ஜாமீன்:—கோவாபரேடிவ் டிபார்ட்மெண்டின் விப்பந்திகள் ஸங்கங்கள் ஸ்தாவர ஸொத்து ஈட்டின்மேல் கொடுப்பதற்கு பதிலாக நபர் ஜாமீன்பேரில் கடன் கொடுக்கும்படி தூண்டிவருகிறார்கள். ஆனால் ஜாமீனாக நிற்கும் ஒரு நபர் எத்தனை ரூபாய் வரையில் ஜாமீனுக்கு நிற்கலாம் என்பதைப்பற்றி யாதொரு பைலாவும் பழைய ஸங்கங்களில் ஏற்படவில்லை. சில இடங்களில் 500ரூபாய் ஆஸ்தி கூட இல்லாத ஒருவர் ஆயிரம் ரூபாய் வரையில் பலபேருக்கு ஜாமீனாக இருந்திக்கிறார் என்று தெரியவருகிறது. சில ஸமயங்களில் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் ஒருவருக்கொருவர் ஜாமீனாக இருந்ததாக, பத்ரங்களில் அவர்களு

டைய விரலடையாள மாத்ரம் காட்டி பொய்ப் பத்ரங்கள் ஜோடித்து விடுவதுண்டு. ஒரு ஸங்கத்தின் ஸெக்ரடெரியாவது ப்ரெஸிடெண்டாவதுகையில் அதிகபணம் வைத்திருந்து அதில் ஒரு பாகத்தை தற்போதைக்கு ஸொந்தத்துக்கு உபயோகித்துக் கொண்டால் அப்படிய திகபணம் கையிருப்பாக இருக்கிறதென் பதைக் காட்டாமலிருக்கும்படி இப்படிச்செய்து விடலாம்.

(6) பணம் வஸூலிப்பதில் கண்டிப்பு இல்லாமை:—ஸங்கத்திலிருந்து ரொம்பப்பணம் கடன் வாங்கி அதைத்திருப்பிச்செலுத்தத்தாமஸிக்கும் பஞ்சாயத்தார்கள் பிறரிடமிருந்து கடனை வஸூல் செய்வதில் ஸகஜமாகவே கண்டிப்பாயிருப்பதில்லை. பெரிய கடன்கள் கொடுபடாமல் இருப்பதை மறைப்பதற்காக சிறு கடன்களை வஸூலிப்பதில் கண்டிப்பாயிருப்பதும் உண்டு. ஸெண்ட்ரல் பாங்கிக்குக் கொடுக்கவேண்டிய கடனில் 10-ல் ஒரு பாகத்தைச் செலுத்தி அந்த ஸெண்ட்ரல் பாங்கியிலிருந்து இன்னம் கடன் பெறுவதற்காக ஸ்வல்பத் தொகை கடனாக வாங்கி யிருப்பவர்களை கடனைத்திருப்பி விடும்படி தூண்டி விடுவதும் உண்டு. சில ஸங்கங்கள் நிலுவையான தொகைகளை வஸூலிப்பதில் கண்டிப்பே யில்லாமலிருக்கின்றன. அவைகள் திருந்தாவிட்டால் அவைகளைக் கலைத்து விடுவதுதான் ஸரியான வழியாகும்.

(7) மெம்பர்களுடைய கடன்களைப் புதுப்பித்தல்:—சில ஸமயங்களில் கடனைத் திருப்பிக்கொடுக்கத் தாமஸிக்கும் ஒரு மெம்பரை அவருடைய கடனை வஸூலித்து விட்டது போல் கணக்கில் சாட்டி, புதியதாய் கடன் பத்ரம் எழுதிக்கொடுக்கும்படி கேட்பதுண்டு. இப்படிச் செய்வதில் ரொம்ப ஆபத்து நேரிட இடமுண்டு. இதைத் தடுப்பதற்காகப் புதிதாக கடன் ரெஜிஸ்டர் என்று ஒரு ரெஜிஸ்டர் வைத்து வரும்படி ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. கடன் வாங்கும் மெம்பரும், ஜாமீன் கொடுக்கும் மெம்பரும் ஸங்கங்களில் கடன் வாங்குவதைப்பற்றியும், ஜாமீன் நிற்பதைப்பற்றியும், எல்லா விவரங்களும் அதில் அடங்கி யிருக்கும். இதனால் ஒரு மெம்பர் தமது சக்திக்கு மீறி கடன் வாங்கி விட்டாரா என்பதும், அதிக தொகைக்கு ஜாமீனாக இருந்திருக்கிறாரா என்பதும், பணம் செலுத்தினதை ஸரியாக வரவு வைத்திருக்கிறதா என்பதும், ரெஜிஸ்டரைப்பார்த்த மாத்ரத்திலேயே விளங்கும்.

(8) ஸங்கங்களுடைய கடன்களைப் புதுப்பித்தல்:—ஒரு ஸங்கம் ஸெண்ட்ரல் அல்லது ஜில்லா பாங்கிக்கு செலுத்தவேண்டிய பணத்தைச்செலுத்தக் கையில் பணமில்லாவிட்டால் அந்த ஸங்கமானது மறுபடியும் இரண்டாந் தடவை அல்லது மூன்றாந் தடவையாக புதிய தாய்க் கடன் வாங்கி ஸெண்ட்ரல் பாங்கி அல்லது ஜில்லாபாங்கிக்கு கொடுக்க வேண்டிய கடனைக்கொடுப்பது முண்டு. ஒரு ஸங்கம் மெம்பர்களிடமிருந்து கடனைவஸூல் செய்து கிடைத்த பணத்தைக்கொண்டு ஸெண்ட்ரல் அல்லது டிஸ்ட்ரிக்ட் பாங்கிக்குச் சேர வேண்டிய கடனைத்திருப்பிச் செலுத்தாவிட்டாலும், ஸெண்ட்ரல் பாங்கிக்கு பணம் செலுத்தவேண்டியிருக்க, அதற்குச் செலுத்தாமல் மெம்பர்களுக்கு புதியதாகக்கடன் கொடுத்துவிட்டாலும், அப்படிச்செய்வதுஸரியல்ல. ஸெண்ட்ரல் பாங்கியினிடமிருந்து கடன் கேட்கும் ஸங்கங்கள் மெம்பர்களுக்குக் கடன்கள் தேவையாயிருப்பதால்தான் பணம் வேண்டியிருக்கிறதென்று சொல்வதுண்டு. ஆனால் கடனுக்கு சிபார்சு செய்யும் ஆபிஸர் ஸெண்ட்ரல் பாங்கி கொடுத்தப்பணத்தை ஸங்கங்கள் ஸரியாக உபயோகித்திருக்கின்றன வென்று எப்போதும் கண்டுபிடிப்பதற்கு முடிவதில்லை, இந்தக் குறைகளை

நிவர்த்திக்க அடிக்கடி ஸங்கங்களின் நடவடிக்கைகளை பரிசோதிக்க வேண்டியது அவச்யமாகும்.

(9) ஒரே மெம்பர் ஸங்கத்தின் கார்யங்களையெல்லாம் பார்த்து வருவது:—எல்லா ஸங்கங்களிலும் பஞ்சாயத்து இருந்தபோதிலும் சில விடங்களில் ஸங்கங்களின் நடவடிக்கைகளில் பஞ்சாயத்து மெம்பர்கள் எல்லாரும் கலந்து கொள்வதாகத் தெரிவதில்லை. ஒரே மனிதர் ஸங்கத்தின் அலுவல்களையெல்லாம் கவனித்து வந்து கணக்குகள் எழுதிவைத்தல், பணத்தைக் கையில் வைத்துக்கொள்ளுதல், பஞ்சாயத்து, பொது ஸபை ஆகிய இவைகளின் தீர்மானங்களைக் குறிப்பிட்டு வைத்தல், கடன் ஸாங்க்ஷன் செய்தல் வஸூலித்தல் முதலியவைகளை யெல்லாம் தாமே செய்து வந்து, அவர் நாணயக் குறைவுள்ளவராகவும் இருந்துவிட்டால், மேலே சொன்ன ஒழுங்கீனங்களெல்லாம் ஸங்கத்தில் நடந்து வரக்கூடும். இவரைத்தவிர மற்ற எவருக்கும் ஸங்கத்தின் நடவடிக்கைகள் தெரியாவாகையால் இந்த ஒழுங்கீனங்களைக் கண்டுபிடிப்பதும் கஷ்டம். க்ராமவாஸிகளுக்கு எழுதப்படிக்கத் தெரியாமலிருப்பது இந்தக் குறைகளுக்கு ஒரு காரணமாகும். ஆனால் எழுதப்படிக்கத் தெரியாத ஜனங்களுள்ள க்ராமங்களில், வெகுவாய் கள்ளர் ப்ரதேசங்களில், மெம்பர்கள் தங்களுடைய ஸங்கங்களின் நடவடிக்கைகளைப் பற்றி கவனிப்பதில் ரொம்ப கருத்துள்ளவர்களாயிருக்கிறார்கள். எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் உள்ள சில க்ராமங்களிலோ மெம்பர் ஒருவர் மாத்ரம் ஸங்கத்தின் நடவடிக்கைகளை கவனித்து வரும்படி விட்டு விட்டு சும்மா இருப்பது முண்டு.

மேலே குறித்தவைகள் ஸங்கங்களில் காணப்பட்ட ஒழுங்கீனங்களில் முக்யமானவைகளாகும். சில இடங்களில் ஸங்கங்களே இவைகளை கவனிக்கத் தொடங்கி குற்றம் செய்தவர்களை ப்ராஸிக்யூட் செய்யவோ, அல்லது ஸிவில் வ்யாஜ்யம் செய்யவோ முன்வந்திருக்கின்றன. ஆனால் குற்றவாளி கணக்குகளை ஸரியாய் ஜோடித்து வைத்திருந்தால் அவருடைய குற்றத்தை ரூபிக்க போதுமான ருஜு எப்போதும் கிடைப்பது கஷ்டம். இப்படிக் கணக்கு ஜோடித்து வைத்திருக்கும் கேஸ்களில் ஸங்கங்கள் பைலாவில் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரப்படி அப்படிப்பட்டவர்களை வேலையிலிருந்து தள்ளிவிடுவதுமுண்டு.

ஆனால் நல்லவேளையாய் இந்தக் குறைகள் சில இடங்களில்தான் காணப்படுகின்றன. இவைகள் நேரிடாதபடி இப்போதே தடுக்காவிட்டால் இவைகள் ரொம்பப் பரவக்கூடும். இவைகளைத் தடுப்பது இன்ஸ்பெக்ஷனால் தான் முடியும். இப்படி இன்ஸ்பெக்ஷன் செய்யவேண்டியதாகிய சீர்திருத்தம் மற்றெல்லாத் திருத்தங்களையும்விட ரொம்பசீக்ரம் செய்யவேண்டியதாயிருக்கிறது. இதற்கு ஜில்லா யூனியன்கள் ஸ்தாபிப்பதும் ஸங்கங்களை ஒன்று சேர்த்து ஸ்தல யூனியன்கள் ஸ்தாபிப்பதும் நல்லது.

## A CO-OPERATIVE MEETING AT MAMUNDUR.

மாமுண்டூரில் ஒரு கோவாபரேடிவ் மீட்டிங்.

செங்கல்பட்டு ஜில்லாவிலுள்ள மாமுண்டூரில் ஸமீபத்தில் கோவாபரேடிவ் ஸங்கங்களுடைய மீட்டிங் ஒன்று நடைபெற்றது. மாமுண்டூரைச் சுற்றியுள்ள 17-ஸங்கங்களில் 12-ஸங்கங்களிலிருந்து மெம்பர்கள் வந்திருந்தார்கள். அப்போது செங்கல்பட்டில் கோவாபரேடிவ் ஸங்கங்களின் இன்ஸ்பெக்டராகிய மிஸ்டர் டி. கிருஷ்ணஸ்வாமி அந்த ஸங்கங்களைப்பற்றிய ரிபோர்ட்டை வாசித்து, தாம் ஸங்கங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்தபோது கண்ட தவறுதல்களையும் அவைகளை இனிமேல் ஸரிப்படுத்துவதற்கு வழிகளையும் எடுத்துச்சொன்னார். ஸங்கங்கள் கோவாபரேடிவ் கொள்கைகளுக்கு கொஞ்சங்கூட மாறுபடாமல் ஒழுங்காய் நடந்து வந்தாலொழிய விவஸாயிகள் எப்போதும் கடனாளியாக இருக்கவேண்டிவரும் என்றும் சொன்னார்.


# The Commercial World

## வ்யாபாரப்பகுதி.

### PACKING AND TRANSPORT OF FRUIT.

பழங்களைக்கட்டி வெளியூர்களுக்கு அனுப்புவது.

சென்றமாஸம் பழங்களைப் பறிப்பதிலும், கட்டியனுப்புவதிலும் உள்ள குறைகளைப்பற்றி எழுதியிருந்தோம். விவஸாய டிபார்ட்மெண்டார் அந்தக்குறைகளை நிவர்த்திக்க முதலில் ப்யூஸாவில் 1908-1909-ம் வருஷங்களில் பரீக்ஷைகள் செய்து பார்த்தார்கள். பீச்பழம் போன்ற சீக்ரம் நசுங்கிப்போகக்கூடிய பழங்களை வெளியூர்களுக்குப் பாக்செய்து அனுப்ப ஒரு தகுந்த கூடை தயார் செய்தார்கள். இதில் பழங்கள் போட்டு அனுப்பினதில் 72-மணி நேரம் ரயில்மார்க்கத்தில் போயும் பழங்கள் கெடாமலிருந்தனவாம். அந்தக் கூடையின் ஏற்பாடு பின்வருமாறு. இதைப்படத்தில் விவரமாய்க் கண்டு கொள்ளலாம்.



பழங்களை வைத்தனுப்பும் கூடை.

மூங்கில் சிம்புகளால் வட்டமானதும் அடியில் தட்டையானதும் $5\frac{1}{2}$ அங்குலம் உயரமுள்ளதுமான ஒரு கூடை செய்துகொள்ளவேண்டும். படத்தில் காட்டியபடி சிறு கிண்ணம் போன்ற பெட்டிகள் மூங்கில் சிம்பால் செய்யவேண்டும். இந்தக்கிண்ணங்களை கூடையில் இரண்டடுக்காக ஒன்றன்மேல் ஒன்றாக வைக்கவேண்டியிருக்கும். இரண்டடுக்குக்கும் நடுவில் தட்டையான ஒரு மூங்கில் சிம்பால் நெருக்கமாயில்லாமல் பின்னப்பட்ட தட்டு ஒன்றை வைத்துவிட்டால், மேலேயிருக்கும் கிண்ணங்கள் கீழேயிருக்கும் கிண்ணங்களையும் அவைகளிலுள்ள பழங்களையும் அழுத்தாமல் இருக்கும். கூடையின் மேலே மூடியைப்போட்டு கம்பிகளால் நன்றாய்க் கட்டிவிட வேண்டும். ஒவ்வொரு கிண்ணத்திலும் ஒரு பழத்துக்குமேல் வைக்கக்கூடாது. படத்தில் காட்டிய கூடை 25-பீச்பழங்கள் வைப்பதற்கென்று செய்யப்பட்டது. இந்தக்கூடை ஒவ்வொன்றும் 4-அணுவுக்குச் செய்து கொடுக்கப்பட்டது. மொத்தமாய் செய்துகொடுக்கச் சொன்னால் விலை ரொம்பக்குறையலாம்.

பழத்தைப் பறிப்பதற்குத் தகுந்த வேளை காலைநேரமேயாகும். சணல்நார் அடியில்போட்டுள்ள கூடைகளிலும் தட்டுகளிலும் பறிப்பது தான் நல்லது. ஆனால் ஒரு பழத்தின் மேல் இன்னொரு பழம் இருக்கும்படி பறித்துவைக்கக்கூடாது. இப்படி சேகரித்த பழங்களை ஒரு

மேஜைமேல் சணல் நாரைப்பரப்பி அதன்மேல் கோணித்துண்டை விரித்து, அதில் பழங்களை வைத்துகொள்ளவேண்டும். பிறகு, ஒவ்வொரு பழமாய் எடுத்துமெல்லிய நீல நிறமான கடுதாசியில் சுற்றி, கிண்ணத்திலிருக்கும்போது அது அசங்காமலிருப்பதற்காக கடுதாசியின் மேல் வேண்டிய அளவு சணல் நாரைச்சுற்றி கிண்ணத்தில் வைத்துவிடவேண்டும். பழத்திலிருந்து வரும் ஈரத்தைக்கடுதாசியும், சணப்பம் நாரும் க்ரகித்துக்கொள்ளுகின்றன. சணப்பம் நாருக்கு பதிலாக பருத்தியையும், மற்ற நார்களையும் உபயோகித்துப் பார்த்ததில் அவைகள் த்ருப்திகரமாயில்லை. இப்படிப்பாக் செய்து ஸிம்லாவுக்கு அனுப்பினதில் பழங்கள் 3-நாள் ரெயில்வழியாய்ப் போயும் அவைகள் கெடாமல் நல்ல நிலைமையில் இருந்தன. இந்த முறையானது ரொம்ப ஸுலபமானதும் அதிக செலவில்லாததுமாயிருப்பதால் இதை யாவரும் அனுஷ்டித்துப் பார்க்கலாம்.

பழங்களைப் பறிப்பதிலும் அவைகளைப் "பாக்" செய்வதிலுந்தான் ரொம்ப கவனம் செலுத்தவேண்டும். ஸாதாரண வேலையாட்களை ஸரிவரப் பழங்களைப் பறித்து "பாக்" செய்யும்படி பழக்குவதில் தான் ரொம்ப ச்ரமம் ஏற்படும். வேலையாட்கள் காய்வெட்டாயிருக்கும் போதே பழத்தைப் பறித்து விடுவது வழக்கம். இதைத்தான் ஜாக்ரதையாகப் பார்த்துக்கொள்ளவேண்டும்.

த்ராக்ஷைப்பழம் அனுப்புவதற்கென்று ஒரு முறையனுஸரித்துப்பார்த்தார்கள். மரத்தினால் செய்த சிறிய பெட்டிகள் உபயோகிக்கப்பட்டன. த்ராக்ஷைப்பழக்குலைகளைப் பறித்து, காம்பு வாடும்படி சிறிது நேரம் பொறுத்திருந்து, பிறகு குலைகளை மெல்லிய கடுதாசியில் சுற்றி பெட்டியில் சணப்பம் நாரைப்போட்டு அவைகளை அதில் வைத்து, குலைகள் ஆடாமலிருக்கும்படிக்கு வேண்டிய அளவு சணப்பம் நாரை பெட்டியில் ஜாக்ரதையாக அடைக்க வேண்டும். பெட்டிகள் ரொம்ப லேசான மெல்லிய மரப்பலகையால் செய்யப்பட்டவை. 15 அங்குலம் நீளம், 7 அங்குலம் அகலம், $4\frac{3}{4}$ அங்குலம் உயரமுள்ள ஒரு பெட்டி 50 தோலா நிறையுள்ளதாக இருந்தது. மேலே சொல்லியமுறை ரொம்ப உபயோகமுள்ளதென்று தெரியவருகிறது.

பழம் கட்டியனுப்புவது ஸம்பந்தமான மற்ற ஸாதனங்களைப்பற்றி இன்னொரு ஸஞ்சிகையில் குறிப்பிடுவோம்.

## PRICES OF SHARES.

### பங்குகளின் விலைகள்.

கம்பெனிகளின் பங்குகளை விற்பவர் பெறும் விலையும் வாங்குபவர் கொடுக்கும் விலையும் ஒரே தொகையாக இருப்பதில்லை. அதாவது, ஒரு பங்கின் மதிப்பு 50 ரூபாயாக இருந்து பிற்பாடு அதை விற்கும்போது 52-ரூபாயாக விற்றால் அதை வாங்குகிறவர் 52-ரூபாய் கொடுத்துப் பெற்றுக்கொள்ள முடியாது. 53 அல்லது $53\frac{1}{2}$ரூபாய் கொடுக்கவேண்டியிருக்கும். அல்லது பங்கின் மதிப்புக்குறைந்து போய் 51 ரூபாய் அல்லது $50\frac{1}{2}$ ரூபாயும் கொடுத்துவாங்குவார். இப்படி வாங்கும் விலையும் விற்கும் விலையும் வித்யாஸப்படுவதற்குக் காரணம் பின்வருமாறு:—கம்பெனியில் ஷேர் வாங்குகிறவர்கள் முதலில் சிறிய தொகை கொடுத்து வாங்கினாலும், அந்தக்கம்பெனிக்கு அதிக லாபம் கிடைக்குமானால் அநேகர் அந்தக் கம்பெனியில் ஷேர் வாங்க விரும்புவதால் ஷேர்களுக்குக்ராக்கி ஏற்பட்டு அவைகளின் விலை அதிகமாகி விடுகிறது. உதாரணமாக, மதராஸ்பாங்கியில் முதலில் ஷேர் ரூ500 ஆக விருந்தது. இப்போது அந்த பாங்கியில் அதிகலாபம் வருகிறதென்று கண்டு பணம் வைத்திருப்பவர்கள் அந்த பாங்கில் ஷேர் வாங்க விரும்பவே ஷ பாங்கியின் ஷேர்

கள் கிட்டதட்ட 1500 ரூபாயாக ஆகிவிட்டது. சிலஸமயங்களில் கம்பெனிகளுக்கு அதிகலாபம் வராமல் போயோ, அல்லது வேறு காரணங்களினுலோ, அந்தக் கம்பெனிகளில் ஜனங்கள் பங்குவாங்க ரொம்ப ஆவல் கொள்ளாவிட்டால் விலை மட்டுப்பட்டுப்போய் விடக்கூடும். பங்கு 100-ரூபாயாக முதலில் விற்றது 85, 90-ரூபாய்க்கும் இறங்கிவிடும்.

நிற்க, கம்பெனிகளில் ஒருவர்க்குள்ள பங்குகள் அவருக்குத் தேவையில்லாது போனுல் அவர் பிறருக்கு விற்க நேரிடுகிறது. ஆனுல் இவர் விற்க எண்ணினவுடனே வாங்குவதற்கு ஒருவர் காத்திருக்கமாட்டார். வாங்க இஷ்டப்படுபவர்களுக்கும் தாம் நினைத்தபோது பங்குகள் கிடைக்கமாட்டா. விற்க இஷ்டப்படுகிறவர்களிடத்தில் பங்குகளை வாங்கி வைத்திருந்து, வாங்க வருகிறவர்களிடத்தில் விற்பதற்காக என்றே 'ஸ்டாக் அண்ட்ஷேர் ப்ரோகர்' என்று சொல்லப்படும் சில வர்த்தகர்கள் இருக்கிருர்கள். இவர்கள் பங்குகளை விலை கொடுத்து வாங்கித்தாம் வைத்துக் கொண்டிருந்து விற்பதற்காக கொஞ்சம் லாபம் வரும்படிக்கு வாங்குகிறவர்களுக்கு விற்று விடுகிருர்கள். இப்படி ஒரு கைமாறுவதற்கு பதிலாக இரண்டு மூன்றுகைமாறினுல் வித்யாஸம் அதிகமாக இருக்கும். உதாரணமாக ஒருவர் தமது பங்கை 150 ரூபாய்க்கு விற்கிருரென்று வைத்துக் கொள்வோம். அதை வாங்கும் தரகுக்காரர் தமக்குக் கொஞ்சம் லாபம் ஏற்படுத்திக்கொண்டு, 155ரூபாய்க்கு விற்பார். வாங்குகிறவர் 155 ரூபாய் கொடுக்கவேண்டும். இரண்டு கைமாறுவதாயிருந்தால் ஒவ்வொருவருக்கும் லாபம் ஏற்படும்படியே விற்கப்படும். ஒருவர் தமதுபங்கை 150 ரூபாய்க்கு விற்று, அது இரண்டு கைமாறினுல் 160, அல்லது 164-ரூபாய்க்கு கடைசியில் விற்கப்படும். முன் சொன்னபடி விலைகள் ஏறியும், குறைந்தும் போகுமாகையால் தரகர்களுக்கு சில ஸமயம் அதிகலாபமும் நஷ்டமும் நேர்ந்தாலும் ஸரிக்கட்டிக் கொள்வதற்காகத்தான் தரகர்கள் விலையைத் தூக்கி விற்கிருர்கள்.

## THE COMMERCIAL CONGRESS.

### வ்யாபார காங்க்ரேஸ்.

இந்தியா முழுவதற்கும் வ்யாபார கைத்தொழில் விஷயங்களைப்பற்றி கவனிப்பதற்காக ஒரு வ்யாபாரகாங்க்ரெஸ் ஸ்தாபிக்கவேண்டும் என்று ஸர் பஸூல் பாய் கரீம்பாய் செய்த ப்ரேரணையைப்பற்றி சென்றமாஸம் குறிப்பிட்டிருந்தோம். பம்பாய் இந்திய வ்யாபாரிகளின் சேம்பர் அண்ட் பீரோ என்னும் ஸங்கத்தின் வருஷாந்த மீட்டிங்கில் ஸர் பஸூல் பாய் கரீம்பாய் வ்யாபார காங்க்ரெஸை ஸ்தாபிப்பதற்கு யாவரும் உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அப்போது அவர் காங்க்ரெஸ் விஷயமாய்ப் பேசினதைக் கீழே சுருக்கி எழுதுகிருேம்.

நமது தேசத்தில் உள்ள மூன்று பெருங்குறைகள் கல்வி, ஸுகாதாரம், கைத்தொழில் அபிவ்ருத்தி ஆகிய இவைகளே. இவைகளில் ஒவ்வொன்றும் மற்றவைகளோடு ஸம்பந்தப்பட்டவைகள். ஜனங்கள் கல்வியறிவுள்ளவர்களாயும் திட சரீரமுள்ளவர்களாயும் இராவிட்டால் கைத்தொழிலில் அதிக அபிவ்ருத்தி ஏற்படுவது முடியாது. கைத்தொழிலில் அபிவ்ருத்தி ஏற்பட்டால்தான் நமது பொருளாதார நிலைமை வ்ருத்தியாகும். பொருளாதார நிலைமை வ்ருத்தியானுல்தான் கல்வி ஸம்பந்த மாகவும் ஸுகாதார ஸம்பந்தமாகவும் வேண்டிய சீர்திருத்தங்கள் செய்யலாம். இவ்லாவிட்டால் முடியாது. தேச அபிவ்ருத்திக்குக் காரணமாயிருப்பது பொருளாதார நிலைமைதான். ஒரு தேசத்தார் ஸம்பத்துடனும் ஸௌக்யத்துடனும் இருப்பது, ராஜாங்கம் எப்படியிருக்கிற தென்பதைப் பொறுத்தது

என்று முன் சொல்லி வந்த அபிப்ராயம் இப்போது மாறிவிட்டது. தேசங்களும், ஜனங்களும் அவர்களுடைய நாகரீகங்களும், உண்டாகி ப்ரபலமாகியிருந்து பின்பு அழிந்து போவதற்குப் பொருளாதார நிலைமைகள் ஸரியாக இராமையே காரணமென்று சரித்ர பூர்வமாய் அறிந்து கண்டு, பொருளாதார சாஸ்த்ரத்தைப்பற்றி பல மேதாவிகள் கவனம் செலுத்திவருகிறார்கள். நாமும் வ்யாபார நோக்கத்துடனே மாத்ரமல்லாமல் தேசாபிமானத்துடனும் நமது தேசத்தின் பொருளாதார விஷயத்தைப்பற்றி கவனிக்க வேண்டும். இதை கவனிக்க ஒரு வ்யாபார காங்க்ரெஸ் அவச்யமென்பது சொல்லாமலே விளங்கும்.

நாம் இப்போது ரொம்பவும் கவனிக்க வேண்டியவைகள் வ்யாபார விஷயங்களும் கைத்தொழில் விஷயங்களுமே. ப்ரிட்டிஷ் ராஜ்யத்தின் மற்ற பாகங்களில் உள்ள ஜனங்கள் காப்பு வரிகள், போக்கு வரத்து மார்க்கங்கள் முதலிய பல வ்யாபார விஷயமாக ஒன்றுகூடி ஆலோசிக்கையில், இந்தியாவில் மாத்ரம் வ்யாபார ஸம்பந்தமாக எல்லாராலும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு ஸங்கமும் ஏற்படாமல் இருப்பது ஸரியல்ல. ப்ரிட்டிஷ் ராஜ்யத்தில் பொருளாதார ஸம்பந்தமான கேள்விகளைத் தீர்ப்பதற்காக ப்ரிட்டிஷார்கள் யோசிக்கும் போது, அவைகள் ஸம்பந்தமாய் இந்தியர்களின் அபிப்ராயம் இன்னதென்பதை ப்ரிட்டிஷ் ராஜ்ய நிர்வாகத்துக்கு அறிவிப்பதற்காக ஒரு வ்யாபார கைத்தொழில் காங்க்ரெஸ் ஏற்படுத்த வேண்டுவது ரொம்பவும் அவச்யமானது. இது விஷயமாய் இந்திய கவர்ன்மெண்டார் ஊக்கத்துடனும், ச்ரத்தையுடனும் பாடுபட்டு வந்தாலும், நமக்குவேண்டியவைகள் இன்னவென்பது நமக்குத்தான் நன்றாய்த் தெரியுமாதலால், நமது அபிப்ராயங்கள் இன்னவென்பதை நாம் நன்றாய் எடுத்துச் சொல்லவேண்டும். அப்போழுதுதான் கவர்ன்மெண்டார் நமது பாத்யதைகள் இன்னவென்பதை ப்ரிட்டிஷ் ராஜாங்க நிர்வாகத்தார்களுக்குத் தகுந்தபடி எடுத்துச் சொல்லுவது ஸாத்யமாகும்-என்றார்.

## BUSINESS ENTERPRISE IN INDIA.

### இந்தியாவில் வ்யாபார ஊக்கம்.

இந்தியாவில் சென்ற ஆகஸ்ட்மாஸம் அடியில்கண்ட விவரப்படி 27-கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன.

| | | |
|---|---|---|
| 5 | பாங்கிகள் | ... 2,59,969 |
| 6 | இன்ஷ்யூரென்ஸ் கம்பெனிகள் | ... 31,60,000 |
| 1 | கப்பல் ஓட்டும் கம்பெனி | ... 10,00,000 |
| 2 | அச்சடித்து ப்ரசுரம் செய்யும் கம்பெனிகள். | ... 80,000 |
| 7 | வ்யாபாரக் கம்பெனிகள், மேலே சொன்னவை தவிர | ... 10,60,000 |
| 1 | பருத்திமில் கம்பெனி | ... 8,00,000 |
| 2 | மில்லுகளும் ப்ரெஸுகளும் மேலே சொன்னது தவிர | ... 70,000 |
| 1 | தேயிலைத் தோட்டக் கம்பெனி. | ... 1,00,000 |
| 2 | சுரங்கக் கம்பெனி. | ... 11,50,000 |
| 27 | ஆக மொத்தம் ரூ. | ... 76,79,969 |

## A SUGAR CANE MILL AT HOSPET.

### ஹோஸ்பேட்டில் ஒரு கரும்பாலை.

பல்லாரி ஜில்லாவில் உள்ள ஹோஸ் பேட்டி னருகிலுள்ள சிட்டவாடிகியில் கவர்ன்மெண்டார் பரீக்ஷார்த்தமாக கரும்பை ஆடி வெல்லம் காய்ச்ச ஒரு ஆலை ஸ்தாபிக்கப்போகிறார்கள். இதற்கு 10,400 ரூபாய் செலவாகும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். இந்த மில்லில் கணக்குகளைஸரியாய் வைத்துவந்து இந்த வேலையால் லாபமா நஷ்டமா என்பதைத் தெரிவிக்கும்படிக்கு கவர்ன்மெண்டார் உத்தரவு செய்திருக்கிறார்கள்.

# The Educational World
# வித்யாவிஷயப் பகுதி

## HOW CAN VILLAGE SCHOOL MASTERS HELP THE GENERAL PUBLIC?

BY
VENUGOPAL NAIDU.

### க்ராமாந்தர உபாத்யாயர்கள் பொது ஜனங்களுக்கு உதவி செய்வதெப்படி?

க்ராமாந்தர உபாத்யாயர்கள் பொது ஜனங்களுக்கு செய்யக்கூடிய உதவிகளை, சிறுவர்களுக்குச் செய்யும் உதவிகள், பெரியவர்களுக்குச் செய்யும் உதவிகள் என இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

முதலாவது, சிறுவர்களுக்கு செய்யும் உதவி: உபாத்யாயர் சிறுவர்களுக்கு, எண்ணல், எழுதல், வாசித்தல் என்னும் கல்வியின் முக்யாம்சங்களை, நவீன போதனா முறைப்படி, போதுமானபடி கற்பித்து, அவர்களை அறிவாளிகளாக ஆக்குவதுடன், போதுமான தேகாப்யாஸங்களால் அரோக திடகாத்ரர்களாகச் செய்வித்து, தாமே ஸன்மார்க்கத்திற்கு ஒரு உதாரணமாய் நின்று, பின் ஸந்ததியாரையேயன்றி, மற்றவர்களையும் ஸன்மார்க்கத்தில் பயிற்றுவது இவருடைய முதல் கடமையாகும்.

இதில் முதலில் சொல்லியது அவர் தினப்படி செய்ய வேண்டிய கடமையாகும். இரண்டாவது சொல்லிய சரீராப்யாஸத்தில், அவருக்கு சற்று அதிக ச்ரமமும் சாதுர்யமும் வேண்டும். ஏனென்றால், பள்ளிக்கூட பாடங்களில் "ட்ரில்" என்பது ஒரு அவச்ய பாடமாக ஏற்பட்டு சிறிதளவு பயன் பட்டாலும், ட்ரில் என்னும் சரீர அப்யாஸம், சரீர அப்யாஸத்தையே நோக்கமாய்க்கொண்டு, வேறு பெரிய பயனின்றி, அவயவங்கள் அசைந்து, சிறுவர்களின் ஆத்ம சக்தியை வீண் வழியில் போக்குகிறது. அப்படிக்கின்றி, ஒரு ஸாயர்த்யமுள்ள உபாத்யாயர் க்ராமவாஸிகளின் பெரும்பான்மையோருடைய ஜீவனோபாயமான, விவஸாயத்தையே பின்ஸந்ததியார், புத்திகூர்மையுடன் பிற்காலத்தில் கையாள, பள்ளிக்கூடத்திற்கு ஸமீபத்தில் ஒரு சிறு தோட்டத்தை சிக்கனமா யேற்படுத்தி சிறுவர்களை நேரில் செய்தும், உற்று நோக்கியும், கார்யகாரணங்களை தாமே கண்டறிந்தும், பயிர்களின் வளர்ச்சி, பூமியைப் பண்படுத்தும் விதம், மண்ணணைத்தல், பாத்திகட்டல், விதைவிதைத்தல், ஒற்றை நாற்று நடவு, நீரிரைத்தல், சாஸ்த்ர முறைப்படி எருச்சேர்க்கும் உபாயம், களைபறித்தல், தூள் அடித்தல் (Top dressing) முதலியவற்றால் பயிருக்கு ஏற்படும் நன்மைகள், ஆகிய இவை போன்ற க்ருஷித்தொழில்களை சிறுவர்களையே, தம் மேல்பார்வையில் செய்யும்படி பயிற்றுவது ரொம்பவும் பயன்படும் சரீரப் பயிற்சியாகும்.

மூன்றாவது தலைப்பான ஸன்மார்க்கப்பயிற்சி ஸம்பந்தமாய் உபாத்யாயருக்கு வேலையும் பொறுப்பும் பின்னும் அதிகமாக யேற்படுகிறது. பிள்ளைகளின் இளம் பருவத்தில் ஏற்படும், "சில மூலாதார அறிவுகள்," அதாவது ஸ்வபாவவுணர்ச்சிகளில், சிலவற்றைக் குறிப்பால் தெரிந்து, அவற்றை ஆதாரமாய்க்கொண்டு, சிறுவர்களின் நல்ல வாடிக்கைகளை நாளடைவில் வ்ருத்திபண்ணி பதமறிந்து அவற்றை ஸ்திரமான நன்னடக்கைகளாக மாற்றல் வேண்டும். தேகபரிசுத்தம், உண்மை, யோக்யதை, தெய்வபக்தி, ராஜ விச்வாஸம், தயை, சாந்தம், முதலிய மனித ஸமூகங்களில் பிற்காலத்தில் பயன்படும் உத்தம குணங்

களை சிறுவர்களிடம் நட ஊக்கத்தோடும், ஜாக்ரதையாயும், பாடுபடவேண்டும்

உபாத்யாயர் பெரியவர்களுக்குச் செய்யும் உதவிகள்:— க்ராம ஸுகாதாரங்களை கவனியாது தெரியாமையினால், பல தொத்து வ்யாதிகளினால் பீடிக்கப்பட்டு அநேகர் மாண்டுபோகிறார்கள். தொன்றுதொட்டுவந்த சில கெட்ட, பழக்கங்களினால் ஸுலபமாய் அனுஸரிக்கக் கூடிய சில ஸுகாதார விதிகளை அலக்ஷ்யம் செய்வதே இவ்விதக்கேட்டிற்கு காரணமாயிருக்கிறது. இவ்வுண்மையை யறிந்த உபாத்யாயர் காற்று, நீர், ஆகாரம், இவை ஸம்பந்தமாய் ஏற்படும் அசுத்தத்தையும், அந்த அசுத்தத்தால் உண்டாகும் கேட்டையும் விளக்கி, தேகம், உடை, வீடு ஆகிய இவற்றை சுத்தமாய் வைக்கும் விதத்தையும் காட்டி, ஜலாதாரங்களை அசுத்த மடையாது பாதுகாப்பதனால் உண்டாகும் நன்மைகளைவிவரித்து, பலகொள்ளை நோய்களினின்று அவர்களைத் தப்புவிக்கலாம்.

இவைகளேயன்றி ஜனங்களுக்குள் செட்டான குடிவாழ்க்கையேற்படவேண்டியதும் அவச்யம். க்ராம ஜனங்களில் பெரும்பான்மையோர், உழவு மாடுகள்வாங்கவும், தச்சுக்கூலிக்காகவும், மார்வாடிகள், செட்டிகள் முதலியவர்களிடம் அந்யாயவட்டிக்கு பணம் கடன்வாங்கி, அந்தக் கடன்காரர்கள், விளைவு காலத்தில் களத்து வாசலிலேயே வந்து ஒன்றுக்கு மூன்றாய் விளைந்த தான்யத்தின் பெரும் பாகத்தைக் கடனுக்காக கொண்டு போய்விட, வருஷத்தில் பாக்கி மாஸங்களில் சாப்பாட்டிற்கு வழியில்லாமல் திண்டாடுகிறார்கள். "அக்ரிகல்சரல் லோன்" என்ற விவஸாயக்கடன் சொற்பகாலமாக, வருஷத்திற்கு 100-க்கு 6-வட்டி வீதம் குடியானவர்களுக்கு கடன் கொடுக்க கவர்ன்மெண்டார் முன் வந்திருந்த போதிலும், இவ்வித ஸகாயம், செல்வாக்குள்ள பெரிய நிலஸ்வான்தார்களுக்கே, அவருள்ளும் சிலருக்கே, கிடைக்கிறது. ஆகையினால் குடிகளிடம், செல்வாக்கையும், நம்பிக்கையையும் பெற்றிருக்கும் பரோபகார சிந்தையுள்ள ஒரு உபாத்யாயர் க்ராமத்தில் செயலுள்ள மிராசுதார்களிடம் கலந்து, அவர்களால் தனித்தனி சேர்க்கப்பட்ட மூலதனத்தை ஆதாரமாய் வைத்துக் கொண்டு, சிறு க்ராமக்கூட்டுறவு ஸங்கம் ஒன்றை ஸ்தாபித்து, அதன் மெம்பர்களாக, சில பெரிய மனிதர்களை யிருக்கச்செய்து, கணக்கு வழக்குகளில் தாமே உதவி செய்து, அதன் நன்னோக்கங்களையும், பயனையும் பொது ஜனங்களுக்கு விவரித்து, செயலற்ற ஏழைக் குடியானவர்களுக்கு க்ருஷித்தொழிலுக்காக ஸமயம் நேர்ந்த போது ஸ்வல்பத்தொகைகளை ஸ்வல்பவட்டிக்குக் கொடுத்து உதவிபுரியும்படி செய்து, க்ராமத்தில் ஒற்றுமையையும், சிக்கனத்தையும் வ்ருத்தி பண்ணலாம்.

அன்றியும் க்ராம அதிகாரிக்கும் க்ராம பஞ்சாயத்துக்கும் தாம் ஓர் ஆலோசனை கர்த்தாயிருந்து, பாரபக்ஷமின்றி, க்ராமங்களில் ஏற்படும் வழக்குகளையும் சச்சரவுகளையும் தீர்த்து க்ராமத்தாரின் நன் மதிப்பை யடையைலாம்.

அரசாட்சியாரின் கடமைகளையும் நல்லெண்ணங்களையும், அவர்களுக்கு ஜனங்களான நாம் செய்யவேண்டிய கடமைகளையும், சிறுவர்களுக்கு பாடங்களில் கற்பிப்பதேயன்றி, தெரியாத குடி ஜனங்களுக்கும் நன்கு புலப்படுத்தி, கைலஞ்சம் வாங்கும் சில மூட அதிகாரிகளுக்கு, தெரியாமையால் இரையாகும் ஏழைக் குடிகளுக்கு விழிப்புண்டாக்கி அவர்களைத் தப்புவிக்கலாம்.

முற்காலத்தில், உபாத்யாயர்கள், ஜோதிஷமும், வைத்யமும் கற்றிருந்ததாகத் தெரிகிறது. க்ராம ஜனங்கள் தங்கள் வீடுகளில் நேரும் சுப அசுப கார்யங்களில் யோசனை கேட்கவும் நாள் பார்க்கவும் உபாத்யாயரிடம் வருகிறதுண்டு. மேல் நாட்டு நாகரீகம் அதிக

ரிக்க, நாள் பார்த்தல், வைத்யம் முதலிய வற்றில் ஜனங்களுக்கு வரவர நம்பிக்கை குறைந்து போன போதிலும், தந்தி வாசிக்க இங்க்லீஷில் எழுதிய மேல்விலாஸங்களைப் படிக்க ஸாதாரணமாய் ஜனங்கள் உபாத்யா யரிடமே வருகிறபடியால், உபாத்யாயர் சிறிது இங்க்லீஷ் தெரிந்திருப்பது அவசியம்.

அவர் குடிகளுக்கு மத்யஸ்தராயும், பார பக்ஷமில்லாதவராயும் இருந்து, அவர்களுக்கு குத்தகைச் சீட்டு, க்ரய சாஸனம், ஒத்தி, பந்த கம்முதலியதஸ்தாவேஜிகளை எழுதிக்கொடுக்க வல்லவராயிருப்பாரானால் பின்னும் ச்லாக் யமே. ஆனால் ப்ராது ஜோடித்துக்கொடுப்ப தும், ஒரு கக்ஷியாரை விட்டு மறு கக்ஷியாரைச் சேர்ந்து மித்ரபேதம் செய்வதும், உபாத்யா யருக்கு எம்மட்டிலும் தகாதவை.

இனி சுருக்கிச் சொல்லுமிடத்து உபாத்தி யாயர், "உற்றனைத்தூறும் மணற்கேணி, மாந் தற்கு கற்றனைத் தூறுமறிவு" என்னும் நீதி வாக்யத்திற் கிணங்க, மேன் மேலும் சாஸ்த்ர ஆராய்ச்சி செய்பவராய், ஜனங்கள் தம்மைக் கேட்கும் ஒவ்வொரு விஷயங்களுக்கும் தக்க படி ஸூக்ஷ்மமாயும் ஸமயோசிதமாயும் பதில் சொல்லக்கூடியவராய் தாம் ஒரு கல்விக்களஞ் சியமாக இருக்கவேண்டும்.

வேணுகோபால் நாயுடு.

## PROGRESS OF EDUCATION.

### கல்வியின் அபிவ்ருத்தி.

1906-07-ம் வருஷம் முதல் 1911-12-ம் வரு ஷத்தோடு முடிவாகிற ஐந்து வருஷங்களில் வித்யாசாலைகளில் படிக்கும் பிள்ளைகளின் தொகையில் 13,93,000 அதிகமாகியிருக்கிறது.

5-வது வருஷமுடிவில் பள்ளிக்கூடத்திற்குப் போய்க்கொண்டிருந்தவர்களின் ஸங்க்யை 67, 81,000 ஆகும். கடைசி 12 மாஸத்தில், 4,35,000 பேர் அதிகமாகி யிருக்கிறார்கள். 1906-07-ம் வருஷத்தில் பள்ளிக்கூடத்துக்குப் போய்க் கொண்டிருந்த பையன்களின் தொகை பள் ளிக்கூடத்தில் வாசிக்கத் தகுந்த வயதுள்ள பையன்களின் தொகையில் நூற்றுக்கு 22·7-ஆக விருந்தது. 1911-1912-ம் வருஷத்தில் இந்தத் தொகை நூற்றுக்கு 26·8-ஆக அதிக யிருக்கிறது.

1906-07-ம் வருஷத்தில் பள்ளிக்கூடம் போ ய்க்கொண்டிருந்த பெண்களின் தொகை பள் ளிக்கூடம் போகக்கூடிய பெண்களின் தொகை யில் 100-க்கு 3·2-ஆக இருந்தது. இது 1911-12-ம்வருஷம் 4·7-ஆக உயர்ந்துவிட்டது. சிறிய மாகாணமாகிய குடகில் பள்ளிக்கூடம் போகக்கூடிய பெண்களில் நூற்றுக்கு 16-பேரும், ஜனஸமூக ஏற்பாடு வித்யாஸமாயுள்ள பர்மாவில் நூற்றுக்கு 8·5- பேரும் படித்துக் கொண்டிருப்பவர்களாக இருந்தார்கள். ஐக்ய மாகாணங்களிலோ பள்ளிக்கூடம் போகத் தகுந்த வயதுள்ள பெண்களில் நூற்றுக்கு 1·4-பேர்தான் பள்ளிக்கூடம் போய்க்கொண்டி ருந்தார்கள்.

மாணவர்களின் ஸங்க்யைபொதுவாய் அதிக மானதற்குக் காரணம் ப்ரைமரி பாடசாலை கள் அதிகமா யிருப்பதே யாகும்.

1910-11-ம் வருஷம் ப்ரைமரி பாடசாலைக ளில் வாசித்துக்கொண்டிருந்தவர்களின் ஸங்க் யை நூற்றுக்கு 1·9-ஆக அதிகரித்திருக்க, அடுத்த வருஷம் வித்யா இலாகாவின் முயற்சி யால் 7·8-ஆக அதிகரித்தது.

## BOMBAY COLLEGE OF COMMERCE.

### பம்பாய் வ்யாபாரக் காலேஜ்.

பம்பாயில் ஒரு வ்யாபாரக் காலேஜ் ஸ்தாபிப் பதற்கு இந்தியா ஸெக்ரெடரி ஸாங்க்ஷன் செய்திருந்ததாக சென்ற மே மாஸத்து ஸஞ்சி கையில் தெரிவித்தோம். அந்தக் காலே ஜுக்கு ப்ரின்ஸ்பலாக நியமிப்பதற்குத் தகுந்த வராய் ஒருவரை இங்லண்டிலிருந்து தெரிந் தெடுத்து அனுப்பும்படி இந்தியா ஸெக்ரெட

ரியை பம்பாய் கவர்ன்மெண்டார் கேட்டுக்கொண்டிருந்தார்கள். இந்திய ஸெக்ரெடரி அவ்விடத்தில் தகுந்தவராக ஒருவரும் அகப்படவில்லையென்று ஸமீபத்தில் தெரிவித்து விட்டார். இதற்காககாலேஜை ஸ்தாபிப்பதை தாமஸிக்காமல் சீக்ரம் ஸ்தாபிப்பதற்காக கவர்ன்மெண்டார் ஆக்டிங் ப்ரின்ஸ்பலாக மிஸ்டர்கே. ஸுப்ரமண்ய அய்யரையும், இங்கிலீஷ், அர்த்த சாஸ்த்ரம் அதாவது பொருளாதார சாஸ்த்ரம், வ்யாபாரச் சட்டம், வ்யாபாரக் கணக்கு ஆகிய இவைகளுக்கு தனித் தனி லெக்சரர்களேயும், தற்காலத்துக்கு ஆக்டிங்காக நியமித்திருக்கிறார்கள். பின் சொன்ன நான்கு லெக்சரர்களும் இந்தியர்கள். மிஸ்டர் ஸுப்ரமண்ய அய்யருடைய ஊக்கத்தாலும் உதவியாலுந்தான் இந்த ஏற்பாடுகளை சீக்ரம்செய்வது ஸாத்யமாயிற்றென்று கவர்ன்மெண்டார் தெரிவித்திருக்கிறார்கள். மிஸ்டர் ஸுப்ரமண்யய்யர் காலேஜில் சம்பளமில்லாமலே வேலை பார்த்து வருவதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்.

## EDUCATION OF FACTORY CHILDREN.

பாக்டரிச் சிறுவர்களுக்குக் கல்வி.

சென்னை ராஜதானியில் 201 பாக்டரிகள் இருக்கின்றன. இவைகளில் 4725 பிள்ளைகள் ஸராஸரி தினஸரி வேலை செய்து வருகிறார்கள். பாக்டரிகளில் வேலை செய்யும் பிள்ளைகளின் படிப்புக்காக சில பாக்டரிகள் மாத்ரந்தான் வேண்டிய ஏற்பாடுகள் செய்திருக்கின்றன. மற்றவைகளில் அவர்களுக்கு கல்வி கற்பிப்பதற்காக யாதொரு ஸௌசர்யமும் கிடையாது. இந்தச் சிறுவர்களின் படிப்பு விஷயமாக கவர்ன்மெண்டார் ஒரு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதிக பிள்ளைகள் வேலை செய்துவரும் பாக்டரிகளில் எவைகளின் மானேஜர்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்ப ஒப்புக்கொள்ளுகிறார்களோ, அந்தப் பாக்டரிகள் உள்ள இடங்களில் கவர்ன்மெண்டார் ஒருவேளை மாத்ரம் நடக்கும் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப் போகிறார்கள். தற்போது எல்லூர், கோயம்புத்தூர், மதுரை, தூத்துக்குடி ஆகிய இந்த இடங்களில் பாடசாலைகளை ஸ்தாபிப்பார்கள். இவைகள் முதலில் முனிஸிபாலிடிகளின் மேம் பார்வையில் இருக்கும். பிறகு அவைகளை மில்லுகளுக்கே விட்டுவிடுவார்கள்.

## A TEACHER'S GUILD.

ஒரு உபாத்யாயர் ஸங்கம்.

மஸூலிப்பட்டணத்திலுள்ள பற்பல ஸ்கூல்களிலுள்ள உபாத்யாயர்கள் ஒன்று சேர்ந்து டீசர்ஸ் கில்ட் என்று ஒரு ஸங்கம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். வித்யாஸம்பந்தமான விஷயங்களில் உபாத்யாயர்களுடைய அபிப்ராயங்களை ஒழுங்குபடுத்தி அவைகளை வித்யாதிகாரிகளுக்கும், கவர்ன்மெண்டுக்கும் தெரிவித்து உபாத்யாயர்களுடைய நிலைமையையும் அவர்களுடைய சம்பளம் முதலியவைகளேயும் மேலான நிலைமையில் வைக்க முயலுவது அந்த ஸங்கத்தின் நோக்கமாகும்.

## ARCHITECTURAL SCHOLARSHIPS

சிற்ப வித்தைக்கு ஸ்காலர்ஷிப்புகள்.

சிற்ப வித்தையைக் கற்க ப்ரியப்படும் இந்தியர்களுக்கு இந்தியா கவர்ன்மெண்டார் 100 ரூபாய் வீதம் 3 ஸ்காலர்ஷிப்புகள் கொடுக்கத் தீர்மானித்திருக்கிறார்கள். பம்பாய் கவர்ன்மெண்டின் கன்ஸல்டிங் ஆர்க்கிடெக்ட்டின் (சிற்ப சாஸ்த்ரி) ஆபீஸிலும் பம்பாயிலுள்ள ஸர். ஜே. ஜே. ஸ்கூல் அப் ஆர்ட் பள்ளிக்கூடத்திலும், மாணவர்கள் சிற்பவித்தையில் பயிற்சி பெறுவார்கள். தற்போது மூன்று வருஷத்துக்கு ஸ்காலர்ஷிப் கொடுப்பதாக ஏற்பாடாயிருக்கிறது. ஆனால் மாணவர்கள் மூன்றுவது வருஷக்கடைசியில் நடத்தப்படும் ஒரு பரிக்ஷையில் ஒரு குறிப்பிட்ட திட்டப்படி தேறினால் இன்னொரு வருஷம் ஸ்காலர்ஷிப்பு கொடுக்கப்படலாம்.

# The Legal World.
## வ்யவஹாரப் பகுதி.

### ENHANCED MAINTENANCE RATE.
அதிக ஜீவனாம்சம்.

ருதுசாந்தியாகாத ஒருவிதவை 1898-ம் வருஷம் முதல் 1901-ம் வருஷம் வரையில் தனக்குச் சேரவேண்டிய ஜீவனாம்சத்துக்கு 1901-ம் வருஷத்தில் தனது மாமனார் பேரில் வ்பாஜ்யம் போட்டாள். அவளுக்கு மாஸம் 5-ரூபாய் வீதம் ஜீவனாம்சம் கொடுக்கும்படி தீர்ப்பாயிற்று. பிறகு, 1910-ம் வருஷத்தில் தனது மாமனாருடைய குடும்பத்துக்கு முன்னிருந்ததைவிட அப்போது அதிக ஸொத்திருந்ததாகையால், 1901-ம் வருஷம் முதல் 1910-ம் வருஷம் வரையில் உள்ள காலத்து ஜீவனாம்சம் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று தன் மாமனார்மேல் இன்னொரு வ்யாஜ்யம் போட்டாள். இதை விசாரித்த டிஸ்ட்ரிக்ட் முன்ஸிப் 1901-ம் வருஷம் முதல் 1910-ம் வருஷம் வரையிலுள்ள காலத்தில் குடும்ப ஸொத்து அதிகரித் திருப்பதால், வாதிக்கு உயர்ந்த ரேட்டுப்படி ஜீவனாம்சம் கேட்க பாத்யதை உண்டென்று தீர்ப்புச் சொன்னார். இது பாலக்காடு ஸப்ஜட்ஜிடம் அப்பீலுக்குப் போனதில், 1910-ம் வருஷத்துக்குப் பிற்பட்டுத்தான் அதிகப்படி ஜீவனாம்சம் கொடுக்கலாம் என்றும், அதற்கு முந்தி, அதாவது 1901-ம் வருஷம் முதல் 1910-ம் வருஷம் வரையில், பழைய ரேட்டுப் படித்தான் ஜீவனாம்சம் உண்டென்றும் தீர்ப்புச் சொன்னார். அதன் மேல் வாதி ஸமீபத்தில் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தாள்.

ஜீவனாம்சம் எவ்வளவு கொடுக்கவேண்டியதென்பது குடும்பத்துக்கு எவ்வளவு ஸொத்து இருக்கிறதென்பதையும், விதவைக்கு எவ்வளவு அவச்யம் வேண்டியிருக்கும் என்பதையும், பொறுத்ததாயிருக்கிறதென்றும், ஜீவனாம்சம் எந்த வருஷங்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று கேட்டிருக்கிறதோ அந்த வருஷங்களில் விலைவாசி உயர்ந்து விட்டதென்றும், குடும்பத்தின் ஸொத்து ரொம்பவும் அதிகரித்திருக்கிறதென்றும் கீழ்க்கோர்ட்டில் ருஜுவாயிருக்கிறதென்றும், ஆகையால் அப்போதுள்ள நிலைமைகளை அனுஸரித்து எந்த ரேட்டு ஸரியென்று கோர்ட்டுக்குத் தோன்றுகிறதோ அந்த ரேட்டு ப்ரகாரம் ஜீவனாம்சம் கொடுக்கும்படி தீர்ப்பாக வேண்டும் என்றும் வாதியின் வக்கீல் வாதித்தார். கோர்ட்டார் மற்ற விஷயங்களை கவனிக்காமல் தங்களுக்கு உசிதமென்று தோன்றுகிறபடி ஜீவனாம்சத்தை நிர்த்தாரணம் செய்யவேண்டியதென்றும், விதவை பிற்காலத்தில் கேட்கக் கூடுமென்று எண்ணி எந்தத் தொகையையும் தனியாக எடுத்து வைக்க ப்ரதிவாதி கடமைப்பட்டவரல்லவென்றும், ப்ரதிவாதி பக்கம் வாதிக்கப் பட்டது. ஜட்ஜுகள் வாதி வக்கீல் சொல்லியவைகளை ஏற்றுக்கொண்டு, குடும்பத்தின் தற்போதைய நிலைமையையும், வாதிக்கு எவ்வளவு அவச்யம் வேண்டியிருக்கும் என்பதையும் கவனித்தே ஜீவனாம்ச விகிதம் ஏற்படுத்த வேண்டுமென்றும், கேட்கவேண்டியதைக் காலத்தில் கேட்காத தனாலேயே பின்னால் அதைக் கேட்டபோது, கொடுக்க வேண்டியவர் கொடுக்க மறுக்கலாம் என்பதற்கு யாதொரு சட்ட ப்ரமாணமும் இல்லையென்றும், விதவைக்கு உயர்ந்த ரேட்டுப்படி ஜீவனாம்சம் பெற பாத்யதை உண்டென்றும், அபிப்ராயப்பட்டு ஸப்ஜட்ஜின் தீர்ப்பை மாற்றி டிஸ்ட்ரிக்ட் முன்ஸிப்பின் தீர்ப்பை உறுதிப்படுத்தினார்கள்.

## SOUTH AFRICAN IMMIGRATION LAW.

தென்னுப்ரிக்கா இம்மிக்ரேஷன் சட்டம்.

தென்னுப்ரிக்காவில் புது இம்மிக்ரேஷன் ஆக்ட், அதாவது தென்னுப்ரிக்காவுக்கு நமது தேசத்தவர்கள் போய் குடியேறுவதைப் பற்றிய ஒரு ஆக்ட், சட்டமாக்கப்பட்டு ஸமீபத்தில் அனுஷ்டானத்து வந்தது. அந்த சட்டம் இந்தியர்களுக்குள்ள ஸ்வதந்தரங்களைக் குறைப்பதோடு,பழைய சட்டத்தால் தென்னுப்ரிக்கா இந்தியர்கள் அனுபவித்து வந்த ஸ்வல்ப ஸ்வதந்த்ரங்களும் அவர்களுக்கு இல்லாமல் செய்து விட்டது. இந்தியர்கள் இப்படி தங்களுடைய ஸ்வதந்த்ரங்களை இழந்து போகும்படி விடுவது கூடாதென்று சட்டத்தில் தங்கள் ஸ்வதந்த்ரங்களுக்கு விரோதமா யுள்ளவைகளை ரத்து செய்யும்படி மன்றாடி வருகிறார்கள். புதுச்சட்டத்தால் இந்தியர்கள் அடையும் துன்பங்களாவன:—

தென்னுப்ரிக்காவிலேயே பிறந்து வளர்ந்த இந்தியர்களுக்கு பழைய சட்டத்தின்படி கேப் காலனிக்குப் போக பாத்ய மிருந்தது. புது இமிக்ரண்ட்ஸ் ரெகுலேஷன் ஆக்ட் 5-வது ஸெக்ஷன் (e) படிக்கும், அந்தஸெக்ஷனில் பின்னால் கண்டிருக்கும் நிபந்தனைகள்படிக்கும் அப்படிப்போவது முடியாது.

நேட்டாலிலுள்ள இந்தியர்கள் ஒப்பந்த மில்லாமல் மூன்று வருஷம் நேட்டாலிலேயே வாஸம் செய்திருந்தால் அவர்கள் அந்த தேசவாஸிகள் என்று பாத்யம் கொண்டாடக் கூடும். ஆனால் புது ஆக்ட் 30-வது ஸெக்ஷன்படி அந்த ஸ்வதந்த்ரம் போய்விட்டது. கேப் காலனியில் உள்ள இந்தியர்கள் தாங்கள் ஸம்பந்தப்பட்ட கேஸ்களில் கீழ்க்கோர்ட்டுகளில் ஸரியானபடி ந்யாயம் கிடைக்காவிட்டால் கேஸ் ஸம்பந்தப்பட்ட விஷயங்களைப் பற்றியாவது, லா பாயிண்டைப் பற்றியாவது ஸுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்யலாம் என்று பழைய ஆக்டின்படி ஸ்வதந்த்ரம் இருந்தது. புதுச்சட்டத்தின்படியோ லாபாயிண்டைப் பற்றித்தான் ஸுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்யலாம்.

"ஆரஞ்ச் ப்ரீ ஸ்டேட்" என்னும் நாடு ஸம்பந்தப்பட்ட மட்டில் புது ஆக்டின்படி ஜாதி விலக்கு ஏற்பட்டிருக்கிறது.

மேலே சொன்ன குறைகளை நிவர்த்திப்பதோடு தென்னுப்ரிக்கா இந்தியர்கள் கேட்கும் வேறு ஸ்வதந்த்ரங்களாவன :—

இமிக்ரேஷன் ஆக்ட் ஸம்பந்தப்பட்ட மட்டில் ஐரோப்பியர்களுக்கும் இந்தியர்களுக்கும் ஸமத்வம் ஏற்படவேண்டும். இது பேருக்கு மாத்ரம் இருக்கக்கூடாது; அனுபவத்துக்கும் ஒத்துவர வேண்டும்.

தென்னுப்ரிக்காவிலாகட்டும், வேறுதேசங்களிலாகட்டும், ஹிந்துக்களும் மகமதியர்களும் ஒரு தடவையில் ஒரு மனைவி மாத்ரம் கல்யாணம் செய்திருந்தால் அந்தக் கல்யாணத்தை தென்னுப்ரிக்கா கவர்ன்மெண்டார் அங்கீகரிக்கவேண்டும்.

நேட்டாலில் ஒப்பந்தம்முடிந்துபோன கூலியாட்களும் அவர்களுடைய மனைவி, மக்களும் வருஷம் ஒன்றுக்கு 45 ரூபாய் வரியாகக் கொடுக்கவேண்டுமென்று சட்டம் ஏற்பட்டிருக்கிறது. இதனால் ஒப்பந்தம் முடிந்து போனவர்கள் ஒன்று மறுபடியும் ஒப்பந்தம் பேசி ஒப்பந்தக் கூலிகளாக ஆகவேண்டும். அல்லது அந்த தேசத்தை விட்டுப்போய் விட வேண்டும் என்று ஏற்படுகிறது. இந்த வரியையும் எடுத்துவிட வேண்டும்.

## TENDER OF PATTA.

பட்டாக் கொடுத்தல்.

ஒரு ஜமீன்தார் தம்முடைய ரயத்துகளில் ஒருவருக்கு ஒருபட்டாவைக் கொடுக்கப் போக அதை ரயத்து வாங்கிக்கொள்ள மறுத்துவிட்டார். அதன்மேல் ஜமீன்தார் அந்தப் பட்டாவை ரயத்தின் வீட்டில் ஒட்டிவிட்டார்.

அப்படியானல் எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்ட் 54-வது ஸெக்ஷன்படியும் 78-வது ஸெக்ஷன் 2-வது பிரிவுப்படியும், பட்டாவை ரயத்துக்குக் கொடுத்ததாகாது. அப்படிச் செய்த தன்மேல் ஜமீன்தார் தனது ரயத்தின் நிலத்தை ஜப்தி செய்தால் அப்படி ஜப்தி செய்தது சட்டப்படி செல்லாது.

ஜட்ஜ்மில்லர் இந்தக் கேஸில் சொன்னதாவது.—ஜமீன்தார் (பட்டாவை) கொடுப்பதாகச் சொன்னபோது அதைரயத்து வாங்கிக்கொள்ளாவிட்டால் பட்டாவை நேரில் கொடுப்பது முடியாமல் போகிறது. ஆகையால் பட்டாவை எந்த நிலத்துக்கு பட்டா கொடுக்கப்படுகிறதோ அந்த நிலத்தில் ஒட்டிவிட வேண்டியது அவச்யமாகிறது. அப்படிச் செய்யாவிட்டால் ஜமீன்தார் பட்டாவை ரயத்தினிடம் ஸரியானபடி கொடுத்ததாக மாட்டாது. எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்ட் 54-வது ஸெக்ஷனில் ஜமீன்தார் ரயத்துக்குப் பட்டா கொடுப்பதற்குச் சொல்லிய வழிகளைத் தவிர வேறு வழிகளில் பட்டா கொடுப்பதற்கு ஷை 54-வது ஸெக்ஷன்படி ஜமீன்தாருக்கு அதிகாரம் கிடையாது.

ஜட்ஜ் ஸ்பென்ஸர்:—எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்ட் 54-வது, 78-வது ஸெக்ஸன்கள்படி நிலஸ்வான் பட்டாவை ரயத்துக்கு "டெலிவரி" செய்வதால் பட்டா கொடுப்பட்டதாகிறது.

"டெலிவரி" என்றால் பட்டா ஒருவர் வசமிருப்பது இன்னொருவர் வசம் மாறவேண்டும். ஒருவர்கொடுக்க வந்ததை மற்றவர் வாங்க மறுத்தால் டெலிவரி செய்ததாகாது. அதாவது நேரில் கொடுத்தாகாது. 1913 மதராஸ் லா டைம்ஸ் 423.

**MEDICAL EXAMINATION OF THE BRIDE-GROOM.**

மாப்பிள்ளையை வைத்யர்களைக்கொண்டு சோதிப்பது.

ஒரு ப்ராமணர் தனது பெண்ணுக்கு ஒரு வரனை நிச்சயம் செய்து அந்த வரனுக்குக் கல்யாணம்செய்து கொடுப்பதாக ஏற்பாடு செய்திருந்தார். ஏற்பாடு செய்த பிறகு சிறிது காலத்துக்குள் வரனுக்கு ஏதோ சரீரத்தில் ஊனங்கள் இருக்கின்றனவென்று கேள்விப்பட்டு, வரனுடைய தகப்பனரின் ஸம்மதம் பெற்று, வைத்யர்களைக்கொண்டு வரனுக்கு ஏதாவது ஊனம் இருக்கிறதா என்று பரீக்ஷிக்கச்செய்தார். அதன்மேல் தமது பெண்ணை அந்த வரனுக்கு கல்யாணம்செய்து கொடுப்பதில்லை யென்று தீர்மானித்து விட்டார். வரனுடைய தகப்பனர் நஷ்டத்துக்கு ப்ராது போட்டார். டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் 300 ரூபாய்க்குத் தீர்ப்பு செய்தார். இந்தக் கேஸ் திருவாங்கூர் ஹைகோர்ட்டுக்கு அப்பீலுக்கு வந்தது. இதை விசாரித்த ஜட்ஜுகள், தகப்பனர் தமது பெண்ணை கல்யாணம் செய்து கொடுக்கும் மாப்பிள்ளை தகுந்தவனா என்பதை கவனிக்க வேண்டியது அவருடைய கடமையாகையால் தகப்பனர் அப்படி வரனை வைத்யர்களைக் கொண்டு சோதிக்கச் செய்தது ந்யாயமானதே யென்று சொல்லி கீழ்க்கோர்ட்டாருடைய தீர்ப்பை மாற்றிவிட்டார்கள்.

**A HINDU WIDOW'S PROPERTY RIGHTS.**

ஸொத்தின்மேல் ஒரு விதவைக்குள்ள பாத்யங்கள்.

ஹிந்து விதவை ஒருத்திக்கு அவளுடைய புருஷன் ஸொத்துக்களின்மேல் எப்படியிருந்தால் பாத்யமுண்டென்றும், எப்படியில்லாவிட்டால் பாத்யமில்லாமல் போய்விடுமென்றும் ஹைகோர்ட்களில் செய்யப்பட்ட பல தீர்மானங்களின் ஸங்க்ரகங்களைக் கீழேகுறிக்கிறோம்.

ஒரு ஸ்த்ரீ விபசாரியா யில்லாமல் பதிவ்ரதையாயிருந்தால் அவளுக்கு அவள் புருஷன் ஸொத்தின்மேல் ஸகல ஸ்வதந்தரமு முண்டு.

ஒரு ஸ்த்ரீயின் கணவன் அவள் உயிருடனிருக்கும்பொழுதே இளையாள் கல்யாணம்

செய்து கொண்டானென்று வைத்துக்கொள்வோம். இது காரணமாக அவள் அவனோடு வஸிக்காமல் தனியாகப் போய்விட்டாளென்றும் வைத்துக்கொள்வோம். மேலும் இவள் புருஷன் அவளைத் தன்னோடுவந்து வாழக் கேட்டால் அவள் வந்தே தீரவேண்டுமென்பதில்லை. இவள் துர்நடத்தைக் காரியென்பதற்கு ஸாக்ஷ்யமிருந்தால் அவளுக்கு புருஷனுடைய ஸொத்தின்மேல் பாத்யம் போய்விடும். ஆனால் நல்ல நடத்தையுடைய வளாயிருந்தால் எங்கிருந்தாலும் அவளுக்கு ஸகல பாத்யமுமுண்டு.

ஒரு ஸ்த்ரீ ரகஸ்யமாய் விபசாரம் செய்தவளாயிருந்தாலும், அவளை அவள் புருஷன் மன்னித்து விடுவானானால், அவளுக்குப் புருஷன் ஸொத்தின்மேல் பாத்யமுண்டு.

ஒருவனுக்கு ஒன்றுக்குமேற்பட்ட மனைவிகளுண்டென்று வைத்துக்கொள்வோம். அவனுக்குப் பிற்காலத்தில் அவர்கள் ஒருவருக்கொருவர் மன மொப்பியிருந்தால் ஒன்றுமில்லை. இல்லாமல் மனஸ்தாபப்பட்டால் ஸொத்துக்களை அவர்கள் தங்களுக்குள் நிரந்தரமாய்பாகம்போட்டுக்கொள்ள முடியாது. ஸமாதானமாக அவர்களுக்குள் ஸொத்தை ஆயுள் காலம் வரைதனித்தனியே பிரித்து வரும்படியை அனுபவித்துக் கொள்ளலாம். அவ்வளவுதான். அவர்களில் யாராவது இறந்துபோனால் பாக்கியுள்ளவர்களுக்கு அவள் அல்லது அவர்கள் அனுபவித்துக்கொண்டிருந்த ஸொத்து உயிரோடிருக்கப் பட்டவர்களைச் சேரும். இந்த விதவைகள் பாகத்தை ஸ்திரமாகச் செய்துகொள்ள முடியாது.

ஒருவனுக்கு இரண்டு விதவைகளிருந்து அவர்கள் ஸொத்தைப் பிரித்துக்கொள்ள வேண்டுமானால் பிரித்துக்கொள்ளலாம். அவர்கள் தங்களுக்குப் பிற்காலம் ஸொத்தை யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்கலாம். பாகம் பிரிக்கும்பொழுது தனக்குப் பிற்காலம் ஸொத்து சக்களத்திக்குப் போகாதபடி ஏற்பாடு செய்துகொள்ளலாம்.

ஒருவிதவை தன்புக்ககத்திலிருக்கவேண்டுமென்பது கட்டாயமொன்றுமில்லை. எங்கு வேண்டுமானாலுமிருக்கலாம். அவள் துஷ்க்ருத்யத்திற்காக புக்ககத்தைவிட்டுப் போகவில்லையென்றால் அவளுக்கு எங்கிருந்தாலும் ஜீவனாம்சம் பெற ஸ்வதந்த்ர முண்டு.

ஒருவிதவை தன்ஜீவனாம்சத்தை நெடுங்காலம் பெற்றுக்கொள்ளாமல் நிறுத்தி வைத்திருந்தாளென்றும், அவள் கேட்டுக் கொடுக்காமலிருக்க வில்லையென்றும், இதுகாரணங்களால் அவளுக்குச் செல்லவேண்டிய பணத்தைக் கொடுக்கமாட்டேனென்று சொல்ல முடியாது. அவளுக்குச் சேரவேண்டியதை எப்பொழுதும் அவள் பெறலாம். அவள் பெறும் ஜீவனாம்சம் அவளுக்கிருக்கும் செலவைப் பொருத்தது. செலுத்தப்படாமல் நிறுத்தப்பட்ட ஜீவனாம்சத்தை அவளுக்கு அந்தந்த ஸமயங்களிலுள்ள செலவை உத்தேசித்து தீர்மானம் செய்யவேண்டும்.

ஒரு அவிபக்த குடும்பம் பல கிளைகளாக தனித்தனியாக இருக்கும்பொழுது, ஒரு கிளைக் குடும்பத்தில் ஒரு புருஷனிறந்துபோனால் அவனுடைய விதவை தன் ஜீவனாம்சத்துக்கு கிளைக் குடும்பத்தார்களெல்லார் மேலும் வ்யாஜ்யம் செய்யலாம். அவள்புருஷன் கிளைக் குடும்பத்தின் மேலேமட்டுந்தான் அவளுக்கு ஸ்வதந்த்ரமுண்டென்று நினைப்பதுஸரியன்று. எல்லாரும் சேர்ந்து அவள் ஜீவனாம்சத்தைக் கொடுக்க சட்டரீதியாய் கட்டுப்பட்டிருக்கிறார்கள்.

# The Sanitary World.

# ஸுகாதாரப் பகுதி.

## THE PREVENTION AND TREATMENT OF CHOLERA.

### வாந்திபேதியைத் தடுக்கவும் ஸ்வஸ்தம்செய்யவும் தகுந்த விதிகள்.

இந்த விஷயமாக டாக்டர் யூ. ராமாராவ் ஒரு துண்டுப்பத்ரிகை வெளியிட்டிருக்கிறார். அது பின் வருமாறு:—

1. மிதமாயும், காலாகாலத்திலும், வழக்கம்போல் சாபபிடலாம். நன்றாய்ப் பழுக்காத அல்லது அழுகிப்போன பழங்களை அல்லது அவ்வித காய் கறி முதலியவைகளை உண்ணக் கூடாது. நன்றாய் சமையல் செய்யப்பட்ட காய் கறிகள், கனிந்த பழங்கள் இவைகளை யுண்ணலாம். கெட்டுப்போன மாம்ஸம், மத்ஸயம், ஆறிப்போன அன்னம் இவைகளை உண்ணவே கூடாது. குழந்தைகளுக்கு புளித்துக் கெட்டுப்போகாத நல்ல பாலை வாங்கிக் கொடுக்கவேண்டும். பால்காரன் பாலில் சேர்க்கும் தண்ணீர் மிகவும் அசுத்தமானது. ஆதலால், பாலை எப்பொழுதும் காய்ச்சியே உபயோகப்படுத்தவேண்டியது.

2. கக்கூஸ், சாக்கடை, குப்பைத்தொட்டி முதலியவைகளிலிருந்து உண்டாகும் துர்நாற்றம் தேஹத்துக்கு மிகவும் கெடுதியானது. ஆதலால், மேற்சொன்ன இடங்களை பினாயில் (Phenyle) முதலிய மருந்துகளைத் தண்ணீரில் கரைத்து, தினம் 2 அல்லது 3 தடவை தெளித்து சுத்தமாய் வைக்கவேண்டும். காய்ந்த குப்பைகளை வீட்டில் வைக்காமல், அவைகளை குப்பைத் தொட்டியில் கொட்டவாவது தீ வைத்துக் கொளுத்தவாவது வேண்டும். நீர் ஸம்பந்தமான குப்பைகளை அல்லது அழுக்குகளை சாக்கடையில் கொட்டி நன்றாய்த் தண்ணீர் விட்டுக் கழுவவேண்டும்.

3. வாந்திபேதியுள்ள காலங்களில் தண்ணீரை அப்படியே உபயோகிப்பது மிகவும் கெடுதியானதால், ஜலத்தை நன்றாய் வடிகட்டி கொதிக்க வைத்து உபயோகப்படுத்தவேண்டும். குறைந்த விலையில் கிடைக்கும் அசுத்தமான ஸோடாவாடர் முதலிய பானங்களை உபயோகிக்கக் கூடாது.

4. வாந்திபேதியுள்ள காலங்களில் ஒவ்வொருவரும், தகுந்த வைத்யர்களால் கொடுக்கப்பட்டாலொழிய வேறு எவ்விதத்திலும் ஸுகபேதிக்கு மருந்து சாப்பிடவே கூடாது.

5. குளிரைக் தடுப்பதற்கும், வியர்வையைத் தடுக்காமலிருப்பதற்கும், வயிற்றில் இழுப்பைத் தடுப்பதற்கும், கம்பளிச் சட்டை, கம்பளிக் கச்சை முதலியவைகளை உபயோகிக்கவேண்டும்.

6. வஸிக்கும் வீடு, படுக்கும் அறை முதலிய இடங்களில் நல்ல காற்று பரவும்படியாய், ஜன்னல்களையும் கதவுகளையும் நன்றாய்த் திறந்து வைக்கவேண்டும். வீட்டிலும் வீட்டைச் சுற்றிலுமுள்ள வாயு அசுத்தமாகாமலிருப்பதற்காக, எல்லா இடங்களையும் கூடியமட்டிலும் சுத்தமாகவும் ஒழுங்காகவும் வைத்திருக்கவேண்டும்.

7. மதுபானம் வாந்திபேதிக்கு இடங்கொடுக்குமாகையால், உணவுகளை உண்பதிலும் மதுபானம் செய்வதிலும் மிதமாயிருப்பது நல்லது.

8. வாந்திபேதியைப்பற்றி பயப்படாமலும், அதையே மனதில் நினைத்துக்கொள்ளாமலுமிருக்கவேண்டும். ஏனென்றால், பயம், மனோவ்யாகுலம் முதலியவைகள் தேஹத்தை

பலஹீனப்படுத்தி, வாந்திபேதி வருவதற்கு ஹேதுவாகின்றன.

9. வாந்திபேதிக்கு முன் காணும் அஜீர்ண பேதியானது எளிதில் ஸ்வஸ்தம் செய்யக் கூடியது. இந்த அஜீர்ணத்துக்கும், ஸாதாரணமாய் உண்டாகும் அஜீர்ணத்துக்குமுள்ள வித்யாஸத்தைக் கண்டுபிடிப்பது கஷ்டம். ஆதலால் அஜீர்ணம் கண்டவுடனே, ஒரு தகுந்த வைத்யரிடம் அறிவித்து, வைத்யம் செய்து கொள்ளவேண்டியது மிகவும் அவசியம். அஜீர்ணபேதி வாந்திபேதி என்னும் இவை இரண்டும் வெவ்வேறு வ்யாதிகளாயிருந்தாலும் அக்காலத்தில் அஜீர்ணபேதியே காலராவுக்கும் ஒருவாறு காரணமாய்விடும்.

10. ஒவ்வொரு வீட்டிலும் ஒரு புட்டி க்ளோரோடையின் (Chlorodyne) அல்லது காம்பரோடையின் (Camphorodyne) என்கிற மருந்துகளில் ஒன்று இருக்கவேண்டும். ஸாதாரண அஜீர்ணபேதி அல்லது வாந்திபேதி கண்டவுடன், பெரியவர்களுக்கு ஒரு அவுன்ஸ் தண்ணீரில் 40 முதல் 60 துளி வரையிலுமும், குழந்தைகளுக்கு ஒருவருஷத்துக்கு ஒரு துளிவிழுக்காடு வயதுக்குத் தக்கபடி சேர்த்தும் உடனே உள்ளுக்குக் கொடுக்கவேண்டும். முதலில் கொடுத்த மருந்தை வாந்தி செய்து விட்டால், மறுபடியும் உடனே ஒரு தடவை கொடுப்பதுடன், வயிற்றுக்கும் கடுகு அரைத்துப் பற்றுப் போடவேண்டும். வயிறு, கால், கைகளில் அதிகமாய் இசிவும், மேன் மேலும் தண்ணீர்போல வாந்தியும் பேதியும் உண்டாகுமானால், அதுதான் உண்மையான வாந்திபேதி யென்றும், அந்த வ்யாதி மிக்க கடுமையான நிலைக்கு வந்திருக்கிறதென்றும் அறிந்துகொள்ளலாம். இவ்வித நிலைமையில் மேற்சொன்ன மருந்துகளைக் கொடுக்கக் கூடாது. பனிக்கட்டியை நாக்கில் வைத்து உறிஞ்சச் செய்தாவது, பால், சிறந்த ஸோடா, பனிக்கட்டி மூன்றையும் கலந்து குடிக்கச் செய்தாவது வாந்தியை நிறுத்தவேண்டும். கால், வயிறு இவைகளில் இசிவு உண்டானால், சுக்குப்பொடி அல்லது கற்பூரத்தைலம் (Turpentine) இவற்றால் அவ்விடத்தைத் தேய்த்தால் குணமாகும். கால் கைகளில் சீதளம் மேலிடாமலிருப்பதற்கு வெந்நீர் நிரம்பிய புட்டிகளைக்கொண்டு ஒற்றிடம் கொடுக்கவேண்டும்.

11. வாந்திபேதி முதல்முதல் கண்டவுடனே, நோயாளியைப் படுக்கையிலிருக்கச் செய்யவேண்டும்; கெட்டியான ஆஹாரம் ஒன்றும் கொடுக்கக் கூடாது. இந்த விதிகளை அனுஸரிப்பதினால் வைத்யர் தேவையில்லை என்று நினைக்கக் கூடாது. இவைகளெல்லாம் வைத்யர் வருவதற்குமுன் செய்ய வேண்டிய வகைகள்.

12. பந்துக்களுக்காவது, ஸ்நேகிதர்களுக்காவது, அல்லது வேலைக்காரர்களுக்காவது வாந்திபேதி கண்டு, அவர்களுக்கு வீட்டிலேயே ஸரியானபடி வைத்யம் செய்ய ஸௌகர்யப்படாவிட்டால், உடனே அவர்களை ஆஸ்பத்ரிக்கு அனுப்பிவிட வேண்டும். அங்கே அவர்களுக்கு நல்ல மருந்து கொடுத்து, தகுந்தபடி அவர்களைக் காப்பாற்றுவார்கள். மேலும், அப்படிச் செய்வதினால், உங்களுடைய குடும்பத்தில் வேறு யாருக்காவது வாந்திபேதி வராமல் தடுப்பதற்கும், இவ்யாதி கண்டவர்கள் பிழைப்பதற்கும் அனுகூலமாயிருக்கும். அல்லாமலும், ஏழை ஜனங்களுள் வாந்திபேதி கண்டவர்களுக்கு நல்ல வைத்யம் செய்வது மிகவும் கஷ்டம்.

13. வாந்திபேதியின் விஷமானது வாந்தியிலும், பேதியிலும் இருப்பதால் அந்த மலங்களை உடனே அப்புறப்படுத்துவதுடன், அவைகளை நன்றாகவும் சுத்திசெய்யவேண்டும். மேற்படி வாந்திபேதிகளை, பினைல் என்கிற த்ராவ

கம் போடப்பட்ட ஒரு பாத்ரத்தில் ஏந்தி, நன்ருய் மூடி, ஜனங்கள் போக்குவரத்தில்லாத ஒரு இடத்தில் தோட்டி வரும்வரையில் பாத்ரத்துடன் வைத்திருக்க வேண்டும்.

14. விஷபேதியுண்டானவனுடைய சரீரத்தில் ஸம்பந்தப்பட்ட துணிகள், படுக்கை, பாத்ரங்கள் இவைகளை பினைல் முதலிய மருந்து சேர்க்கப்பட்ட தண்ணீரைக்கொண்டு நன்ருகக் கழுவி சுத்தம் செய்யவேண்டும். ஆனல், இவ்வேலையை அவரவர்களுடைய வார்டுகளுக்கென்று ஏற்பட்ட ஸானிடரி இன்ஸ்பெக்டரைக்கொண்டு செய்து கொள்ளலாம். அவர் இவ்வேலையைச் செய்ய வரும்போது, அவர்களைத் தடுக்காமல், வாந்திபேதி கண்டவுடன் அவருக்குத் தெரியப்படுத்தி, துணி, பாத்ரங்கள், படுக்கை முதலியவைகளை சுத்திசெய்வதில் உங்களைவிட அவர்களுக்கு நன்ருய் விஷயம் தெரியுமாதலால், அவரைக்கொண்டு செய்பச் சொல்வதுடன், அவர்கள் மூலமாய் வாந்திபேதி பரவுதலையும் தடுக்கவேண்டும். துணிகளைத் தீயில்போட்டு கொளுத்திவிடுதல் மிகவும் உத்தமம். வாந்திபேதி கண்ட வீடுகளையெல்லாம், அவ்யாதி சாந்தமானவுடன் கந்தகப்புகை போடுவதுடன், பினைல் ஜலத்தைத் தெளித்து சுத்தம் செய்யவேண்டும்.

15. வாந்திபேதிக்காரர்களிடத்தில் நெருங்கி உதவிபுரிந்து கொண்டுவந்த ஒவ்வொருவரும், தாஹத்துக்கு ஏதேனும் அருந்துவதற்கு முன்னும், போஜனம் செய்யுமுன்னும் முகம் கை கால்களை நன்ருகக் கழுவிக் கொள்ளவேண்டியது அவசியம். வ்யாதிக்காரர் இருந்த அறையில் சாப்பிடவே கூடாது.

**ONIONS.**

வெங்காயம்.

வெங்காயத்தைப் பச்சையாகவும், வேகவைத்தும் தின்னலாம். அது உடம்புக்கு நல்லது. அதைச்சாப்பிடுவதால் சொறி, கரப்பான் முதலிய வ்யாதிகள் வருவதில்லை. சிலர் அது ஜீர்ணமாவதில்லை யென்பார்கள். அது நன்ருய் வேகாதது தான் அதற்குக் காரணம் வெங்காயம் பக்வமாவதற்குத் தாமஸமானல் அது வெந்து கொண்டிருக்கும் ஜலத்தை வடித்துப் புதியஜலத்தை ஊற்ற வேண்டும். வெங்காயத்தை வேகவைக்காமல் வறுத்துசாப்பிடக் கூடாது. இதனுடைய நல்ல குணங்கள் அநேகருக்குத் தெரியாது. வெங்காயத்தை பச்சையாயோ வேகவைத்தோ ப்ரியமுள்ளபடி மார்க்குடல் வ்யாதிக்காரர்கள் சாப்பிட்டால் வ்யாதி குணப்படும். சீதளத்துக்கு வெங்காயம் நல்ல முறிவு. வெங்காயத்தை நன்ருக வேகவைத்து ஸத்து இறக்கி சாப்பிட்டால், உடம்புக்கு மிகவும் நல்லது.

மருந்துகளில் உபயோகிக்கும் முறை:—

(1) வெட்டைச் சூட்டுத்தேகமுடையவர்கள் காலையில் கொஞ்சம் பனவெல்லமும் நாலு வெங்காயமும் தின்பார்களானல் வெட்டைச்சூடு நீங்கும்.

(2) வயிற்றுக் கடுப்புள்ளவர்கள் வெங்காயத்தை நெய்யில்வறுத்து தின்பார்களானல் மேற்படி வ்யாதி நீங்கும்.

(3) கணச்சூட்டுத் தேகமுடைய குழந்தைகளுக்கு:—விளக்கெண்ணெய் ஓரளவு, வெங்காயச்சாறு ஓரளவு, வெந்தையம் ஓரளவு, மூன்றும் ஸமனுக எடுத்துக்காய்ச்சிக் காலையில் சாப்பிடுவார்களாகில் சூடுதணிந்து தேகங் குளிரும்.

(4) வெங்காயத்தை விளக்கெண்ணெயில் வறுத்து சாப்பிடுவார்களாகில் தேகபுஷ்டியுண்டாகும். இன்னும் அநேகவகைகளில் உபயோகிக்கப்படுகிறது.

**PIMPLES AND PRICKLY HEAT.**

பருவும், வேர்க்குருவும்.

பருவும் வேர்க்குருவும் ஸாதாரணமாய் ஆண்

பெண்களின் முகத்திலும் முதுகுகளிலும் கிளம்பும் தோல்வ்யாதிகள். அஜீர்ணத்தாலும், மலச்சிக்கலாலும், இன்னும் வேறு காரணங்களாலும் இவைகளுண்டாகின்றன. காரணங்களை அறிந்து சிகித்ஸை செய்து விட்டால் இவைகள் தானாக வாடி உதிர்ந்து போகும். ஆனாலும் இவைகள் சீக்ரம்போக நாம் செய்ய வேண்டியதும் இருக்கிறது.

பருவும், வேர்க்குருவும் முகத்திலிருக்கும் பொழுது முக அழகு கெட்டுப்போகிறது. இவைகளைக் கிள்ளுவதும் பிதுக்குவதும் கூடவே கூடாது. சிலர் இப்படிச்செய்து விட்டால் இவைகள் போய்விடுமென்று நினைப்பது ஸரியன்று. பரு காயாயிருக்கும்பொழுது நகம்பட்டால் வீங்கி ரொம்ப அவஸ்தை கொடுக்கும். பருக்களைப் பழுக்கவிட்டு பிறகு அதில் சேர்ந்திருக்கும் கெட்ட அழுக்கை எடுத்து விட்டால், அது வாடி பிறகு ஸரியாய்ப்போகும்.

ஒரு அவுன்ஸ் பன்னீரில் 30 க்ரெயின் ப்ரஸிபிடேட் ஸல்பரைப்போட்டுக் கரைத்து இரண்டு மூன்று துளி க்ளிஸிரினை விட்டு சீஸாவில் வைத்துக்கொண்டு முகத்தில் பருவுள்ள பாகங்களைக் கழுவினால் பருக்கள் ஆறிப்போம். பருவுள்ள முகத்தை அழுத்தித் தேய்க்கக்கூடாது. பரு போகும் வரையிலும் அஜீர்ணமுண்டாக்கக்கூடிய பதார்த்தங்களைத் தள்ளி வைக்கவேண்டும். பரு வந்த முகமானது மேடு பள்ளமாயிருப்பதால் விகாரமாயிருக்கும். ஜலத்தை எதேஷ்டமாய்க் குடிப்பதால் கூடிய சீக்ரம் பள்ளங்கள் நிரவிப்போகும்.

## CARE OF THE EYES.

கண்களைப் பாதுக்காத்தல்.

'கண்ணில் சிறந்த உருப்பில்லை' என்று தமிழில் வழங்கும் பழமொழியை எல்லாரும் கேட்டிருப்பார்கள். எழுதும்பொழுது அல்லது படிக்கும்பொழுது, அல்லது தையல் வேலை செய்யும்பொழுது, வெளிச்சம் அதிக ப்ரகாசமாயிருக்கக்கூடாது. மங்கலாயு மிருக்கக்கூடாது; அப்படி இருந்தால் த்ருஷ்டி கெடும். வெளிச்சம் இடது பக்கமாய் வரவேண்டும். வெளிச்சம் படிக்கும் புஸ்தகத்தின் மேலோ, எழுதும் கடிதத்தின் மேலோ பூராவும் விழவேண்டுமே யல்லாது எழுதுகிறவர் அல்லது படிக்கிறவர் முகத்தில் விழக்கூடாது.

பகலிலிருக்கும் வெளிச்சந்தான் ச்ரேஷ்டமானது. இந்த வெளிச்சம் திரை மூலமாய் வரக்கூடாது. விளக்கு வெளிச்சம் சுத்தமாயும், வெண்மையாயும் ஆடாததாயு மிருக்கவேண்டும். விளக்கு வெளிச்சத்தில் அதிக காலம் பார்க்கவும் படிக்கவும் கூடாது. நாளெல்லாம் வேலை செய்து ஸாயந்த்ரம் வெளிச்சம் மங்கலாயிருக்கும்பொழுதும், ட்ராம் வண்டி ரயில் வண்டியில் போகும்பொழுதும் படிக்கக்கூடாது.

## TO RELIEVE PAIN

வலிதீர சிகித்ஸை.

ப்ளானலில் 6 அங்குல சதுரத்தில் ஒரு பை தைத்து அதில் உப்பைப் பொடித்து சூடுண்டாகும்படி செய்து வலியுள்ள பாகங்களில் அதை வைத்து ஒத்தினால் வலி நீங்கும். சூட்டுக்கு வலியைப்போக்கும் குணமிருக்கிறது.

## MOTOR DRIVE & HEALTH

மோடார்வண்டி ஸவாரியும் தேகாரோக்யமும்.

மோட்டார் வண்டி ஸவாரி செய்வதால் ஒருவருக்கு ஸமுத்ர மட்டத்துக்கு 4,5, ஆயிரம் அடி உயரத்திலுள்ள குளிர்ச்சியான ஸ்தலத்தில் வஸிப்பதால் உண்டாகும் தேக ஆரோக்யம் உண்டாகிறதாம்.

## WHITE OF EGGS.

முட்டைகளிலுள்ள வெண்கரு.

முட்டையை உடைத்து வெண்கருவை கொஞ்சம் அடித்து டீ, கோகோ, காப்பி இவைகளிலூற்றி வ்ருத்தாப்பியர்களுக்கும் பலஹீனர்களுக்கும் கொடுத்தால் அவர்களுக்கு காலக்ரமத்தில் பலம் உண்டாகும்.

# The Boys' World

## பையன்கள் பகுதி.

### IRON AND GOLD.
### இரும்பும் தங்கமும்.

இரும்பு—மிஸ்டர் ஸ்வர்ணமய்யா, க்ஷேமமா?

தங்கம்—என்னடா, மட்டு மரியாதை யில்லாமல், ப்ரபு என்பதை சற்றும் எண்ணுமல் பேசுகிருய், கரிப்பயலே.

இரும்பு—ப்ரபோ, அப்படியானுல் தாங்கள் யார் தெரியவில்லையே, தயவு செய்து தெரிவிக்க வேண்டும்.

தங்கம்—என்னை இன்னுரென்று தெரியாதா? ப்ருதிவிக்கெல்லாம் கடவுளா யிருக்கப்பட்ட தன தேவதையென்று உனக்குத் தெரியாதா? வைரம்போல் ப்ரகாசமாயும் விடியற்காலத்து நக்ஷத்ரம்போல் கண்ணுக்கினிமையாயும் உள்ள ஸ்வர்ணம் என்பதை மறந்தாயோ?

இ—போதும் போதும், தங்கள் பெருமை, சற்று நிறுத்திக்கொள்ளுங்கள்.

த—இன்பமடைய விரும்புவோர் என்னை நாடவில்லையா? அழகு செய்துகொள்ள ப்ரியப்படுபவர்கள் என்னைத் தேடவில்லையா? அறிவானது என்னைச் சார்ந்திருக்கிறதல்லவா?

இ—ஆனுல் தாங்கள் ஒன்று மறந்து விட்டாற்போல் இருக்கிறது; அன்பான ஸ்நேகிதர்களிடத்தில் அன்பு மாறுவதும், பிள்ளை அப்பனைக் கொலைவாங்குவதும், பேராசை கொண்டவர்கள் குற்றமில்லாதவர்களைக் கொல்வதும், பஞ்சம் நாட்டிலுள்ளாரை வருத்துவதும், உம்மால் தான் என்பதை மறந்து விட்டீரோ?

த—ஆனுல் இவைகள் உன்னுடைய உதவியையும் கொண்டுதான் நடக்கின்றன.

இ—நானு! குற்றங்கள் புரிவதில் நான் உனக்கு உடந்தையா! அப்படியல்லவே; கர்வங் கொண்டவர்களை யடக்குவதிலும், கெட்டவர்களை தண்டிப்பதிலும், ஏழைகளைக் காப்பாற்றுவதிலும், நல்லவர்களுக்கு உதவியாக வல்லவோ நானிருக்கிறேன்.

த—நீ தாஸனுக்குத்தாஸன்; நானே அரசர்களுக்கெல்லாம் அரசன்.

இ—ரொம்ப வீசவேண்டாம், நான் தான் உன்னை பூமியிலிருந்து வெளியில் எடுக்கிறேன் என்பதை யறிந்துகொள்.

த—நான் உன்னை விலைக்குவாங்கி விடுகிறேன் என்பது தெரியுமல்லவா?

இ—நான் வயல்களை உழுகிறேன். ஸமுத்ரத்தைக் கடந்து செல்லுகிறேன், ஆறுகளுக்குப் பாலம் போடுகிறேன், ஜனங்களுக்கு உடுக்கத்துணி கொடுக்கிறேன், பெரிய மாளிகைகள் கட்டுகிறேன்.

த—அவைகளெல்லாம் என்னுல் தான் சோபிக்கின்றன.

இ—நான் ஜன ஸமூகத்தை ஒன்று கூட்டுவித்து ஜனங்களிடம் ஸஹோதரத்வம் ஏற்படும்படி செய்கிறேன்.

த—நான் என்னிஷ்டம்போல் ஜனங்களை வசப்படுத்துகிறேன். ஜனங்களை நான் அதிக ஒற்றுமையுடன் இருக்கும்படி செய்கிறேன்.

இ—ஏன் சும்மா வீண்பேச்சுப் பேசுகிருய். நான் இல்லாவிட்டால் நீ இந்த ஸூர்யனைப் பார்த்திருக்கவேமுடியாது. என்னுல்தான் உனக்கு இந்த பூலோக வாழ்க்கையே ஏற்பட்டது.

த—இப்போது உன்னுடைய மேன்மை விளங்கிற்று. இனிமேல் நாம் இருவரும் ஸ்நேகிதர்களாக இருப்போம். எதிலும் உள்ள நன்மைகளை க்ரகித்துக் கொள்வோம்,

## A STUDENT MILKMAN.

ஒரு மாணவ பால்காரன்.

படிப்பதில் ஆவல்கொண்டு, ஆனல், படிப்பதற்கு ஆகும் செலவுக்கு போதுமான பணமில்லாத சில மேல் நாட்டு மாணவர்கள் தங்கள் பாடங்களைப் படிக்கும் நேரம்போக மற்ற நேரங்களில் ஏதாவது வேலைசெய்து பணம் ஸம்பாதித்து தங்கள் செலவுக்கு வைத்துக் கொள்வது வழக்கம். நமது தேசத்திலும் சில மாணவர்கள் தங்களுடைய படிக்கும் நேரம் போக மற்றவேளையில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் வேறுபிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துப்பணம் ஸம்பாதிப்பதுண்டு.

அமெரிக்காவில் உள்ள ஒரு விவஸாயக் காலேஜில் வாசிக்கும் ஒரு மாணவருக்கு ஒரு மோடார் ஸைகிள் இருக்கிறது. அவர் தமது காலேஜில் உள்ள பால் தயிர்ச் சாலையிலிருந்து பால், வெண்ணெய் முதலியவைகளை எடுத்துக் கொண்டுபோய் பட்டணத்திலுள்ள ஜனங்களுக்கு விற்றும், ஸைகிளில் ஏறிக்கொண்டு போய் 15-20-மைல் தூரத்துக் கப்பாலும் உள்ள விவஸாயிகளிடமிருந்து பால், பாலேடு முதலியவைகளை வாங்கிக்கொண்டு வந்து காலேஜுக்குக் கொடுத்தும், கூலி பெறுகிறார். பாலையும் பாலேட்டையும் பெரிய பாத்ரங்களில் ஊற்றி மோடார் ஸைகிளின் பின்சக்ரத்தில் தொங்கவிட்டுக் கொள்ளுகிறாராம்.

இப்படி வாசித்துக் கொண்டிருக்கும் போதே மற்ற அலுவல்களைப் பார்ப்பது படிப்புக்குக்கெடுதலாக முடியும். ரொம்ப தரித்ரத்தால் கஷ்டப்பட்டாலன்றி பேராசையினால் பணம் ஸம்பாதிக்க எண்ணங்கொண்டு இப்படிச் செய்வது ரொம்பப்பிசகு.

## TO FIND THE CUBE ROOT

கனமூலம் கண்டுபிடித்தல்.

ஒரு எண்ணை அதாலேயே ஒரு தடவை பெருக்கி வந்த தொகை முதல் எண்ணின் ஸ்கொயர் அதாவது வர்க்கம் என்று சொல்லப்படும். பெருக்கி வந்த தொகைக்கு முதலில் கொடுத்த எண் ஸ்கவ்யர்ரூட் அதாவது வர்க்க மூலம் என்று சொல்லப்படும். உதாரணமாக, 3-ஐ 3-ஆல் பெருக்கி வந்த 9-மூன்றின் வர்க்கம் என்று சொல்லப்படும். 3-ஒன்பதின் வர்க்க மூலமாகும். ஒரு எண்ணை அதனாலேயே இரண்டு தடவை பெருக்கினல் வந்த தொகை அந்த எண்ணின் க்யூப் அதாவது கன அம்சம் என்று சொல்லப்படும். பெருக்கி வந்த தொகைக்கு முதல் எண் க்யூப்ரூட் அதாவது கனமூலம் ஆகும்.

$$3 \times 3 \times 3 = 27$$

இதில் 27-க்கு 3-கனமூலம். பெரிய எண்களுக்கு கனமூலம் கண்டுபிடிப்பதற்கு ஒரு ஸுலபமான வழி யிருக்கிறது.

முதலாவது, ஒன்று முதல் 9-வரையில் உள்ள எண்களின் கன அம்சங்களை அதாவது க்யூப்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

$$1 \times 1 \times 1 = 1$$
$$2 \times 2 \times 2 = 8$$
$$3 \times 3 \times 3 = 27$$
$$4 \times 4 \times 4 = 64$$
$$5 \times 5 \times 5 = 125$$
$$6 \times 6 \times 6 = 216$$
$$7 \times 7 \times 7 = 343$$
$$8 \times 8 \times 8 = 512$$
$$9 \times 9 \times 9 = 729$$

இவற்றில், 1,4,5,6,9 ஆகிய இந்த எண்களின் கன அம்சங்களின் அதாவது க்யூப்களின் கடைசி எண்கள் அந்த எண்களாகவே இருக்கின்றன. 2-ன் கன அம்சம் அதாவது க்யூப் 8 ஆகவும், 8-ன் கன அம்சம் 2-ல் முடிந்ததாகவும் இருக்கின்றன. 3-ன் கன அம்சம் 7-லும், 7-ன் கன அம்சம் 3-லும் முடிகின்றன. இந்த விஷயங்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்வோம். எந்த எண்

னுக்காவது கன மூலம் கண்டுபிடிக்க வேண்டுமானால் முதலில் ஆயிரத்தை கவனிக்கவேண்டும். உதாரணமாக 185,193ஐ எடுத்துக்கொள்வோம். 185 ஆயிரங்கள் இருக்கின்றன. 5-ன் கன அம்சம் 125, 6-ன் கன அம்சம் 216, ஆகவே நாம் கண்டுபிடிக்க வேண்டிய எண் 50-க்கும் 60-க்கும் நடுவில் இருக்கிறது. கடைசி எண்ணைப் பார்ப்போம். கடைசி எண் 3-ஆகையால் கன மூலத்தின் கடைசி எண் 7-ஆகும். ஆகையால் கனமூலம் 57. இன்னொரு உதாரணம்; 12,167, முதலில் ஆயிரங்கள் 12. 2-இன் கன அம்சம் 8. 3-இன் கன அம்சம் 27, ஆகவே கன மூலத்தின் முதல் எண் 2-என்று ஏற்படுகிறது. கன அம்சத்தின் கடைசி எண் 7-ஆகையால் கன மூலத்தின் கடைசி எண் 3-என்று ஏற்படுகிறது. ஆகவே 12,167-ன் கன மூலம் 23 ஆகும். இப்படி கன மூலங்கள் ஸுலபமாய்க் கண்டுபிடித்து விடலாம்.

## THE TIME OF THE MAHABARATA.

### மகா பாரதத்தின் கால நிர்ணயம்.

மகாபாரதயுத்தம் த்வாபர யுகத்தின் கடைசியில் நடந்ததென்றும் கலியுகம் பிறந்து 5000-வருஷத்துக்கு மேலாகிறதால் யுத்தம் 5000-வருஷத்துக்கு முன்னால் நடந்திருக்கவேண்டுமென்றும் சிலர் சொல்லி வருகிறார்கள். இது விஷயமாய் ஆராய்ச்சி செய்த சில நிபுணர்கள் மகாபாரத ஸம்பவங்கள் கி. மு. 14-வது நூற்றாண்டில், அதாவது, ஸுமார் 3300-வருஷங்களுக்குமுன் நடந்தன வென்று ஸித்தாந்தம் செய்திருக்கிறார்கள். ஆயினும், ஸமீபத்தில் ப்ரொபஸர் ஜகேச சந்த்ர ராய் என்பவர் மகாபாரத க்ரந்தத்தில் குறிக்கப்பட்டிருக்கும் க்ரகங்களின் நிலைகளைக்கொண்டு ஆராய்ந்து பார்த்ததில் யுத்தம் கிறிஸ்து பிறக்குமுன் 24-வது நூற்றாண்டில், அதாவது, இப்போதைக்கு ஸுமார் 4300 வருஷங்களுக்கு முன் நடந்ததென்றும், மகாபாரத புஸ்தகத்தில் பெரும் பாகம் ஸுமார் 3200 வருஷங்களுக்கு முன் எழுதப்பட்டதென்று தெரிய வருகிறதென்றும், சொல்லுகிறார்.

## VOLUME OF WATER UPON THE EARTH.

### பூமிமேலுள்ள நீரின் அளவு.

பூமியின் மேற்பரப்பிலுள்ள நீரின் அளவு 31 கோடி 30 லக்ஷம் கனமைல் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. (ஒருமைல் நீளம் ஒரு மைல் அகலம்; ஒருமைல் ஆழம் இருந்தால் அந்த அளவுக்கு ஒரு கனமைல் என்று பெயர்.)

| | | கனமைல். |
|---|---|---|
| ஸமுத்ரங்களிலுள்ள ஜலம் | ... | 31,20,00,000 |
| த்ருவங்களிலுள்ள பனிக் கட்டிகள் | ... | 8,40,000 |
| ஏரிகளும், குளங்களும், | ... | 60,000 |
| ஆறுகள் | ... | 12,500 |
| ஆகாயத்திலுள்ள ஈரம் | ... | 2,952 |
| சதுப்பு நிலம் | ... | 1,440 |
| பனி | ... | 67 |

பூமியின் அளவு 2,59,000 கோடி கனமைலாகையால் பூமிமேலுள்ள ஜலம் பூமியின் அளவில் 830-ல் ஒரு பாகமாயிருக்கிறது.

## A PLANT THAT CATCHES FISH.

### மீன் பிடிக்கும் செடி.

ப்ளாடர் வொர்ட் (Bladderwort) என்பது ஜலத்தில் வளரும் ஒருவகைச் செடி. இது பூச்சிகள், சிறு ப்ராணிகள் இவைகளால் அழிக்கப்படாமல் காத்துக்கொள்வதே யல்லாமல் தனக்கு உணவாக புழு, மீன்கள் ஆகிய இவைகளையும் பிடித்துத் தின்கிறதாம். அது தண்ணீருக்குள் மூழ்கி யிருக்கும். அதன் இலைகள் நாலாபக்கங்களிலும் பரவியிருக்கும். இலைகளில் சிறிய பைகள்போன்ற பாகங்கள் இருக்கின்றன. அந்தப் பைகளில் காற்று நிரம்பியிருக்கிறது. பையின் ஒரு புறத்தில்

சிறிய குழிவு இருக்கிறது. அதன் வழியாக சிறு புழுக்களும் மீன்களும் உள்ளே செல்ல லாம். உள்ளே ஒரு சிறிய கதவுபோன்ற பா கம் இருக்கிறது. அதைத் தள்ளினல் திற ந்து விடுகிறது. உள்ளே சென்றுவிட்டால் திரும்பி வரமுடியாதபடி கதவு அமைக்கப்பட் டிருக்கிறது. புழுக்களும் மீன்களும் கதவு போன்ற பாகத்தைத் தள்ளிக்கொண்டு உள் ளே போய்விட்டால், பிறகு அவைகள் வெளி யே திரும்பி வரமுடியாமல் அங்கே இறந்து போய் செடிக்கு ஆகாரமாய் விடுகின்றன. இய ற்கையின் அமைப்புகள் தான் என்ன விநோத மாயிருக்கின்றன!

## SPEED OF ANIMALS.

மிருகங்களின் வேகம்.

குதிரையைவிட அதிகவேகம் ஓடக்கூடிய மிருகம் ஒன்றுமில்லை. குதிரை ஓடும்போது போட்டக்ராப்கள் எடுத்துப் பார்த்ததில் ஒருத டவை தாவுவதில் 26 அடிவரையில் ஓடக்கூடும் என்று தெரியவருகிறது. ரொம்ப வேகமாய் ஓடும் பந்தயக் குதிரைகள் ஓடும்போது பின் னங்கால்கள் கழுத்துக்குமேல் ரொம்ப தூரம் உயர்ந்துவிடுகிறது. முயல் ரொம்பவேகம் என்று சொல்வது ஸகஜம். ஆனல் அது நாயை விட அதிகவேகமாய் ஓடாது. நாயோ குதிரை வேகம் ஓடுவதில்லை. கிராபி என்னும் ஒட் டச் சிவிங்கி அதிகப்பக்ஷம் ஸெகண்டுக்கு 15 கஜ தூரம் ஓடும். ஸெகண்டுக்கு 2 கஜம் விதம் ஓடும் யானையானது 6 குதிரை பாரம் உள்ளது.

## THE CZAR AS A SOLDIER.

ஸ்ஸார்போர் வீரனுக இருந்தது.

இப்போது "எல்லா ரஷ்யாக்களுக்கும் ஸ்ஸார்" என்று பட்டப்பெயர் வகித்து ரஷ்யா வை ஆண்டுவரும் நிக்கலாஸ் சக்ரவர்த்தி சிறு பையனுக இருந்தபோது அவரை ஓர் குடித் தனக்காரப் பையன்போல் நடத்தி வந்தார் களாம். மூன்றுவது அலெக்ஸாண்டர்சக்ரவர்த் தியின் 16-ம் ரெஜிமெண்டில் ஒரு ஸோல் ஜராக வேலைபார்த்து வந்தார். அப்படி வேலை பார்த்து வந்தபோது அவர் மிகப்பளுவான ராணுவச் சட்டையும், பைகளில் 120 சுற்றுத் தோட்டாக்களையும் போட்டுக்கொண்டு, மண் வெட்டி அல்லது கட்டப்பாரையைத் தூக்கிக் கொண்டும், சோற்றுப்பையை மாட்டிக்கொ ண்டும், நடப்பாராம். அவர் தூக்கிக்கொண்டு போகும் ஸாமான்கள் துப்பாக்கியைச்சசேர்க் காமல் 100 ராத்தல் நிறையிருக்கும். யுத்தப் பயிற்சி செய்விக்கும் தாழ்ந்த உத்யோக ஸ்தன் அவரை இவ்வளவு சுமையுடன் 7-மைல் தூரம் மேடுபள்ளங்களில் நடத்திக் கூட்டிக் கொண்டு போவானும். வழியில் எந்த உத்யோ கஸ்தர் எதிர்ப்பட்டாலும் அவருக்கு நிக்க லாஸ் ஸலாம் செய்யவேண்டுமாம். ரெஜிமெ ண்டின் புஸ்தகத்தில் இவர் பெயர் ப்ரைவேட் நிக்கலாஸ் ரோமனுப் என்று மாத்ரம் எழுதப் பட்டிருந்தது.

## TIME FOR WORK.

வேலை செய்ய வேளை.

இரவு 10-மணிவரையில் படிக்கவோ எழுத வோ வேண்டியதைச் செய்து விடவேண்டும். பிறகு தூங்கிவிட்டு விடியற்காலம் 5 மணிக் கெழுந்து 6 மணிவரையில் வேலை மறுபடியும் செய்யலாம். சிலர் பின்ராத்ரி 2 மணிக்குகெழு ந்து 5 மணிவரை வேலைசெய்வார்கள். ஓய் ந்து நிசப்தமாயிருக்கும்பொழுது மூளையானது சுருசுருப்பா யிருக்கும்; படிப்பதானது மூளை யில் நன்றுய்ப் பதியும். எழுதுவது கருத்துக் கள் நிரம்பியதாயிருக்கும்.

# The Ladies' World.

# ஸ்த்ரீகள் பகுதி.

## A SMALL INDUSTRY FOR WOMEN.

BY.

P. V. VAMANAMURTI RAO.

### ஸ்த்ரீகளுக்கு ஒரு சிறுதொழில்.

நூறு ரூபாய் முதல் போடக்கூடிய ஏழை ஸ்திரீ எந்தத்தொழிலைச் செய்தால் அதிகலாபம் கிடைக்கும். ஸ்வல்ப முதல் வைத்துக்கொண்டு ஆரம்பிக்கக்கூடியதொழில்கள் பலஉண்டு. தான்யவ்யாபாரம், ஹாஸ்ஸான்காப், ஸாக்ஸ்முதலானவைகளைச்செய்து விற்பது, ஸ்திரீகளுக்கு உபயோகமான சீட்டிகள் ரவிக்கைகள் முதலானவைகளை வாங்கிவிற்பது, முதலியவை. இவைகள் எல்லாவற்றையும் விட நெல் அறுவடையாகும் காலங்களில் ஸலீஸான விலைக்கு நல்ல நெல்வாங்கி அவல் பட்டரைவைத்து அவல் இடித்து வ்யாபாரம் செய்வதுதான். நெல் அறுவடை காலத்தில் 100 பட்டணம் படி கொண்ட ஒரு பல்லா இந்த ப்ராந்த்யங்களில் 7-ரூபாய்-க்கு விற்கிறது. இன்னும் தக்ஷணஜில்லாக்களில் 30, 32 வள்ளம் கொண்ட சலகை ஒன்று 5 ரூபாய்க்கு விற்கிறது. ஸராஸரி ரூபாய் 1 க்கு 6 முதல் 7 வள்ளம் வரையில் வாங்கலாம். பாழ், பதர் எல்லாம் போக ரூபாய்க்கு $5\frac{1}{2}$ வள்ளம் தேறினால் 100-க்கு 550 வள்ளம் நெல்லுக்குக்குறையாது. உரலில் ஆள் குத்தினால் அவல் 5-க்கு 4 காணும். ஏற்றத்தில் இடித்தால் ஸரிக்கு ஸரிகாணுகிறது. அதாவது, 550 வள்ள நெல்லுக்கு 550 வள்ளம் அவல் காணுகிறது. ஆதலால், ஏற்றத்து அவலுக்கு தான் வ்யாபாரத்தில் லாபம் கூடிவரும். வீட்டிலிருந்தவர்களே ஏற்றத்தை மிதித்தால் அதற்காக செலவில்லை. விறகுக்கு மாத்ரம் செலவு ஏற்படும். ஏற்றத்தை மிதிக்க மாத்ரம் ஒரு ஆள் வைத்துக்கொண்டால் நாள் 1-க்கு 1 பெண் ஆளுக்கு $2\frac{1}{2}$ அணாகூலி கொடுக்க வேண்டும். நெல் வறுப்பதற்கும், ஏற்றம் மிதிப்பதற்குமாக இரண்டாள் வைத்துக்கொண்டால் நாள் 1-க்கு 5 அணா கூலி ஏற்படுகிறது. நாள் 1 க்கு 6 வள்ளம் நெல்வறுத்துக்குத்தலாம். 550 வள்ள நெல்லை 3 மாதம் அதாவது 90 நாளில் குத்தலாம். ஓரிரண்டு விறகு அடுப்பில் வைத்து அவல் புடைத்த உமியையும் அடுப்பில் போட்டு எரித்து நெல் வறுப்பார்கள். இப்படிச்செய்தால் விறகு ஜாஸ்தி கொள்ளாது. வள்ளம் 1-க்கு $\frac{1}{4}$ அணா விறகு வைத்துக்கொள்ளலாம். மொத்தமாய் விறகு வாங்கிக்கொண்டால் அதைவிடக்குறையும். ஆகிலும் கணக்குக்கு $\frac{1}{4}$ அணா வைத்துக்கொண்டால் 550 வள்ளத்துக்கு ரூபா 8-9-6 ஆகிறது. இதைத்தவிர, முதல் வருஷத்தில் கல் உரல் வகையறுவுக்காக அடியில் கண்டபடி செலவு செய்ய வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| கல் உரல் 1-க்கு க்ரயம் | | ரூ. 1 | 8 | 0 |
| | நீ. அ. க. க.அ. | | | |
| 1 விட்டம் ... | $8 \times \frac{3}{4} \times \frac{3}{4} = 4\frac{1}{2}$ | | | |
| 2 குத்துக் கால்கள் | $2 \times 2 \times \frac{8}{12} \times \frac{4}{12} = \frac{8}{9}$ | | | |
| இருசுக் கட்டை | $1\frac{3}{4}$ அடி | | | |
| நீளம், குருக்களவு | 4 அங்குல | | | |
| முள்ளதற்கு | $\frac{7}{4} + \frac{22}{7} + \frac{1}{6} + \frac{1}{6} = \frac{11}{12}$ | | | |
| | ஆக கன அடி $5\frac{13}{24}$ | | | |
| வேலை மானம் செய்த கன அடி 1-க்கு 4 ரூ. வீதம் ... ... ... | | | | |
| $5\frac{18}{24}$ கன அடிக்கு க்ரயம் ... | | 22 | 2 | 8 |
| உலக்கை 1-க்கு மொத்த க்ரயம் | | 0 | 8 | 0 |
| விட்டம் வகைரா சேர்த்து நட கூலி | | 1 | 0 | 0 |
| | ஆக ரூ. ... | 25 | 2 | 8 |

அடுத்த வருஷத்துக்கு இந்தச் செலவு கிடையாது.

மறுவருஷம் முதல் கொண்டு ஆதாயத்தின் விவரம். குத்தப்பட்ட அவலை கடைக்காரர்களுக்கு விற்ருல் ரூபாய் 1-க்கு $1\frac{1}{2}$ வள்ளம் வீதம் விற்கலாம். கடையில் இப்போது அவல் வள்ளம் ஒன்று $\frac{3}{4}$ ரூபாய்க்கு விற்று வருகிறது.

| | ஆள் இல்லா திருந்தால். | ஒரு ஆள் வைத்தால் | இரண்டு ஆள் கிளை வைத்தால் |
|---|---|---|---|
| ரூ. 1-க்கு $1\frac{1}{2}$ வள்ளம் வீதம் 550 வள்ளத்துக்கு ரூ. ... | 366 10 8 | 366 10 8 | 366 10 8 |
| ஆள் கூலி நாள் 1-க்கு $2\frac{1}{2}$ அணா வீதம் 90 நாளுக்கு ... | ... | 14 1 0 | 28 2 0 |
| விறகு வள்ளம் 1-க்கு $\frac{1}{4}$ அணா வீதம் 550 வள்ளத்துக்கு ... | 8 9 6 | 8 9 6 | 8 9 6 |
| மொத்த செலவு ... | 8 9 6 | 22 10 6 | 36 11 6 |
| விகரம் ...<br>இதில் கைமுதல் வஜா ... | 358 1 2<br>100 0 0 | 344 0 2<br>100 0 0 | 329 15 2<br>100 0 0 |
| நிகரம் லாபம் ...<br>ஷ 1-க்கு லாபம் ...<br>ஸராஸரி ஷ 1-க்கு ... | 258 1 2<br>86 0 5<br>85 0 0 | 244 0 2<br>81 5 5<br>80 0 0 | 229 15 2<br>76 10 5<br>75 0 0 |

மேற்கண்ட கணக்கினுல் லாபம் இவ்வளவென்பது பரிஷ்காரமாய்த் தெரியவருகிறது. ஒருவேளை நெல்லின் க்ரயம் அதிகமாகவும் அவலின் விலை அதிகமலிவாயும் இருந்தால் லாபம் கிடைக்குமாவென்று யோசிக்கக்கூடும். லாபம் எக்காலத்திலும் கிடைத்து வருமென்பதில் ஸந்தேகமேயில்லை. எப்படி என்ருல், நெல் ரூபா 1 க்கு 4 வள்ளம் என்றும், அவல் கடைக்காரர்களுக்கு ரூபா 1-க்கு 2 வள்ளம் விற்பதாகவும், கூலி ஆளுக்கு நாள் 1-க்கு 3-அணு கொடுப்பதாகவும் வைத்துக்கொள்ளலாம். அப்போது 100-ரூபாய்க்கு 400 வள்ளம் நெல் கிடைக்கும். இதை 66 நாளில் இடிக்கலாம். இதின் ஆதாயம் அடியில் விவரித்திருக்கிறது:—

| | ஆள் இல்லா திருந்தால். | ஒரு ஆள் வைத்தால். | இரண்டு ஆள் கிளை வைத்தால். |
|---|---|---|---|
| 400-வள்ளம் அவலின் க்ரயம் வஜா. ... | 200 0 0 | 200 0 0 | 200 0 0 |
| ஆள் கூலி 66-நாட்களுக்கு நாள் 1-க்கு 3-அணு வீதம் ... | ... | 12 6 0 | 24 12 0 |
| 400-வள்ளம் நெல் வறுக்க விறகின் க்ரயம் வள்ளம் 1-க்கு $\frac{1}{4}$-அணு வீதம் ... | 6 4 0 | 6 4 0 | 6 4 0 |
| ஆக ... | 6 4 0 | 18 10 0 | 31 0 0 |
| விகரம் ...<br>இதில் கைமுதல் வஜா ... | 193 12 0<br>100 0 0 | 181 6 0<br>100 0 0 | 169 0 0<br>100 0 0 |
| நிகரம் ...<br>ஷ 1-க்கு லாபம் ...<br>ஸராஸரியில் ... | 93 12 0<br>42 9 10<br>40 0 0 | 81 6 0<br>36 15 10<br>35 0 0 | 69 0 0<br>31 5 10<br>30 0 0 |

இதுவுமல்லாமல் ஒருபடி அவலை வறுத்தால் 2-படி ஆகிறது. இதனேடு கொஞ்சம் தட்டைப்பயிறு, கடலை, தேங்காய் அல்லது கொப்பரை வறுத்துக் கொஞ்சம் காரமும் சேர்த்து பொரிகொள்ளு செய்து விற்ருல் பட்டணம் படி ஒன்று அரை ரூபாய்க்கு விற்கலாம். இதையும் கொஞ்சபாசம் செய்து வீட்

டில் வைத்துக்கொண்டு விற்று வரலாம். அல்லது ஒரு ஆளை நியமித்து ஊருக்குள் கொண்டு போய் விற்கச்செய்தாலும் செய்யலாம். வள்ளம் ஒன்றுக்கு ஒரு அணு அல்லது 2 அணு கூலி கொடுப்பதாய் நியமித்தாலும் வள்ளம் ஒன்றுக்கு கூலிபோக 14 அணு கிடைக்கும்.

மற்ற வ்யாபாரங்களில் இதைவிட குறைந்த லாபந் தான் கிடக்கும். அவல் வ்யாபாரத்தைப் போல் அவ்வளவு துரிதமாயும் வ்யாபாரம் நடக்காது. ஆகையால் அவைகளைப்பற்றி கணக்கு விவரம் கண்டு இங்கு எழுதவில்லை.

கர்நூல்-பி. வி. வாமனமூர்த்திராவ்.

## MODESTY.

### அடக்கம்.

அமெரிக்காவைச்சேர்ந்த கனடாதேசத்தில் ப்ரூகெவி என்னும் ஆர்ச்பிஷப் ஸமீபத்தில ஆயிரக்கணக்கானஸ்த்ரீகள் அடங்கிய ஒரு மீட்டிங்கில் ஸ்த்ரீகளுக்கு இருக்கவேண்டிய அடக்கமான நடத்தையைப்பற்றி ப்ரஸங்கம் செய்தார். அந்த ப்ரஸங்கத்தில் அவர் ஏழை ஸ்த்ரீகளும் பணக்கார ஸ்த்ரீகளும் தற்போது ஆடம்பரமாயும் மரியாதைக்குறைவாயும் உடைகள் உடுத்துக்கொள்வதைக் கண்டித்துப்பேசி அப்படி மரியாதைக்குறைவாய் ஸ்த்ரீகள் உடுத்திக்கொள்வதை நிறுத்த தாம் ப்ரயத்தனப்படுவதாயும், எல்லா ஸ்த்ரீகளும் அதுவிஷயம் தமக்கு உதவிசெய்யவேண்டுமென்றும், கேட்டுக்கொண்டார். "தற்காலத்திய உடையானது மரியாதை நாணம் இவைகளுக்கு விரோதமாயும், மதப் பயிற்சிக்கு ப்ரதிகூலமாயும், தர்மாசாரமே இல்லாமலும் இருக்கிறது. மரியாதை, களங்கமில்லாமை, ஹ்ருதய சுத்தம் ஆகிய இவைகள் இனிமேல் நமது குடும்பங்களில் இல்லாமல் போகும்படிவிடுகிறதா? ஒவ்வொரு வீட்டிலுள்ள பெரிய ஸ்த்ரீகளும் தங்களுடைய சிறு பெண்கள், தங்கைகள் முதலியவர்கள் ரொம்ப மரியாதையாய் நடந்துகொள்ளும்படி அவர்களுடைய மனசை நல்வழிப் படுத்தவேண்டியது பெரிய ஸ்த்ரீகளுடைய கடமையாகும். இந்தப்புது நாகரீகத்தை நீக்குவதற்காக ஸ்த்ரீகளெல்லாம் ஒன்று கூடிப் பாடுபட்டால் இதனால் ரொம்ப நன்மை ஏற்படக்கூடும். உங்கள் வீடுகளில் இந்தப் புதுவழக்கத்தை நிறுத்துங்கள். உங்கள் ஸ்நேகிதர்களிடத்தில் இந்த வழக்கம் ஏற்படாதபடி பார்த்துக்கொள்ளுங்கள். மரியாதை, கற்பு, சீராய் உடைதரித்தல் ஆகிய இவைகளை உங்களிடத்தில் பரவும்படி செய்யுங்கள். ஒரு ஸ்த்ரீயினுடைய மேன்மையென்பது அவளுடைய அடக்க ஒடுக்கம், கற்பு, உண்மையான நாகரீகத்தில் திருந்திய நடத்தை, ஆகிய இவைகளாக இருக்கட்டும். இந்த என் முயற்சியில் நீங்கள் உதவிசெய்தால் கடவுள் உங்களுக்கு க்ஷேமத்தைக் கொடுப்பார்" என்றிப்படிப்பேசினர். இப்படிப் பேசினதை யோசிக்கும்போது கனடா தேசத்து ஸ்த்ரீகளின் நடை உடைவிஷயங்களில் பெருங்குறைபாடுகள் ஏற்பட்டிருக்கின்றன வென்று ஊகிக்க வேண்டியிருக்கிறது. நம்முடைய தேசத்தில் சிறுவர்கள் மேல் நாட்டாரைப்போல் நிஜார் பூட்ஸ்போட ஆரம்பித்து விட்டார்களானாலும் இன்னம் நம்முடைய ஸ்த்ரீகள் ஐரோப்பிய ஸ்த்ரீகளைப்போல் உடுக்க ஆரம்பிக்காதது அவர்களுக்கு புராதனமான ஆசாரங்களில் உள்ள பிடிமானத்தைக் காட்டுகிறது. இது நமது ஸ்த்ரீகளினிடத்திலுள்ள நற்குணமேயாகும்.

## IS IT CIVILISIZATION ?

### இது தான் நாகரீகமோ ?

அமெரிக்கா ஐக்யமாகாணங்களில் உள்ள ஸாலம் என்னும் இடத்தில் ஒரு வைத்யசாலை கட்டியிருக்கிறார்கள். அந்த வைத்யசாலை நடந்து வருவதற்குப் பணம் சேர்ப்பதற்காக அவ்வூரிலுள்ள சில அழகு வாய்ந்த பெண்கள் தங்களை அன்யபுருஷர்கள் முத்தமிடவிட்டுப்

பணம் சேகரித்தார்களாம். நல்ல வம்சத்தைச் சேர்ந்தஒரு அழகுள்ள பெண்ணை 1666 தடவைமுத்தமிட்டார்களாம். இவைகளைப் போலவே மற்றம் பெண்களையும் கிட்டத்தட்ட அவ்வளவுதடவைகள் முத்தமிட்டார்களாம். மொத்தம் 10,000 முத்தங்கள் கொடுக்கப்பட்டன. ஒவ்வொரு முத்தத்துக்கும் 3 ரூபாய் வீதம் வஸூலிக்கப்பட்டது.

கிழவர்களும் யெளவன வயதுள்ளவர்களும் வரிசையாய் நின்றுகொண்டு ஒவ்வொருவராய் முத்தமிட்டார்களாம். சிலர் ஒரு தடவை முத்தமிட்டதில் த்ருப்தியடையாமல் திரும்பவும் முத்தமிட்டார்களாம். எல்லாரும் முத்தமிட்டு முடிய 2 மணி நேரம் சென்றது. இதுதானு நாகரீகம்! என்ன தான் தர்ம கைங்கர்யததுக்குப் பணம் சேர்ப்பதென்ருலும் இந்த மாதிரி செய்வதா உயர்ந்த நாகரீகம்!

## COAT STAND FOR CHILDREN.

### குழந்தைகளுக்கு கோட் ஸ்டாண்ட்.

தங்களுடைய சட்டைகளையும் குல்லாய்களையும் மாட்ட அவர்களுக்கு எட்டும்படியான உயரத்தில் கோட்ஸ்டாண்டென்கிற சொக்காய் மாட்டிகளை அடித்து வைக்கவேண்டும். பள்ளிக்கூடத்தி லிருந்து அவர்கள் வந்ததும் தங்கள் சட்டைகளைக்கழற்றி மூலையிலே போடும்படி விடாமல் அவைகளைக் கழற்றி தாய்மார்கள் கோட்ஸ்டாண்டில் தாங்களே மாட்டியோ, மாட்டச் சொல்லியோ பார்த்து வருவார்களானுல், பிறகு குழந்தைகள் தாங்களே அப்படிச் செய்யப்பழகி விடுவார்கள். இதனுல் அவர்களுடைய சட்டைகள் அதிகமாய் அழுக்காகாமல் சுத்தமாயிருக்கும். அவர்கள் சட்டையை வாங்கவும், போடவும் பிறத்தியாரை எதிர்பார்க்கமாட்டார்கள். கால க்ரமத்தில் அவர்கள் தங்கள் கார்யங்களைத் தாங்களே செய்ய இது அப்யாஸ பாடமாகும்.

## SOCIAL REFORM IN MYSORE.

### மைஸூரில் ஆசாரத்திருத்தம்.

போனமாஸம் 14-தேதி யன்று மைஸூர் ப்ரதிநிதி ஸபை கூடியபோது இரண்டு மெம்பர்கள் 1894-ம் வருஷத்து குழந்தை விவாக ரெகுலேஷனில், பெண்களின் கல்யாணவயஸை 8-லிருந்து 10-க்கு உயர்த்தியும், பையன்களின் கல்யாண வயஸு 18-க்குகுறையக்கூடாதென்றும், மாறுதல்கள் செய்யவேண்டுமென்று ப்ரேரணை கொண்டுவந்தார்கள். மேலும் அவர்களில் ஒருவர் இந்தத் திருத்தங்கள் அனுஷ்டானத்துக்கு வருவதற்கு வைதீக விதிகள் இடங் கொடுக்காவிட்டால், 18-வயஸுக்குக் கீழ்ப்பட்டுள்ள கல்யாணமான பையன்களுக்கு கொடுக்கப்படும் ஸ்காலர் ஷிப்பை நிறுத்தி விடவேண்டுமென்று சொன்னுர். ப்ரேரணையை வோட்டுக்கு விட்டதில் 68-பேர் ஸாதகமாயும் 71-பேர் பாதகமாயும் வோட்டுக்கொடுத்தார்கள்.

அதன்மேல் திவான், இவ்வளவு பேர் அதற்கு எதிராக இருப்பதால் கவர்ன்மெண்டார் அந்த ப்ரேரணை விஷயமாக ஒன்றும் செய்யமுடியாதென்று சொன்னுர்.

## COCOANUT CHUTNEY.

### தேங்காய்ச் சட்ணி.

பாணலியில் 2 ரூபா எடை எண்ணெய் அல்லது நெய்யை விட்டு அடுப்பிலேற்றி நன்ருய்க் காயவிட்டு, $\frac{1}{2}$ ரூபா எடை மிளகாய், $\frac{1}{3}$ ரூபா எடை கடுகு, $\frac{1}{8}$ ரூபா எடை உளுத்தம் பருப்பு இவைகளைப்போட்டு சிவக்க வறுக்கவும், நல்ல மணமுண்டாகும் பொழுது துருவின தேங்காய் 7 ரூபா எடையைப் பாணலியில் கொட்டி பாதிவதங்கும்படி செய்து அடுப்பிலிருந்து கீழே இறக்கி விடவேண்டும். பிறகு 1ரூபா எடை உப்பு, 1 ரூபா எடை புளி, கொஞ்சம் பெருங்காயம், இவைகளைச்சேர்த்து அம்மியில் வைத்து அறைத்து எடுத்துக்கொள்ள வேண்டும். அதிகமாய் அறைத்து விடக் கூடாது.

SUPPLEMENT TO THE "PRACTICAL LIFE."

"பிழைக்கும் வழி"க்கு அனுபந்தம்.



H. KALLENBACH.

எச். காலன்பக்.



M. K. GANDHI.

எம். கே. காந்தி.



H. S. L. POLAK.

எச். எஸ். எல். போலக்.

# Story and Biography.

## கதையும் ஜீவ்ய சரித்ரமும்.

### MOHAN DAS GANDHI.

#### மோகனதாஸ் காந்தி.

தற்போது பொது விஷயங்களில் கவனம் செலுத்தும் ஒவ்வொரு இந்தியரும் கவனித்து வருவதான தென்னாப்பிரிக்க இந்திய விவாதத்தைப்பற்றி மாஸவர்த்தமானம் என்னும் பகுதியில் விரிவாய் குறித்திருக்கிறோம். தென்னாப்பிரிக்காவிலுள்ள இந்தியர்கள் தங்களுடைய ஸ்வதந்தரங்களைப் பெறுவதற்கு முயற்சி செய்வதில் அவர்களுக்குத் தலைவராக இருந்து அவர்களுக்காக மிகவும் உழைத்து வருபவர் இந்திய தேச பக்தர்களுக்குள் சிறந்தவர்களில் ஒருவராகிய ஸ்ரீமான்மோஹனதாஸ் காந்தியாகும்.

இவருடைய சரித்ரத்தை யாவரும் அறிய ப்ரியப்படுவார்களாகையால் அதை சுருக்கி எழுதுகிறோம்.

மோஹனதாஸ்காந்தி வடக்கே கத்யவார் ப்ரதேசத்தைச் சேர்ந்தவர். இவருடைய முன்னோர்கள் பல தலைமுறையாக அந்த ப்ரதேசத்திலுள்ள போர்பந்தர் என்னும் ஸமஸ்தானத்தில் திவான் உத்யோகம் வஹித்து வந்திருந்தார்கள். இவருடைய தகப்பனார் அந்த ஸமஸ்தானத்தில் 25-வருஷம் திவான் வேலை பார்த்து வந்தார். அவர் ஜனங்களிடத்தில் ரொம்ப விச்வாஸமுள்ளவராகவும், எது ந்யாயமோ அதையே செய்வதில் ப்ரியம் கொண்டவராகவும் இருந்து வந்தார். போர்பந்தரின் ராஜாவாயினும் ஸரி, பொலிடிகல் ரெஸிடெண்டாயினும் ஸரி, அவர்கள் செய்யும் கார்யம் ந்யாயமல்லவென்று தமக்குத் தோன்றும்போதெல்லாம் அதை எடுத்துக் காட்டி ஆக்ஷேபியாமலிரார். இந்த குணமானது அவருடைய குமாரராகிய ஸ்ரீமான் காந்தியினிடத்திலும் இருந்து விளங்கி வருகிறது.

ஸ்ரீமான் காந்தி 1869-ம் வருஷம் அக்டோபர் மாஸம் 2-தேதி யன்று ஜனனமானார். இவர் பனிய குலத்தைச் சேர்ந்தவர். பால்யத்தில் கத்யவாரிலும் பிறகு லண்டனிலும் வித்யாப்யாஸம் செய்தார்.

இவருக்குத் தமது தாயாரிடம் ரொம்ப அன்பும் விச்வாஸமும் உண்டு. தாயாருடைய சொல்லுக்கு மீறிநடப்பது கிடையாது. இவர் லண்டனுக்குப் போவதில் தாயாருக்கு முதலில் ஸம்மதமில்லாமலிருந்தது. லண்டனுக்குப் போவதால் தம் மகன் கெட்டுப்போவான் என்று எண்ணினதால் அவர் போவதற்கு முதலில் உத்தரவு கொடுக்கவில்லை. ஆயினும் காந்தி தாம் லண்டனிலிருக்கும்போது மாம்ஸம், மதுபானம், ஸ்த்ரீ ஆகிய இவைகள் மூன்றையும் விலக்கிவிடுவதாக ப்ரதிக்ஞை செய்ததின்பேரில் அவர் தாய் லண்டனுக்குப்போக அனுமதி கொடுத்தார். காந்தி லண்டனிலிருந்தபோது அவர் மனம் மாறி அவர் செய்து கொடுத்த ஸத்யத்தினின்றும் தவறுதற்குப் பல ஹேதுக்கள் இருந்தும், ஒரே உறுதியாய், தாம் தவிர்ப்பதாய் வாக்களித்திருந்த மூன்றையும் தவிர்த்து தமது சொல்லைக் காப்பாற்றி வந்தார். காலக்ரமத்தில் இவர் லண்டன் யூனிவர்ஸிட்டியைச் சேர்ந்த ஒரு காலேஜில் வாசித்துத் தேறிப் பிறகு பாரிஸ்டர் பரீக்ஷைக்கு வாசித்து அந்தப் பரீக்ஷையிலும் தேறினார். பிறகு இந்தியாவுக்கு வந்து பம்பாய் ஹைகோர்ட்டில் ஒரு அட்வோகேட்டாக அமர்ந்து உத்யோகம் செய்துவந்தார்.

1893-ம் வருஷத்தில்தான் [illegible] வருக்கு தென்னாப்பிரிக்கா ஸம்பந்தம் ஏ[illegible]ந்த

வருஷம் தென்னுப்ரிக்காவில் இந்தியர்கள் ஸம்பந்தப்பட்ட ஒரு கேஸ் விஷயமாக அங்கு போகவேண்டியிருந்தது. அது வரையில் தென்னுப்ரிக்காவிலுள்ள வெள்ளைக்காரர்கள், தம்மை இங்கலண்டிலுள்ளவர்கள் நடத்தினது போலவே கௌரவமாக நடத்துவார்கள் என்று எண்ணியிருந்தார். எல்லா ப்ரிட்டிஷ் குடிகளும் ஒரே ஸமத்வமான ஸ்வதந்தரங்கள் உள்ளவர்கள் என்னும் கொள்கை, தென் ஆப்ரிக்காவிலும் அனுஷ்டானத்திலிருக்குமென்று எண்ணியிருந்தார். ஆனல் அவர் நேட்டாலுக்குப்போய் அங்குள்ள ஸுப்ரீம் கோர்ட்டில் தம்மை ஒரு அட்வொகேட்டாக சேர்த்துக் கொள்ளும்படி மனுப்போட்டதற்கு, அங்குள்ள சட்ட ஸங்கத்தார் அந்த மனுவை ஆக்ஷேபித்தபோதுதான் தாம் நினைத்துக்கொண்டிருந்தபடி தென்னுப்ரிக்காவில் அனுஷ்டானத்தில் இல்லையென்று தெரியவந்தது. நேட்டால் சட்ட ஸங்கத்தார் வெள்ளைக்காரர்கள்தான் அங்கே வக்கீல் தொழில் செய்யலாமே ஒழிய, வேறுவர்ணத்தார்கள் அந்த உத்யோகம் பார்க்கும்படி விடுவது சட்டத்தின் நோக்கமில்லையென்று வாதித்தார்கள். ஆனல், ஸுப்ரீம்கோர்ட்டார் அந்த அபிப்ராயத்தை ஏற்காமல் மிஸ்டர் காந்தியை ஒரு அட்வொகேட்டாகச் சேர்த்துக்கொண்டார்கள்.

தாம் வந்தகேஸ் விஷயம் முடிந்ததும் தமது ஜன்ம தேசத்துக்குத் திரும்பிப்போக எண்ணினவர், கொஞ்ச காலத்துக்கெல்லாம் அவ்விடத்திலுள்ள தமது தேசவாஸிகளுக்குக் கஷ்டங்கள் நேரப்போகிற தென்பதை முன்னடியே ஊஹித்தறிந்துகொண்டு, ஊருக்குத் திரும்பும் எண்ணத்தை விட்டுவிட்டு, அவ்விடத்திலேயே இருப்பதாக நிச்சயங்கொண்டு, தமது தேசவாஸிகளுடைய க்ஷேமத்தைப்பற்றி கவனிப்[illegible] அங்குள்ள சிலப்ரமுகர்களைச் [illegible]ம் வருஷம் நேட்டால் இந்தியன் காங்க்ரெஸ் என்ற ஒரு ஸபையை ஸ்தாபித்தார்.

அதற்கடுத்த வருஷம், அதாவது 1895-ம் வருஷத்தின் கடைசியில், தென்னுப்ரிக்காவிலுள்ள இந்தியர்களின் குறைகளை இந்திய ஜனஸமூகத்தாரிடம் தெரிவித்துக் கொள்வதற்காக இந்தியாவுக்கு வந்து சேர்ந்தார். அவர் இந்தியாவில் சில இடங்களில் தென்னுப்ரிக்கா இந்தியர்களின் குறைகள் விஷயமாக ப்ரஸங்கங்கள் செய்தும், அவைகளைப்பற்றி விஸ்தாரமாய் எழுதி புஸ்தகம் ப்ரசுரம் செய்துப், இந்தியர்கள் அவைகளில் ஊக்கம் கொள்ளும்படி செய்தார். அதனல் இந்தியர்களுக்கு இவ்விஷயங்களில் அதிக ஊக்கம் உண்டாயிற்று. பம்பாயில் உள்ள ப்ரபல ஆங்க்லோ இந்திய பத்ரிகையாகிய 'டைம்ஸ் அப் இந்தியா' பத்ரிகைகூட இந்தியர்களின் குறைகளைப்பற்றி விசாரணை செய்ய வேண்டும் என்று எழுதிற்று. ஆனல், 'ராய்ட்டர்' தந்திக்காரர்கள் அவருடைய ப்ரஸங்கங்களையும் அவர் எழுதிய புஸ்தகத்திலுள்ள விஷயங்களையும் பற்றி தாறுமாருக தந்தி ஸமாசாரம் அனுப்பி, தென்னுப்ரிக்காவிலுள்ள இங்க்லீஷ்காரர்களிடம் காந்தியைப் பற்றிகெடுதலான அபிப்ராயம் உண்டாகும்படி செய்தார்கள். அவர்கள் அனுப்பின தந்தி பின்வருமாறு:—"இந்தியாவில்ப்ரசுரமான ஒரு சிறுபுஸ்தகத்தில் நேட்டாலிலுள்ள இந்தியர்கள் கொள்ளையடிக்கப் படுகிருர்கள் என்றும், ம்ருகங்களைப்போல் நடத்தப்படுகிருர்கள் என்றும், அவர்கள் இந்தக் கொடுமைகளிலிருந்து தப்பித்துக்கொள்ள உதவி பெற முடியாதவர்களா யிருக்கிருர்களென்றும் சொல்லியிருக்கிறது. 'டைம்ஸ் அப் இந்தியா' பத்ரிகை இந்தக் குறைகளைப்பற்றி விசாரணை செய்யவேண்டுமென்று சொல்லுகிறது"

இந்தத் தந்தியில் கூறியிருப்பவை யெல்லாம் உண்மையல்ல. ஆனல், அதில் உண்மையான

அம்சங்கள் சில இருக்கின்றன. இந்தத் தந்தி தென் ஆப்ரிக்காவுக்குப் போய், இதனால் அங்குள்ளவர்களின் மனம் கோபத்தால் கொதித்துக் கொண்டிருந்தபோது மிஸ்டர் காந்தியும் தமது குடும்பத்தோடு நேட்டாலிலுள்ள டர்பனுக்குப் புறப்பட்டுப் போனார். அவரோடு கூட வேறு சில இந்தியர்களும்போயிருந்தார்கள். அப்போது டர்பனிலுள்ளவர்கள் காந்தியைப்பற்றி ஒரு பொய்க்கதை கட்டிவிட்டிருந்தார்கள். நேட்டாலிலுள்ள வேலையில் திறமை வாய்ந்த ஐரோப்பிய தொழிலாளிகளின் வேலையைக் கெடுப்பதற்காக மிஸ்டர் காந்தி இந்தியாவிலிருந்து வேலையில் ஸமர்த்தர்களான பல வேலைக்காரர்களைத் தம்மோடு கூட்டிவருவதாக ஒரு வதந்தி டர்பனில் உலாவலாயிற்று. இதனால் டர்பனிலுள்ள எல்லா வெள்ளைக்காரர்களும் ரொம்பவும் கோபமும்ஆவேசமும்கொண்டவர்களாய், மிஸ்டர் காந்தியும் அவரைச் சேர்ந்தவர்களும் டர்பனுக்குள் காலெடுத்து வைக்கக் கூடாதென்று ஆக்ஷேபணை செய்தார்கள். அப்போது டர்பனின் அட்டர்னி ஜெனரலும், ஜனங்களுக்கு ஸாதகமாக இருந்து, அவர்கள் கட்சியில் சேர்ந்துகொண்டு, கப்பலை துறைமுகத்துக்குள் விடவேண்டியதில்லை என்று சொன்னார். ஆயினும், கப்பல்காரர்கள் தங்கள் கப்பலை 24-நாள் துறைமுகத்துக்குள் செலுத்தாமல் வெளியில் நிறுத்தி வைத்திருந்தாயிற்றென்றும், அதனால் தங்களுக்கு தினம் 150 பவுன் செலவாகிறதென்றும், கப்பலை நிறுத்தி வைப்பதற்குக் காரணமென்னவென்று கேட்டு கவர்ன்மெண்டின் மேல் நஷ்டத்துக்கு வ்யாஜ்யம் போடுவதாகவும், சொல்லவே, கப்பல் துறைமுகத்துக்குள் விடப்பட்டது. கப்பல் கரையோரம் வந்தும் மிஸ்டர் காந்தி அதை விட்டு இறங்கி பட்டணத்துக்குள் போவதற்கு முடியாமல் போயிற்று. கரையில் திரளான ஜனங்கள் கோபங்கொண்டவர்களாய் மிஸ்டர் காந்தியை ஒழித்து விடக் காத்துக்கொண்டிருந்தார்கள். உடனே ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் கப்பலுக்குள் வந்து மிஸ்டர் காந்தியிடம் அவர் அப்போது கப்பலைவிட்டிறங்கினால் அவருக்கு ரொம்ப ஆபத்துநேரிடும் என்றும், இருட்டின பிறகு கரைக்குப் போவது நல்லது என்றும், சொல்லிப் போனார். ஆயினும், சிறிது நேரத்துக்கெல்லாம் மிஸ்டர் காந்தியை வரவேற்க ஒரு ப்ரபல நேட்டால் வக்கீல் கப்பலில் வரவே, இருட்டும் வரையில் காத்திருக்க வேண்டியது அவச்யமில்லையென்றெண்ணி, அவருடன் கூடக் கப்பலை விட்டிறங்கி, கரைக்கு வந்து சேர்ந்தார். உடனே ஜனங்கள் மிஸ்டர் காந்திமேல் பாய்ந்து அவரை அடித்துத் தொந்தரை செய்து உயிர் போகாக்குறையாகச் செய்து விட்டார்கள். நல்ல வேளையாய் அந்த ஸமயத்தில் அவ்விடத்து போலீஸ் ஸூபரிண்டெண்டின் மனைவி அவருக்கு உதவிசெய்ய வந்து அவரை ஜனங்களிடமிருந்து தப்புவித்து ஒரு இந்திய மளிகைக்கடைக்கு இட்டுக்கொண்டுபோனார். அங்கேயும் ஜனங்கள் அவரைத் துறத்திக் கொண்டு போனார்கள். ஜனங்கள் எங்கு ஒரு ஸமயம் கடையையுங்கூட த்வம்ஸம் செய்து விடுவார்களோ என்று எண்ணி, மிஸ்டர் காந்தி ஒரு போலீஸ் கன்ஸ்டபிளைப்போல் வேஷந்தரித்துக்கொண்டு பொல்லாத ஜனக்கூட்டத்திலிருந்து தப்பித்தோடிப் போனார். இந்த ஸம்பவத்தால் அப்போது முதற்கொண்டே தென்னாப்ரிக்கா வெள்ளைக்காரர்கள் இந்தியர்களிடம் எவ்வளவு க்ஷாத்ரமும் அருவெறுப்பும் கொண்டிருந்தார்கள் என்பது தெரியவரும்.

கடைசியில் இந்தக்குழப்பம் ஒருவாறு அடங்கிற்று. ஜனங்களுடைய ஆத்ரமும் குறைந்தது. ஸமாசாரப்பத்ரிகைகளுங் கூட மிஸ்டர் காந்தியிடம் மன்னிப்புக்கேட்டுக்

கொண்டன. ஜனங்கள் பக்ஷம் சேர்ந்திருந்த அட்டர்னி ஜெனரல் கூட சில வருஷங்களுக்கெல்லாம் மிஸ்டர் காந்தியினுடையவும் மற்ற இந்தியர்களினுடையவும் நற்குணங்களைக் கண்டு கொண்டு மிஸ்டர் காந்தியிடம் தாம் க்ஷாத்ரம் காட்டி ஜனங்கள் பக்ஷம் சேர்ந்து காந்தியை ஹிம்ஸித்ததைப்பற்றி வருத்தப்பட்டு, ஒரு ஸமயம் மிஸ்டர் காந்தியை நேரில் கண்டு பேச நேர்ந்தபோது அவரிடத்தில் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்.

தென்னாப்ரிக்காவிலுள்ள வெள்ளைக்காரர்கள் எப்போதும் இந்தியர்களிடம் வெறுப்புக் காட்டி வருபவர்கள். 1899-ம் வருஷம் போயர் யுத்தம் தொடங்கியபோது மிஸ்டர் காந்தியும் அவரைச் சேர்ந்தவர்களும் யுத்தத்தில் காயமடைந்தவர்களுக்கு உதவி செய்ப முன்வருவதாகச் சொன்ன போது கூட, அநேகர் ஆக்ஷேபித்தார்கள். ஆயினும் கடைசியில் கவர்ன்மெண்டார் காந்தி முதலியவர்களுடைய உதவியைப் பெற்றுக்கொண்டார்கள். இண்டியன் ஆம்புலன்ஸ் கோர் என்று சொல்லப்பட்ட அந்த வைத்யக்கூட்டத்தில் மொத்தம் ஆயிரம் பேர் இந்தியர்கள் உழைத்து வந்தார்கள். அவர்கள் செய்த பேருபகாரத்தால் கவர்ன்மெண்டார் ஸந்தோஷமடைந்து யுத்தத்தைப் பற்றி எழுதிய கடிதங்களில் அந்த வைத்யக் கூட்டத்தைப்பற்றி ச்லாகித்தும், மிஸ்டர் காந்தியைப்பற்றி புகழ்ந்து ப்ரஸ்தாபித்தும், எழுதியிருக்கிறார்கள்.

மிஸ்டர் காந்தி ஸ்வயநலம் பாராட்டுபவரல்ல. பணம் பணம் என்று ஸ்வர்ணத்தையே பூஜிப்பவருமல்ல. தாம் மெய்வருத்தப்பட்டு உழைத்தாலன்றி முற்றபடி தமக்குக்கிடைக்கக்கூடிய பொருள்களெல்லாம் தமதல்லவென்று கருதுபவர். 1901-ம் வருஷம் அவருக்கு தேக ஸௌக்யம் குறையவே அவர் தமது குடும்பத்தோடு இந்தியாவுக்குப்போய் வரத் தீர்மானித்தார். அப்போது நேட்டாலிலுள்ள இந்திய ஜனஸமூகத்தார் அவரை உபசரித்து அவருக்கும் அவருடைய மனைவி, குழந்தைகளுக்கும், விலையுயர்ந்த தங்கத்தட்டும் ஆபரணங்களும் கொடுக்கவந்தார்கள். மிஸ்டர் காந்தி அவைகளில் ஒன்றையேனும் பெற்றுக்கொள்ள ஸம்மதிக்காமல், பின்னால் வேண்டியிருந்தால் பொதுஜன கார்யங்களுக்கு இவைகளை உபயோகிக்கலாம் என்று சொல்லிவிட்டார். இதனால் ஜனங்கள் இவரிடம் கொண்டிருந்த மரியாதையும் அன்பும் ரொம்பவும் அதிகரிப்பதாயிற்று.

மிஸ்டர் காந்தி பம்பாய்க்கு வந்ததும் அவ்விடத்தில் பாரிஸ்டர் உத்யோகம் செய்யத்தொடங்கினார். தென்னாப்பிரிக்காவில் யுத்தம் முடிந்து போய்விட்டதால், இனி தென்னாப்ரிக்காவில் இந்தியர்களுக்கு யாதொரு தொந்தரவுமிராதென்று நினைத்து தென்னாப்ரிக்காவுக்கு தாம் போகவேண்டியது அவச்யமில்லை என்று தீர்மானித்துக்கொண்டார். ஆயினும் அவர் கல்கத்தா காங்க்ரெஸுக்குப் போய்விட்டுத் திரும்பிவந்ததும் அவருக்கு தென்னாப்ரிக்காவிலிருந்து ஒரு அவஸரத்தந்தி ஸமாசாரம் வந்து சேர்ந்தது. அதில், அவர் உடனே தென்னாப்ரிக்காவுக்கு வந்து சேரவேண்டுமென்றும், அங்குள்ள இந்தியர்களின் கஷ்டங்களை நிவர்த்தி செய்வதற்கு வேண்டிய ப்ரயத்தனங்கள் செய்யவேண்டு மென்றும், அப்போது இங்கிலாந்தில் ப்ரிட்டிஷ் குடியேற்ற நாடுகளின் மந்த்ரியாகிய மிஸ்டர் சேம்பர்லெயின் இங்க்லண்டிலிருந்து தென்னாப்ரிக்காவுக்காக வரும் ஸமயமாக இருந்ததால் அவரிடம் இந்தியர்களுடைய குறைகளைச் சொல்லிக் கொள்ள ஒரு நல்ல தருணமென்றும், கண்டிருந்தது. உடனே மிஸ்டர் காந்தி இந்தியர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி நேட்டாலுக்குப் போய்ச் சேர்ந்தார்.

(இன்னும் வரும்)

# Departmental Notes.

# பகுதிக்குறிப்புகள்.

## FUN AND ANECDOTE.

## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

### AN ANECDOTE OF KING GEORGE.

### ஜார்ஜ் அரசரைப் பற்றிய ஒருகதை.

ஜார்ஜ் அரசர் சிறுவராக இருந்தபோது அவருக்கு தெருக்களில் வாடகைக்கு விடுகிற குதிரைவண்டிகளில் ஏறிப்போவதில் ரொம்ப ப்ரியம். ஒரு ஸமயம் அவர் ஒரு குதிரைவண்டியில் ஏறி வண்டிக்காரனுக்குப் பின்னால் உட்கார்ந்து கொண்டிருந்திருந்தார். வண்டிக்காரனுக்கு அவர் ராஜகுமாரன் என்பது தெரியாது. இங்க்லீஷ் ராஜகுமாரர்களுக்கு ராயல் ஹைனெஸ் என்று பட்டப்பெயர் உண்டு.

வண்டியில் கட்டியிருந்த குதிரைகளில் ஒன்று முரட்டுத்தனம் செய்யவே வண்டிக்காரன் குதிரையிடம், "ஹய் வேகமாய்ப்போ, யுவர் ராயல் ஹைனெஸ், வேகமாய்ப்போ" என்றான்.

ஜார்ஜ் ராஜகுமாரர் வண்டிக்காரனிடம் "அந்தக்குதிரைக்கு ஏன் அந்தப்பெயர் இட்டுச்சொல்லுகிறாய்" என்றார். அதற்கவன், "இல்லை ஐயா, அந்தக்குதிரை பொல்லாதது, சோம்பேறி, ஒன்றுக்கும் உதவாது, ஆகையினால் தான் அதை 'ஹிஸ் ராயல் ஹைனஸ்" என்று பெயர் இட்டிருக்கிறேன். வேறு ஒரு பெயரும் அதற்கு ஏற்றதில்லை" யென்றான்.

### A TRICK TO AVOID WORK.

### வேலை செய்யாதிருக்க ஒரு தந்த்ரம்.

ஒரு தோட்டக்காரனுடைய மனைவி அவனைக் கொல்லையில் உருளைக்கிழங்கைத் தோண்டும்படி சொன்னாள். அவன் அப்படியே செய்ய ஸம்மதித்து கொல்லைக்குச் சென்று சற்று நேரம் தோண்டிவிட்டு, தனக்கு பணம் கிடைத்தது என்று சொல்லிக்கொண்டு வீட்டுக்குத் திரும்பி வந்தான். அவன் அதை ஜலத்தில் கழுவவும் அது ஒரு பவுனாயிருந்தது. அதை மடியில் வைத்துக்கொண்டு மறுபடியும் தோட்டத்திற்கு சென்று இன்னுமொரு நாணயம் அகப்பட்டதாகத் திரும்பி வந்து, மனைவியிடம் "நான் போதுமான அளவு வேலை செய்தாயிற்று. சற்றே தூங்குகிறேன்" என்று சொன்னான். அவன் தூங்கி எழுந்திருப்பதற்குள்ளாக, பணத்தாசையால் அவன் மனைவி உருளைக்கிழங்குகளையெல்லாம் தோண்டிவிட்டாள். பவுன் மாத்ரம் அவளுக்குக் கிடைக்கவில்லை.

### AN OLD MAN'S FOOLISHNESS.

### ஒரு கிழவனின் அசட்டுத்தனம்.

பழய காளையகிழவன் ஒருவன் ஈரோடு போக வேண்டிய நிமித்தம் மதுரையிலிருந்து ரெயிலேறிவந்தான். திருச்சினாப்பள்ளி ஜங்ஷன்வந்ததும் வேறு ரயில் மாறவேண்டுமென்பது தெரியாமல் உட்கார்ந்திருந்தான். ஆனால் ப்ளாட்பாரம் இன்ஸ்பெக்டர் இவன் உட்கார்ந்திருந்த வண்டிக்கு ஸமீபம் வந்து ஈரோட்டுக்குப் போகிறவர்கள் யாராவது இங்கு உண்டா என்று கேட்டான். அதற்கு இவன் ஒன்றும் பதில் சொல்லாமல் உட்கார்ந்திருந்துவிட்டு ரயில் வண்டி புறப்பட்ட பிறகு தன்னுடன் கூட உட்கர்ர்ந்திருந்தவனைப் பார்த்து "பிச்சைக்காரப் பயல். இவனாரவன் என்னைக் கேட்கிறதற்கு. நான் ஈரோட்டுக்குத்தான் போகிறேன். ஆனால் நான் அதை இவனுக்குச் சொல்வானேன்" என்றான்.

## CURIOSITIES.
## விநோதங்கள்.

### THE FATE OF A LEADER WRITER
ஒரு தலையங்கம் எழுதுபவரின் கதி.

இங்கிலண்டில் வெகு காலமாய் நடந்துவரும் ஒரு பத்ரிகையை அதன் ஸொந்தக்காரர்கள் வேறொருவருக்கு விற்று விட்டார்கள். புது ஸொந்தக்காரர் பத்ரிகை யாபீஸை தம்வசம் அடைந்தவுடன் ஆபீஸ்எப்படியிருக்கிறதென்று பார்க்க விரும்பி, ஒவ்வொரு அறையையும் சோதித்து வந்தார். வெகுநாளாய் திறக்கப்படாமல் பூட்டப்பட்டிருந்த ஒரு அறையைத்திறந்து பார்க்கையில் அதில் தூசியும், சாம்பலும், சிலந்திக்கூடுகளும், ஒரு மனிதனுடைய எலும்புக்கூடும் இருந்தனவாம். அந்த எலும்புக்கூடு ஒரு மேஜையின் முன்னால் சாய்ந்துகொண்டு அதன் எலும்பாயிருந்த கைவிரல்களில் ஒரு பேனாவை இடுக்கிக் கொண்டிருந்ததாம்.

"இதென்னடா இது," என்று ஸொந்தக்காரர் ஆச்சர்யமடைந்தவராய் தமது பக்கத்தில் நின்றுகொண்டிருந்த வயதுசென்ற ஸேவகனைக் கேட்டார். அவன் சற்று யோசித்து "இப்பொழுதுதான் ஞாபகம் வருகிறது. என்னுடைய முப்பாட்டனார் காலத்தில் இந்த ஆபீஸில் தலையங்கம் எழுதுபவர் காணாமல் போய்விட்டார் என்று சொல்லிக்கொண்டார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அவரைத்தான் இந்த அறையில் வைத்துப் பூட்டிவிட்டு மறந்துபோய்விட்டார்கள் என்று தோன்றுகிறது" என்றான். (பலமேல்நாட்டுப் பத்ரிகைகளிலும் சில இந்தியப் பத்ரிகைகளிலும் பத்ராதிபரேயன்றி தலையங்க வ்யாஸம் எழுதுவதற்கென்று ப்ரத்யேகமான பத்ராசியர்களை நியமிப்பது வழக்கம்).

### A BIG SKY SCRAPER.
ஒரு உன்னதமான கட்டிடம்.

அமெரிக்கா ஐக்ய மாகாணங்களிலுள்ள ஸெண்ட்லூயி என்னும் பட்டணத்தில் ப்ரும்மாண்டமான கட்டிடம் ஒன்று ஸமீபத்தில் கட்டியிருக்கிறார்கள். அது பக்கத்திலுள்ள தெருமட்டத்திற்குமேல் 306½ அடி உயரம் உள்ளது. முப்பத்து மூன்று ஏகர் விஸ்தீரணமுள்ளது. அதைக்கட்டுவதற்கு 3 கோடி ராத்தல் நிறையுள்ள உருக்கும், கான்க்ரீட் என்று சொல்லப்படும் கட்டிடத்துக்கு உதவும் ஸாமானும், இன்னம் மற்ற ஸாமான்களும் வேண்டியிருந்தனவாம். கட்டிடத்திற்கு ஆன செலவு நிலத்தின் க்ரயமுள்பட 4½ கோடி ரூபாயாம்.

### TWO KINDS OF WATER FROM ONE WELL
ஒரு கிணற்றிலிருந்து இரண்டு விதமான ஜலம்.

அமெரிக்கா ஐக்ய மாகாணங்களில் பார்டால்ப் என்னும் ஊரிலுள்ள ஒரு தோட்டத்தில் ஒரு விநோதமான கிணறு இருக்கிறது. அது 40 அடி ஆழமும் 4-அடி குறுக்களவு முள்ளது. இதன் மத்தியில் 200 அடி ஆழமும் 6 அங்குல குறுக்களவுமுள்ள ஒரு கிணறு இருக்கிறது. நடுவிலுள்ள இந்தச் சிறு கிணற்றிலிருந்து கந்தக ஸம்பந்தமான ஜலம் ஊறிவருகிறது. அதை சுற்றிலுமுள்ள பெரிய கிணற்றிலிருந்து சுத்த ஜலம் ஊறிவருகிறது. இரண்டுவித ஜலத்தையும் கலக்காதபடி வெவ்வேறு இஞ்ஜின்களைக் கொண்டு இறைத்து வருகிறார்கள்.

### A BIG LITTER
ஏராளமான குட்டிகள்.

இங்லண்டிலுள்ள ஒரு ஊரில் ஒரு பன்றி வளர்ப்பவரிடம் ஒரு பன்றியிருக்கிறது. அது ஸமீபத்தில் 21 குட்டிகள் போட்டதாம். அவைகளுக்குத் தாய்ப்பால் போதாமல் பால் புட்டியை உபயோகிக்க வேண்டியிருந்ததாம்.

## HINTS AND RECIPES.

## யுக்திகளும் முறைகளும்.

### A MILK STRAINER.

### ஒரு பால் வடிகட்டும் சல்லடை.

பாலிலும், மோரிலும், அழுக்கு, தூசி, எறும்பு, இவைகள் இருந்தால் அவைகளை மோர் வடிகட்டும் சல்லடையில் ஊற்றி வடிகட்டுகிறோம். அப்படி வடிகட்டும்போது பாலை ஊற்றும் வேகத்தில் தூசுகள் சல்லடையின் த்வாரத்தின் வழியாய் நல்ல பாலோடு கலந்து வெளியே வந்து விடுகிறது. இப்படி நேரிடாமலிருப்பதற்கு வடிகட்டும் கருவியை பின் வரும் விதமாய் அமைப்பது நல்லது.

பெரிய புனல் (Funnel) போல் செய்து அடியில் நீண்டு சிறுத்த குழாய்க்குப் பதிலாக $2\frac{1}{2}$ அங்குலம் நீளமும் $2\frac{1}{2}$ அங்குலம் குறுக்களவும் உள்ள பெரிய குழாயாக அமைத்து அடிப் பக்கத்தை மூடிவிடவும். குழாயில் அடியிலிருந்து முக்காலங்குலத்துக்கு மேல் பெரிய த்வாரங்கள் செய்து அவைகளில் வடிகட்டும் சல்லடைத்துண்டுகளை அமைத்து விடவும். இப்படிச்செய்த கருவியில் பால், மோர், ஆகிய இவைகளை ஊற்றினால் இவைகளினுடைய வண்டல் தூசுகள் அடியில் தங்கிக் கொள்ள, $\frac{3}{4}$ அங்குலம் உயரத்திலுள்ள த்வாரங்களின் வழியாய் சுத்தமான பால், மோர் ஆகிய இவைகள் வெளியே வரும். பற்பல தகரக் கடைக்காரர்கள் இந்தப் புதிய கருவியைச் செய்து விற்று லாபமடையலாம்.

### CLEANING THE EYE GLASS.

### மூக்குக்கண்ணாடி சுத்தம் செய்தல்.

கோடை காலங்களில் மூக்குக் கண்ணாடிகளை ஷாமாய்த்தோல் அல்லது டிஷ்யூபேபர் என்று சொல்லப்படும் மெல்லிய கடுதாசியினால் துடைப்பதாலேயே கண்ணாடியிலுள்ள அழுக்கு நன்றாய் விடுவதில்லை. ஸோப்பும் வெந்நீரும் உபயோகித்து கண்ணாடிகளை அலம்பினால் கண்ணாடி ரொம்ப தெளிவடைகிறது. சிலர் கண்ணாடிகளை சுத்தம்செய்ய ஆல்கஹால் சாராயத்தை சிறிதளவுத் துணியோரத்தில் ஊற்றி அதனால் கண்ணாடியைத் துடைப்பதுண்டு. இதுவும் ரொம்ப ச்லாக்யமான முறையாகும்.

### CASTOR OIL FOR INSECT BITE.

### பூச்சிக்கடிக்கு ஆமணக்கெண்ணெய்.

பூச்சிகள், தேனீ ஆகிய இவைகள் கொட்டிவிட்டால், கொட்டின இடத்தில் ஆமணக்கெண்ணெயைத் தடவுவது நல்லது. இதனால் வலி குறைவதோடு கடியும் சீக்ரமும் ஸ்வஸ்தமாகும். எண்ணெயில் சிறிது நவாச்சாரம் (Ammonia) சேர்த்து நன்றாய்க் கலக்கி உபயோகிப்பதால் கடி ரொம்ப சீக்ரம் குணப்பட்டு விடுகிறது.

### USES FOR MILK.

### பாலின் உபயோகங்கள்.

(1) ஹார்மோனியம் போன்ற வாத்யங்களில் உள்ள வெண்மையான கீபோர்டுகளை பாலால் தேய்த்துத் துடைத்தால் அவைகள் சுத்தமாகி ரொம்ப வெண்மையாகின்றன.

(2) லினன் துணிகளை இஸ்த்ரி போடும் போது மாவில் சிறிது பால்சேர்த்தால் துணிகளுக்கு பளபளப்பு உண்டாகிறது.

(3) மனம் அமைதியாயில்லாமல் போய், தூங்கமுடியாமல் இருந்தால் படுக்கப் போகுமுன் ஒரு டம்ளர் பால் குடிப்பதால் ரொம்ப குண முண்டாகும்.

(4) திரைத்துணிகளை அலசி யெடுக்கும் போது உபயோகிக்கும் நீலங்கலந்த ஜலத்தில் பாலைக் கலந்தால் துணிகள் புதியவை போலிருக்கும்.

(5) நாள்பட்ட இங்கிக்கறைகளைப் போக்க அவைகளைப் பாலில் ஊறவைத்தால் கறைகள் போய்விடும்.

# TAMIL LITERATURE.
# தமிழ்க் கல்வி.

## SRIMATI.
## ஸ்ரீமதி.

இந்த நாவல் புதுக்கோட்டை மிஸ்டர், கே. எஸ். ஐயரால் எழுதப்பட்டது. இது ஆங்கிலேய நாவல்களின் போக்கையொட்டி பெரும்பாலும் ஸம்பாஷணை ரூபமாக எழுதப்பட்டிருக்கிறது. கதை வாசிக்க இனிமையாயிருக்கிறது. தமிழ் நடை ஸுலபமாயிருக்கிறது. இதன் விலை அணா 12. வேண்டுவோர், மிஸ்டர் கே. எஸ். ஐயர், காலேஜ், புதுக்கோட்டை என்று எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

## WELCOME GITAMS.
## வாழ்த்து கீதங்கள்.


இவை வைஸ்ராய் சென்னைக்கு வந்த ஸந்தர்ப்பத்தை ஒட்டி அவருக்கு வரவேற்பு பாட்டுக்களாகப் பாடிய கீதங்களாகும். இவைகளைப் பாடியவர் மிஸ்டர் சரபம் முத்துஸாமிக் கவிராயராகும். இதில் வைஸ்ராய் இந்தியாவுக்கு வந்தது, டில்லி நகர் ப்ரவேசம், வெடிகுண்டு விபத்து, குழந்தைகள் வாழ்த்து முதலியவைகளைப் பற்றிய பாடல்கள் இருக்கின்றன. இந்தச் சிறு புஸ்தகம், சென்னை, 'பெண்கல்வி ஆபீஸில்' ப்ரசுரிக்கப்பட்டிருக்கிறது.

## FISH MANURE.
## மீன் எரு.

பயிர்களுக் கவசியமாம்—பாஸ்கரம்,
உயிர்தரும் நைட்ரஜின், மரஉப்பாம்.
வயல்களி லிவைமூன் றும்—வளமாய்
வாய்ப்பதில்லை யெனப்பலர் அறிவார்.
பசுந்தாள் எருவினிலோ—பார்க்கில்
பாஸ்கர மென்பது மிகக்குறைவே.
இப்பொருள் குறைவாகில்—பயிர்கள்
ஈனுங் கதிர்கள்மிக மெலிவாகும்.
எலும்பின் தூள்மக்கி—நிலத்தில்
ஈராண் டாகும் எருவாக;
பாஸ்கரா தீதமெனும்—சூப்பர்
பாஸ்பேட் டெங்குங் கிடைப்பதரிதாம்.
விலையோ மிகவதிகம்; மேலும்
விரும்பும் நைட்ரஜின் அதிலில்லை.
மீன்எரு என்பதனில்—பாஸ்கரம்
மிகுந்தும் நைட்ரஜின் உளதாகும்.
தழைஎரு வுடனிதனைக்—கலந்தால்
தகுபலன் தவறா தடைகின்றார்.
ஆட்டெரு அப்பூவாம்—மீனோ
மீட்டுமீ ராண்டு மேல்நிற்கும்.
மற்றுமோர் நலங்கேளீர்—நன்செய்ச்
சுற்றிலும் வண்டிகள் போகாத
இடங்களில் சாம்பல்எரு—வண்டியில்
ஏறிப் போவது மிகச்சிரமம்.
மீன்எரு மூட்டைகளைத்—தலையில்
மிகவெளி தாகச் சுமந்திடலாம்.
தழையுடன் மீனெருத்தான்—ஏக்கர்
தனக்கிராத் தல் இருநூறுமே.
தோட்டப் பயிர்களுக்கே—எருவின்
ஊட்டம் அதிகமாய் அவசியமே.
நெற்பயிர் நிலங்களிலே—நெடுநாள்
பற்பல எருக்களும் அழுகவேண்டும்.
இதுவோ அவசியமாம்—காலத்தில்
புதிதாய்ப் போட்டதை மிதித்திடலாம்.
முதற்களை எடுக்கையிலே—பயிர்க்குள்
இதையிடை தூவிக் கலக்கிடலாம்.
இருபூ நன்செய்களில்—எங்கும்
ஒருபூ காரில் எருவிடுவார்.
சம்பாவில் தழையிடுவார்—இல்லையெனில்
வம்பாமழை எருவைக் கரைத்தோடும்
மீன் எருக் கறையாது—மிதக்க
வான்மழை வாரமொன் றிற்பெய்யாவிடில்
நிலத்துடன் கலந்துவிடும்—அதன்பின்
ஜலக்கழி வாலஃ தொழிவதில்லை.
தோட்டப் பயிர்களுக்கே—மீனெரு
நாட்டும் நாற்றின்கீழ் புதைத்திடலாம்.
நிலமெங்கும் நிரப்ப வேண்டாம்-நிகரிலாப்
பலன் தரும் பயிருண வதிலுளதே.
முப்போகம் பயிராகும்—நாடுகளில்
எப்போதுங் குப்பையிட லியலாதாம்.
அங்குமீன் எருவதனை—அமைக்கில்
தங்கிமுப் போகமது களிப்பிக்கும்.

—கிருஷிகனில் ஜே. தர்ம ரங்கராஜு.

SUPPLEMENT TO THE "PRACTICAL LIFE."
"பிழைகீதும் வழி"க்கு அனுபந்தம்.



**RIPON BUILDINGS.**
ரிப்பன் கட்டிடம்.

BY COURTESY OF THE MADRAS MAIL.

# MISCELLANEOUS NEWS.

## நாநா ஸங்கதி.

### RIPON BUILDINGS.

### ரிப்பன் பில்டிங்ஸ்.

இந்த மாஸம் வைஸ்ராய் சென்னைக்கு வந்திருந்தபோது சென்னை முனிஸிபல் கார்ப்பரேஷனுக்காகக் கட்டப்பட்டிருக்கிற ரிப்பன் பில்டிங்ஸ் என்னும் முனிஸிபல் ஆபீஸைத் திறந்து வைத்தார்.

இக்கட்டிடத்திற்கு அஸ்திவாரக்கல் 1909-ம வருஷம் டிஸம்பர் மாதம் 11-ந் தேதி யன்று அப்போது இந்தியாவில் கவர்னர் ஜனரலாயிருந்த லார்ட் மிண்டோவால் நாட்டப் பட்டது. கட்டிடமானது, சென்னை பீபிள்ஸ் பார்க்கின் தென்மேற்கு மூலையில் நகரத்தின் மத்தியில் இருக்கிறது. அது கிழமேலில் 252 நீளமும், தென்வடலில்126 அடி நீளமும், உள்ளது. பூமிமட்டத்திற்கு 132 அடி உயரத்தில் மணிக்கூண்டு ஒன்று அக்கட்டிடத்தில் அமைக்கப்பட்டிருகிறது. 8-அடி சுற்றளவுள்ள கடியாரமொன்று அதில்வைக்கப்படும்.

இந்த கட்டிடத்திற்குப் பிடித்திருக்கும் செலவு மொத்தம் 6,47,000 ரூபாய். இன்னும் ஒரு லக்ஷம் ரூபாய் செலவில், "முனிஸிபல் லாபரேடரி" என்ற முனிஸிபல் சோதனைச் சாலை யொன்று இக்கட்டிடத்தை யொட்டி அமைக்க வேண்டுமென்று உத்தேசித்திருக்கிறார்கள்.

### TOOTH POWDER.

### பல் பொடி.

மிஸ்டர் பி. வி. வ்யாஸராவ் தயார்செய்து விற்கும் தன் வந்தரி ஸஞ்சீவி பல் பொடியை நாம் உபயோகித்துப்பார்த்தோம். பல் நன்றாய் வெளுப்பதோடு பொடி வாஸனையாகவும் ருசியாகவும் இருக்கிறது.

# DIARY OF THE MONTH.

## மாஸ வர்த்தமானம்.

நவம்பர்மீ 1-தேதி.—

தென்னாப்பிரிக்கா இந்தியர்கள்—நேட்டாலில் வேலை நிறுத்தம் செய்த இந்திய வேலையாட்களில் 1600-பேர் ட்ரான்ஸ்வாலுக்குப் போகையில் கவர்ன்மெண்டார் 200-பேரைக் கைது செய்தார்கள். தென்னாப்பிரிக்காப் போராட்டத்துக்காக இந்தியன் தென் ஆப்ரிக்கா கமிட்டியார் 30,000-ரூபாய் மிஸ்டர் கந்திக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

துருக்கி.—துருக்கிய ஸைன்யங்களை ஒழுங்கு படுத்துவதற்காக துருக்கி கவர்ன்மெண்டார் ஜெர்மெனியிலிருந்து ஒரு யுத்தவீரரை வேலைக்கு எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

2-தேதி.

திவான்பகதூர் வெங்கட்டராமதாஸ் நாயுடு.—புதுக்கோட்டையில் திவான் வேலை பார்த்தவரும், போர்ட் அப் ரெவின்யூவில் ஸெட்டில்மெண்ட் டிபார்ட்மெண்டு ஸெக்ரெடரியாக இருந்தவருமான திவான் பகதூர் எஸ். வெங்கட்டராமதாஸ்நாயுடு இன்று ஸாயந்த்ரம்சென்னையில் காலகதியடைந்தார்.

3-தேதி

வைஸ்ராய்.—இன்று வைஸ்ராய் மைஸூரிலுள்ள ஜெர் ஸொப்பா நீர் வீழ்ச்சியைப் போய்ப்பார்த்தார்.

4-தேதி.

தென்னாப்பிரிக்கா இந்தியர்கள்.—4000-இந்தி

யர்கள் வேலை நிறுத்தி விட்டதாக மிஸ்டர் காந்தி தந்தி ஸமாசாரம் தெரிவித்திருக்கிறார்.

பாங்கி முறிவு.—அகமதாபாத்திலுள்ள கத்தியவார் அகமதாபாத் பாங்கிங் கார்பரேஷன் இன்று முறிந்து போயிற்று.

உதைத்ததால் மரணம்.—கல்கத்தாவிலுள்ள அலெக் ஸாண்ட்ரா ஜூட் மில்லின் இஞ்சினியர், ஒரு வர்ணம் பூசுபவனை சில நாட்களுக்கு முன் காலால் உதைத்துக்கொன்று விட்டதற்காக அவருக்கு 150 ரூபாய் அபராதம் விதிக்கப் பட்டது.

5-தேதி.

ஒருகப்பல் விபத்து.—பர்மா ஆயில் கம்பெனியைச் சேர்ந்த ட்விங்கான் என்னும் கப்பல் கெரோஸின் எண்ணெயேற்றிக் கொண்டு தூத்துக்குடிக்குப் போகையில் அதிலிருந்த எண்ணெய் நெருப்புப் பற்றிக்கொண்டது. 8-பேர் நெருப்புக்கு இரையானார்கள். மற்றவர்கள் தப்பித்துக் கொண்டார்கள்,

6-தேதி.

தேன் ஆப்ரிக்கா.—வேலை நிறுத்தத்தில் சேர்ந்த 200-இந்தியர்கள் ஜெயிலுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். வேறு 300-பேரை கவர்ன்மெண்டார் கைது செய்திருக்கிறார்கள்.

சார்லஸ் டௌனில் 500-இந்தியர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

மத்யமாகாணங்கள் கௌன்ஸில்.—மத்யமாகாணங்களுக்கு ஒரு லெஜிஸ்லெடிவ் கௌன்விஸ் ஸ்தாபிக்க வேண்டுமென்று இந்தியா கவர்ன்மெண்டார் செய்த சிபார்சை இந்தியா ஸெக்ரெடரி அங்கிகரித்து விட்டார். அந்தக் கௌன்ஸிலில் 25-மெம்பர்கள் இருப்பார்கள் அவர்களில் ஜனங்களால் தெரிந்தெடுக்கப் படும் ப்ரதிநிதி மெம்பர்கள்-7 பேராகும்.

7-தேதி.—

தேன் ஆப்ரிக்கா.—மிஸ்டர் காந்தி இன்று கைது செய்யப்பட்டு 750 ரூபாய் ஜாமீன் பேரில் விடப்பட்டிருக்கிறார். இன்று காலையில் 200 இந்தியர்கள் சட்டத்தை மீறி ட்ரான்ஸ் வால் தேசத்துக்குள் ப்ரவேசித்தார்கள்.

ஒரு புது ரெயில்வே லைன்.—திருவாங்கூர் கவர்ன்மெண்டுக்காக தென்னிந்திய ரெயில்வே கம்பெனியார் கொல்லத்துக்கும் திருவநந்தபுரத்துக்கும் ஒரு இருப்புப்பாதை போடுவதற்கு இந்தியா ஸெக்ரெடரி ஸாங்ஷன் செய்திருக்கிறார்.

ப்ரேஞ்ச் இந்தியா கவர்னர்.—இந்தியாவில் ப்ரான்ஸுக்கு ஸொந்தமான ப்ரதேசங்களுக்கு கவர்னராக நியமிக்கப்பட்டிருக்கும் மிஸ்டர் மார்டினே இன்று ப்ரான்விலிருந்து புதுச்சேரிக்குவந்து சேர்ந்தார்.

9-தேதி.

தேன்ஆப்ரிக்கா.—இனிமேல் ஆசியாவாஸிகள் தென்னாப்ரிக்காவுக்கு வராமல் தடுப்பதற்காக ஒரு கமிட்டி வாக்ஸ்ரஸ்டில் ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. ஒரு சுரங்கத்தைச்சேர்ந்த 150 வேலையாட்களை இன்று கவர்ன்மெண்டார் கைது செய்தார்கள்.

10-தேதி.

தேன்ஆப்ரிக்கா.—இந்தியர்களுடைய தொழில் நிறுத்தத்தால் அநேக சுரங்கங்களில் வேலை நின்று போயிற்று. நிலக்கரி வ்யாபாரத்துக்கு ரொம்ப நஷ்டம் ஏற்பட்டுக்கொண்டு வருகிறது. ட்ரான்ஸ்வாலுக்கு வந்த 2000 இந்தியர்களை கவர்ன்மெண்டார் கைதுசெய்து விட்டார்கள். அவர்களை கவர்ன்மெண்டார் ஸ்பெஷல் வண்டிகளில் ஏற்றி நேட்டாலுக்குத் திருப்பியனுப்பி விட்டார்கள்.

11-தேதி.

தேன்ஆப்ரிக்கா.—மிஸ்டர் காந்தி ட்ரான்ஸ்வாலில் மறுபடியும் கைது செய்யப்பட்டு நேட்டால் சட்டப்படி விசாரிக்க டர்பனுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்.

மிஸ்டர் காந்தி ஒப்பந்தக்கூலியாட்களை அவர்களுடைய மாகாணங்களை விட்டுப்போகும்படி தூண்டினதற்காக அவருக்கு 9-மாஸம் காவல் விதிக்கப்பட்டது. கைதுசெய்யப்பட்ட 2000 இந்தியர்களையும் திரும்பவும் சுரங்கத்துக்குக்கொண்டு போய்விட்டார்கள்.

சென்னை லெஜிஸ்லேடிவ் கௌன்ஸில். இன்று சென்னை லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில் கூடிற்று. வைத்ய ரெஜிஸ்ட்ரேஷன் மசோதாவும், ஹிந்துக்கள் ட்ரான்ஸ்பர் அண்ட், பிக்வெஸ்ட்ஸ் மசோதாவும், ஸெலக்ட் கமிட்டிக்கு விடப்பட்டன. பாக்டரி இன்ஸ்பெக்ஷன், நிலத்தீர்வை வஜா, க்ராமாந்தரங்களில் வைத்ய உதவி, ஆகிய தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டு வாதிக்கப்பட்டன.

12-தேதி.

லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில்.—இன்று கூடிய சென்னை லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில், புறம்போக்கு என்க்ரோச்மெண்டுகள், ட்ரங்க்ரோடுகள், பண்டிதர்களின் நிலைமை, முதலிய பல விஷயங்களைப் பற்றித் தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டு வாதிக்கப்பட்டன.

தென்னாப்ரிக்கா இந்தியர்கள்.—மிஸ்டர் காந்தியோடு இந்தியர்களுக்காக உழைத்துவரும் மிஸ்டர் போலக்கையும், மிஸ்டர் காலன் பாக்கையும் இன்று கவர்ன்மெண்டார் கைது செய்தார்கள்.

13-தேதி.

நோபல் ப்ரைஸ்.—இலக்கியத்தில் தேர்ச்சியடைந்திருப்பதற்காக மிஸ்டர் ரபீந்த்ரநாத்டாகூருக்கு நோபல் வெகுமதி யளிக்கப்பட்டிருக்கிறது.

மிஸ்டர் டாகூர் வங்காளி பாஷையில் நேர்த்தியான கவிகளும் வ்யாஸங்களும் எழுதியிருக்கிறார்.

14-தேதி.

தென்னாப்ரிக்கா இந்தியர்கள்.—மிஸ்டர் கந்திக்கு முன் விதிக்கப்பட்டிருந்த 9-மாஸ காவலோடு இன்னம் மூன்று மாஸம் காவல் விதிக்கப்பட்டிருக்கிறது.

ஷுகர் ப்ளாண்டிங் கம்பெனியின் நேட்டால் கரும்புத்தோட்டங்களில் உள்ள 2700 இந்தியர்களில் 1500 இந்தியர்கள் வேலை நிறுத்திவிட்டார்கள்.

மகமதிய மிஷன்.—இந்திய மகம்மதியர்களைப்பற்றிய விஷயங்களை இங்க்லீஷ் மந்த்ரிகளுக்கும் பொது ஜனங்களுக்கும் தெரிவிக்கும் பொருட்டு இங்க்லண்டுக்குச் சென்றிருந்த மிஸ்டர் மகமத் அலியும் மிஸ்டர் வாஸர் ஹாஸனும் இந்திய மந்த்ரியையும், ப்ரதம மந்த்ரியையும் கண்டுபேச அனுமதி கேட்டதற்கு மந்த்ரிகள் முடியாதென்று தெரிவித்து விட்டார்கள்.

துருக்கியும் க்ரீஸும்.—துருக்கிக்கும் க்ரீஸுக்கும் நடந்து வந்த ஸமாதான உடன்படிக்கைப் பேச்சுகள் முடிந்து போயிற்று. ப்ரதிநிதிகள் உடன்படிக்கையில் இன்றுகையெழுத்திட்டார்கள்.

15-தேதி.

தென்னாப்ரிக்கா இந்தியர்கள்.—தென்னாப்ரிக்காவில் கைது செய்யப்பட்ட இந்திய கூலிகள் பலவிதங்களில், ஹிம்ஸை செய்யப்படுகிறார்கள் என்றும், அவர்களுக்கு ஜெயில் இடம் போதாமல் சுரங்கங்களையே ஜெயிலாகமாற்றி அங்கே வேலை செய்யும்படி கட்டாயப்படுத்துகிறார்கள் என்றும், வேலை செய்யாவிட்டால் சவுக்கடி அடிக்கிறார்கள் என்றும், தென்னாப்ரிக்காவிலிருந்து மிஸ்டர் கோகலேயுக்கு தந்தி வந்திருக்கிறது. மிஸ்டர் கந்தியோடு தென்னாப்ரிக்கா இந்தியர்களுக்காக உழைத்துவரும் மிஸ்டர் கால்லன்பாக்குக்கு 3-மாஸம் காவல் விதிக்கப்பட்டது.

17-தேதி.

ஜோட்பூர் மகாராஜா.—ஜோட்பூர் மகாராஜா

இன்று சக்ரவர்த்தியை விண்ட்ஸர் மாளிகையில் கண்டு கொண்டார்.

தென்னுப்ரிக்காப் போராட்டம்.—கரும்புத் தோட்டங்களிலுள்ள இந்திய கூலிகள் யாவரும் வேலை நிறுத்தம் செய்து விட்டதாக ஸமாசாரம் எட்டுகிறது.

மிஸ்டர் போலக்கை மூன்று மாஸம் ஜெயிலுக்கு அனுப்பிவிட்டார்கள்.

பீபிள்ஸ் பாங்கி.—பீபிள்ஸ் பாங்கியைக் கலைத்து விடும்படி லிக்விடேடர் ஒருவரை நியமித்திருந்ததை லாகூர் டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் அங்கீகரித்து இன்னொருவரையும் லிக்விடேடராக நியமித்து விட்டார்.

18-தேதி.

தென்னுப்ரிக்காவில் இந்தியர்கள்.—தென்னுப்ரிக்கா இந்தியர்களை கொடுமையாக நடத்துவதாகச் சொன்னதை பொய் என்று தென் ஆப்ரிக்கா கவர்ன்மெண்டார் மறுக்கிறார்கள்.

நேட்டாலில் ரெயில்வே, துறைமுகம், முனிஸிபாலிடி, தோட்டங்கள், ஹோடல்கள் முதலியவைகளிலுள்ள 20,000 இந்திய வேலையாட்கள் வேலை நிறுத்தி விட்டார்கள் ஒரு இந்தியன் சவுக்கடிபட்டு இறந்துபோனான்.

19-தேதி.

தேன் ஆப்ரிக்கா போராட்டம்.—தென்னுப்ரிக்காவில் வேலைசெய்ய மறுத்துவிட்டுப்போன இந்தியர்களை மறுபடியும் பிடித்துக்கொண்ட அவர்களுடைய யஜமானர்கள் அவர்களை கொடுமையாய் அடித்துத் தொந்தரவு செய்தார்கள் என்பதை ரூபிக்க தகுந்த ஆதாரங்கள் இருக்கிறதாக தென்னுப்ரிக்காவிலிருந்து லார்ட் ஆம்திலுக்கு ஒருதந்தி வந்திருக்கிறது.

ஜோகன்னஸ்பர்க்கிலுள்ள இந்தியர்கள் ஒரு மீட்டிங்கூடி, ஜெயிலிலடைக்கப் பட்டிருக்கும் இந்திய தலைவர்களை கவர்ன்மெண்டார் விடுதலை செய்ய வேண்டுமென்றும், அந்த ப்ரிட்டிஷ் கலானியில் ப்ரிட்டிஷ் குடிகளை அந்யாயமாய் அடித்து கொடுமையாய் நடத்துவதைப்பற்றி ஆக்ஷேபிப்பதாகவும், அந்தக் கொடுமைகளைப்பற்றி கவர்ன்மெண்டார் நன்றாய் விசாரிக்க வேண்டுமென்றும், 3-பவுன் வரியை ரத்து செய்து மற்ற கஷ்டங்களை நிவர்த்தித்தாலொழிய இந்தியர்களுக்கு ஸமாதானமே இராதென்றும் தீர்மானங்கள் செய்தார்கள்.

20-தேதி.—

வைஸ்ராய்.—இன்று பங்களூரில் வைஸ்ராய் சேஷாத்ரி மெமோரியல் ஹாலிற்கு எதிரில் உள்ள ஸர் சேஷாத்ரி அய்யருடைய உருவச் சிலையைத் திறந்து வைத்தார்.

தேன் ஆப்ரிக்கா.—டர்பன் ரேவில் வேலை நிறுத்தின 180 இந்தியர்களை அவர்கள் வேலைக்குத் திரும்பி வராததற்காகக் கைது செய்திருக்கிறார்கள்.

இந்தியன் ஸ்பீஷி பாங்கி.—பம்பாயிலுள்ள இந்தியன் ஸ்பீஷிபாங்கியை மூடிவிடும்படி உத்தரவு செய்ய அந்த பாங்கியின் ஷேர் ஹோல்டர் ஒருவர் ஹைகோர்ட்டில் ஒரு மனுப் போட்டிருக்கிறார்.

21-தேதி.—

ஒரு நாட்ய ஸ்த்ரீ—இங்லண்டிலுள்ள ப்ரபல நாட்ய ஸ்த்ரீகளில் ஒருத்தியாகிய மிஸ் மாட் அல்லன் இன்று பம்பாய்க்கு வந்து சேர்ந்தாள். இந்தியாவிலுள்ள முக்ய பட்டணங்களில் நாட்யமாடுவாள். இவள் இந்தியாவுக்கு வருவதை பல ஆங்க்லோ இந்திய பத்ரிகைகளும் ஆங்க்லோ இந்தியர்களும் முன் ஆக்ஷேபித்துப் பேசியும் எழுதியும் இருந்தார்கள்.

கனடாவில் இந்தியர்கள்.—ப்ரிட்டிஷ் கொலம்பியாவில் ஒரு ஹிந்துவை இமிக்ரேஷன் அதிகாரிகள் தேசத்தைவிட்டு டிபோர்ட் செய்து விட்டார்கள். அதாவது அப்புறப்படுத்தி விட்டார்கள். அந்த ப்ரதேசத்து ஜட்ஜ் அவர்கள் அப்படிச்செய்வது தவ

றென்று சொல்லியும் அதை லக்ஷ்யம் செய்யாமல் அந்த ஹிந்துவை ஹாங்காங்குக்குப் போகும் ஒரு கப்பலில் பலாத்காரமாய் ஏற்றி அனுப்பி விட்டார்கள். இமிக்ரேஷன் இன்ஸ்பெக்டரை கோர்ட்டை அவமதித்த தற்காக ப்ராஸிக்யூட் செய்யப்போகிறார்களாம்.

பாங்கி முறிவு.—ஸிம்லாவிலுள்ள இண்டியன் எக்ஸ்சேஞ்ஜ் பாங்கி இன்று பணம் கொடுப்பதை நிறுத்தி விட்டது.

வெடிகுண்டு ப்ாக்டரி.—கல்கத்தாவில் ராஜாபஜாரில் உள்ள இரண்டு வீடுகளை போலீஸார் சோதனை செய்து, வெடிகுண்டு செய்வதற்காக வைத்திருந்த யந்த்ரங்கள், ஸாமான்கள், புஸ்தகங்கள், முதலியவைகளைக்கண்டு பிடித்தார்கள். அநேகம் பேரை கைது செய்திருக்கிறார்கள்.

22-தேதி.

வைஸ்ராய்.—இன்று வைஸ்ராய் மதுரைக்கு வந்தார். முனிஸிபாலிடியார் அவருக்கு ஒரு அட்ரெஸ் வாசித்தார்கள். வைஸ்ராய் அதற்கு பதில் சொன்னபோது தமிழ்ச்சங்கம், திருவள்ளுவர், திருமலை நாயக்கர் மால் முதலியவைகளைப்பற்றிக் குறிப்பிட்டுப் பேசினார்.

அன்று ஸாயங்த்ரமே திருச்சிக்குப்போய் இரவில் மலைக்கோட்டையில் தீபாலங்காரத்தைப் பார்வையிட்டார்.

23-தேதி.

தென்னாப்ரிக்கா இந்தியர்கள்.—டர்பனில் 3-இந்தியத் தலைவர்களை கவர்ன்மெண்டார் அரெஸ்ட் செய்திருக்கிறார்கள்.

இன்று ஜோஹன்னஸ் பர்க்கில் ஸுமார் 5000 இந்தியர்கள் ஒரு மீட்டிங் கூடி 3-பவுன் வரியை நிறுத்தும் வரையில் தொழில் நிறுத்தம் செய்யவேண்டுமென்று தீர்மானித்தார்கள். ஜனங்களைத் தூண்டிவரும் மிஸ்டர் தம்பி நாயுடுவை அரெஸ்ட் செய்திருக்கிறார்கள்.

தென்னாப்ரிக்காவில் இந்தியர்களைக் கொடுமையாய் நடத்துவதாகவும், சுரங்கங்களை ஜெயிலாக மாற்றி அவைகளில் இந்தியர்களை அடைப்பதாகவும், வேலை நிறுத்தம் செய்தவர்களைச் சவுக்கடி அடித்தும், பட்டினி போட்டும் வருத்துவதாகவும், ஒரு இந்திய கூலியை அடித்துக்கொன்று விட்டதாகவும், தந்திவந்திருப்பதை உத்தேசித்தும், இவைகள் உண்மையான விஷயங்கள் அல்லவென்று தென்னாப்ரிக்காவில் மறுக்கப்படுவதை உத்தேசித்தும், இந்தியா கவர்ன்மெண்டார் இந்தியா ஸெக்ரெடரிக்கு, அவைகளைப்பற்றி விசாரிக்கவும், அவைகள் உண்மையாயிருக்குமானால், அவ்விதம் இந்தியர்களை நடத்துவதை ஆக்ஷேபித்து இந்தியர்களுக்கு ந்யாயம் கிடைக்கும் படி ப்ரிட்டிஷ் கவர்னமெண்டார் வற்புறுத்தவும், வேண்டுமென்று தெரிவித்திருந்தார்கள்.

தென்னாப்ரிக்கா கவர்ன்மெண்டார் அவ்விஷயங்களைப்பற்றி த்ருப்திகரமான பதில் சொல்லாததால், அவ்விஷயங்களைப்பற்றி நன்றாய் விசாரிக்க ஒரு கமிட்டி ஏற்படுத்த வேண்டுமென்று வைஸ்ராய் இந்தியா மந்த்ரியைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

வைஸ்ராய்.—இன்று திருச்சினாப்பள்ளி ஜனங்கள் திருச்சினாப்பள்ளியில் வைஸ்ராய்க்கு ஒரு அட்ரெஸ் வாசித்தார்கள். அதற்கு பதில் சொன்னபோது வைஸ்ராய், பண்ருட்டி, ராமனாதபுரம் இருப்புப்பாதை விஷயத்தை கவர்ன்மெண்டார் ஆலோசித்துக் கொண்டிருப்பதாகச் சொன்னார். இன்று பிற்பகலில் தஞ்சாவூருக்குப் போய்ச் சேர்ந்தார்.

தஞ்சாவூர் ஜில்லா வாஸிகள் அவருக்கு ஒரு அட்ரெஸ் வாசித்தார்கள். அந்த அட்ரெஸில் மடங்கள், தேவஸ்தானங்கள் இவைகளுடைய நிர்வாகத்தை ஒழுங்கு படுத்த ஒரு சட்டம் செய்யவேண்டியதின் அவச்யத்தைப் பற்றிச் சொல்லியிருந்தது.

வைஸ்ராய் பதில் சொன்னபோது தேவஸ்தான நிர்வாகத்தைப்பற்றி கவர்ன்மெண்டார் யோசித்து வருவதாகவும் சீக்ரம் ஒரு த்ருப்திகரமான ஏற்பாடு செய்யப்படும் என்றும் சொன்னார்.

24-தேதி.

வைஸ்ராய்.—இன்று பகல் 12-30-க்கு வைஸ்ராய் சென்னைக்கு வந்து சேர்ந்தார். 12-45-மணிக்கு கவர்ன்மெண்ட் ஹௌஸில் பாங்க்வெட்டிங் ஹாலில் சென்னை பொது ஜனங்களால் வரவேற்கப்பட்டார். தென்னிந்திய மகம்மதியர்கள், மதராஸ் சேம்பர் அப் காமர்ஸ், தென்னிந்திய சேம்பர் அப் காமர்ஸ், சென்னை நிலஸ்வான்கள் ஸங்கம், சென்னை மகாஜனஸபை, ஆங்க்லோ இந்தியன் ஸங்கம், சென்னை கோவாபரேடர்கள், இந்திய கிறிஸ்தவ ஸங்கம், இந்திய காதோலிக் ஸங்கம், ப்ரொவின்ஷல் காங்க்ரெஸ் கமிட்டி, ஆகிய இவர்கள் தனித்தனியாய் வைஸ்ராய்க்கு அட்ரெஸ் வாசித்தார்கள். அந்த அட்ரெஸ்களை ஏற்றுக்கொண்டு வைஸ்ராய் அவைகளுக்குப் பதில் சொன்னார். இன்று ஸாயந்த்ரம் வைஸ்ராயும், லேடி ஹார்டிஞ்சும், சென்னை கவர்னரும் மற்றவர்களும் துறைமுகத்தைப்போய்ப் பார்த்தார்கள்.

மிஸ் மாட் அல்லன்.—மிஸ்மாட் அல்லன் இன்று பம்பாயில் நாட்டியமாட ஆரம்பித்தாள். நாட்யம் நன்றாய் இருந்ததென்று பம்பாய் பத்ரிகைகள் சொல்லுகின்றன. இன்று நாட்ய மாடினபோது அவளுடைய கணுக்காலில் சுளுக்கு விழுந்து விட்டதனால் சில நாள்களுக்கு நாட்யமாட முடியாதென்று தெரிகிறது.

25-தேதி.

வைஸ்ராய்.—இன்று காலையில் வைஸ்ராய் சென்னை யூனிவர்ஸிட்டியாரின் அட்ரெஸை ஏற்றுக்கொண்டு யூனிவர்ஸிட்டி லைப்ரரியின் அஸ்திவாரக்கல்லை நாட்டினார். பிறகு ஹைகோர்ட்டையும், ம்யூஸியத்தையும் போய்ப்பார்வையிட்டார்கள். பகலில் திருவாங்கூர் மகாராஜா, கொச்சிராஜா, புதுக்கோட்டைராஜா, ஆகிய இவர்கள் வைஸ்ராயை கவர்ன்மெண்ட் ஹௌஸில் பேட்டி கண்டார்கள். பிற்பகலில் வைஸ்ராய் திருவாங்கூர் மகாராஜாவையும் கொச்சிராஜாவையும் அவர்களுடைய வாஸஸ்தலத்திற்குப் போய் பேட்டிகண்டார்.

ப்ரிட்டிஷ் கோலம்பியாவில் இந்தியர்கள்.—கனடாவைச்சேர்ந்த ப்ரிட்டிஷ் கொலம்பியாவில் 39-ஹிந்துக்களை டிபோர்ட் செய்யும்படி கவர்ன்மெண்டார் உத்தரவு செய்திருந்தது சட்டப்படி செல்லாதென்று ப்ரிட்டிஷ் கொலம்பியாவின் ப்ரதம ஜட்ஜ் அபிப்ராயப்பட்டு 25-பேரை விடுதலை செய்து விட்டார்.

26-தேதி.

வைஸ்ராய்.—இன்று காலையில் வைஸ்ராய் சென்னைக் கார்ப்பரேஷனுடைய அட்ரெஸை ஏற்றுக்கொண்டு கார்ப்பரேஷன் கட்டிடமாகிய ரிப்பன் பில்டிங்ஸைத் திறந்து வைத்தார்.

பிற்பகலில் சென்னை காஸ்ம பாலிட்டன் க்ளப்பைச் சேர்ந்தவர்கள் வைஸ்ராய்க்கு ஒரு விருந்து அளித்தார்கள். இரவு 11-மணிக்கு வைஸ்ராயும் லேடி ஹார்டிஞ்சும் கல்கத்தாவுக்குப் புறப்பட்டுப் போய்விட்டார்கள்.

பாங்கி முறிவு.—ஹூடியானுவிலுள்ள இண்டஸ்ட்ரியல் பாங்கி இன்று முறிந்து போய்விட்டது.

27-தேதி.

சென்னை நிலஸ்வான்கள் ஸங்கம்.—சென்னை நிலஸ்வான்கள் ஸங்கத்தார் இன்று ஒரு மீட்டிங்கூடி நிலசெஸ்ஸை உயர்த்தக் கூடாதென்றும், எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்ட் அனுஷ்டானத்தில் எப்படியிருந்து வருகிறதென்பதை

ஆராய ஒரு கமிஷன் ஏற்படுத்த வேண்டுமென்றும், தீர்மானம் செய்தார்கள்,

28-தேதி.

தென்னாப்ரிக்கா இந்தியர்கள்.—தென்னாப்ரிக்காவிலுள்ள இந்தியர்களை சில வெள்ளையர்கள் கொடுமையாய் அடித்துத்தொந்தரை செய்தார்கள் என்று சொன்னதை ருசுப்படுத்துவதற்காக சில இந்தியர்கள் கோர்ட்டில் அபிடவிட்டுகள் போட்டிருக்கிறார்கள்.

29-தேதி.

தென்ஆப்ரிக்கா இந்தியர்கள்.—இன்று போலீஸார் வேலைநிறுத்தத்தில் ஸம்பந்தப்பட்ட 365 இந்தியர்களை கைது செய்தார்கள். ஸுலுலாண்டில் 100 இந்தியர்களைக் கைது செய்தார்கள். மூன்று இந்தியத்தலைவர்களை பீட்டர் மாரிட்ஸ் பர்க்கில் போலீஸார் கைது செய்தார்கள்.

பாங்கி விஷயம்.—கராச்சியிலுள்ள விண்ட் அண்ட் பலுசிஸ்டான் பாங்கி இன்று பணம் கொடுப்பதை நிறுத்திவிட்டது.

மிஸ்டர் சூனீலால் ஸாரய்யா.—இண்டியன் ஸ்பீஷி பாங்கியின் மானேஜிங் டிரெக்டராகிய மிஸ்டர் சூனீலால் டி. ஸாரய்யா இன்று காலையில் பம்பாயில் இறந்து போய்விட்டார்.

30-தேதி.

இண்டியன் ஸ்பீஷி பாங்க்.—இண்டியன் ஸ்பீஷிபாங்கியைக் கலைத்து விடுவதற்காக ஒரு ஷேர் ஹோல்டர் போட்ட பெட்டிஷன் பேரில் பம்பாய் ஹைகோர்ட் ஜட்ஜ் மிஸ்டர் டேவர் அதைக் கலைத்து விடுவதைப்பற்றி விசாரிப்பதாக ஒப்புக்கொண்டு ஒரு ப்ரொவிஷனல் லிக்விடேட்டரை நியமித்திருக்கிறார்,

# SEASON.

## கால ஸ்திதி.

**Rainfall.**

மழை.—1913ஹு ஏப்ரல்மீ 1உயிலிருந்து 1913ஹு டிஸம்பர்மீ 1உவரையில் பெய்த மழையின் அளவும், இந்தக் காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்கவேண்டிய மழையின் அளவும், கீழே அங்குலம் ஸெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

| மழை பெய்த ஊரின் பெயர். | பெய்த மழை அங்குலம். | பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம். |
|---|---|---|
| கோபால்பூர் | 47·28 | 42·68 |
| வால்டேர் | 34·99 | 34·16 |
| காக்கினடா | 36·45 | 37·07 |
| மசூலிப்பட்டணம் | 31·50 | 38·10 |
| நெல்லூர் | 22·64 | 30·32 |
| மதராஸ் | 56·44 | 42·12 |
| கூடலூர் | 80·03 | 41·42 |
| நாகபட்டணம் | 71·60 | 39·93 |
| பாம்பன் | 35·83 | 26·62 |
| கொழும்பு | 52·55 | 69·28 |
| திருவநந்தபுரம் | 56·42 | 58·28 |
| கொச்சி | 95·83 | 107·86 |
| கள்ளிக்கோட்டை | 110·48 | 114·83 |
| மங்களூர் | 109·35 | 126·43 |
| மெர்க்காரா | 109·07 | 124·98 |
| ஐதராபாத் | 18·91 | 39·55 |
| பல்லாரி | 15·02 | 19·50 |
| கர்நூல் | 17·55 | 26·08 |
| கடப்பை | 20·66 | 30·10 |
| ஹாஸ்ஸான் | 25·63 | 34·70 |
| பெங்களூர் | 21·24 | 34·13 |
| கொடைக்கானல் | 42·02 | 50·66 |
| உதகமண்டலம் | 42·72 | 50.32 |
| கோயம்புத்தூர் | 11·84 | 19·61 |
| வேலூர் | 21·16 | 39.70 |
| சேலம் | 30·84 | 37.96 |
| திருச்சினாப்பள்ளி | 29·46 | 28·58 |
| புதுக்கோட்டை | 32·63 | 30·20 |
| மதுரை | 14·33 | 31·10 |
| திருநெல்வேலி | 25·11 | 20·78 |

# Calendar—பஞ்சாங்கம்.

| அம்ருதாதி. | லக்ன பாக்கி | அகசு | துலு | இங் | தமி | வா | 47-ப்ரமாதீச ஹு மார்கழி மீ தக்ஷிணாயனம்-ஹேமந்தருது } கொல்லம்-1089 பஸலி-1323 { இங்கிலீஷ் - 1913-1914 டிஸம்பர்- ஜனவரி } ஹிஜரி-1331-32 ஜுல்ஹேஜ்-மொஹரம். |
|---|---|---|---|---|---|---|---|
| யோகம். | நா வி | நா வி | உ | உ | உ | | |
| சிஅ | 5 20 | 2826 | 16 | 15 | 1 | தி | த்வி 31-12, திரு 11-17, சப் 10-32, தை 2-34, வணி 59-38, ரா 12-13, சாபரவி 0-34, சாபத்வி தியாதி, ஷடசீதி புண்யகாலம், பரசுராமஜயந்தி ஸ்மார்க்கம் |
| சி | 9 | 25 | 17 | 16 | 2 | செ | த்ரி 27-55, புன 9-49, பிரா 5-3, உப 54-1, பவ 56-3, ரா 0-46, சங்கடசதுர்த்தி |
| சி | 4 58 | 25 | 18 | 17 | 3 | பு | சது 24-5, பூச 7-47, வை 52-44, கவு 52-1 ரா 10-6, சதுர்த்தீதி, வைசிரா |
| சிஅ | 47 | 25 | 19 | 18 | 4 | வி | பஞ் 19-54, ஆயி 5-20, விஷ் 46-8, கர 47-39, ரா 5-23, திதிதுவயம் |
| மசிசி | 36 | 25 | 20 | 19 | 5 | வெ | ஷஷ் 15-22, மக 2-33, உப 57-2, பிரீ 39-26, பத் 43-2, தி 1-35, ஸப்தமீதி |
| உம | 26 | 25 | 21 | 20 | 6 | ச | ஸப் 10-40, உத் 56-27, ஆயு 32-27, பால 38-16, தி 16-40, காலாஷ்டமீ, அஷ்டகா, கரிநாள் |
| அசி | 15 | 24 | 22 | 21 | 7 | ஞா | அஷ் 5-48, ஹஸ் 53-10, ஸவ 25-24, தை 33-19, தி 16-19 |
| பிஅ | 4 | 24 | 23 | 22 | 8 | தி | நவ 0-48, உப 54-55, சித் 49-46, சோ 18-15, வணி 28-17, தி 12-3, மகராயனம் 23-38 அவம |
| சிம | 3 53 | 24 | 24 | 23 | 9 | செ | எகா 50-40, சுவா 46-25, அதி 11-3, பவ 23-11, தி 2-59, ரா 31-14, ஸர்வ ஏகா, கரிநாள் |
| சிஅ | 42 | 24 | 25 | 24 | 10 | பு | த்வா 45-50, விசா 43-15, சுக 3-56, உப 53-4, கவு 18-13, சே 3-39, ரா 24-20, இராமா |
| சிபி | 31 | 25 | 26 | 25 | 11 | வி | த்ர 41-24, அனு 40-30, சூல 50-25, கர 13-33, ரா 25-29, மாஸசிவரா, பிரதோஷ, திவாமா, கரிநாள் |
| மஅ | 20 | 25 | 27 | 26 | 12 | வெ | சசி 37-39, கேட் 38-24, கண் 44-25, பத் 9-26, ரா 29-27 [பிண்டபிதிரு |
| சி | 10 | 25 | 28 | 27 | 13 | ச | ● 34-55, மூல 37-16, விரு 39-16, சது 6-9, சே 1-3, ரா 4-52. ஸர்வ அமா, மூலத்திற்கு குஹ தோஷ |
| சிஅ | 2 59 | 25 | 29 | 28 | 14 | ஞா | பிர 33-28, பூரா 37-24, துரு 35-7, கிம் 4-1 தி 1-8, ரா 29-22, பௌஷசுத்த, இஷ்டி, கற்பேட்டாரம் ப 5-45 |
| மஅ | 48 | 25 | 30 | 29 | 15 | தி | த்வி 33-33, உத்ரா 39-4, வியா 32-11, பால 3-19, சே, 1-48, ரா 21-3, சந்திரதர்சன |
| சி | 37 | 26 | 1 | 30 | 16 | செ | த்ரி 35-19, திருவோ 42-19, ஹர் 30-37, தை 3-14, ரா 24-26, சிரவண உப |
| பிசி | 26 | 26 | 2 | 31 | 17 | பு | சது 38-50, அவி 47-15, வஜ் 30-11, வணி 6-52, சதுர்த்தீ விரதம் |
| மசி | 15 | 26 | 3 | 1 | 18 | வி | பஞ் 43-49, சத 53-33, வித் 31-1, பவ 11-11, தி 7-1, [தீபாதம். |
| சி | 4 | 27 | 4 | 2 | 19 | வெ | ஷஷ் 50-1, பூரட் 60-0, விய 32-44, கவு 16-52, தி 11-29, ஷஷ்டியுப, மஹாவ்ய |
| மசி | 1 53 | 27 | 5 | 3 | 20 | ச | ஸப் 56-47, பூரட் 0-55, வரீ 35-3, கர 23-23, தி 28-0, |
| அ | 43 | 27 | 6 | 4 | 21 | ஞா | அஷ் 60-0, உத்ட் 8-43, பரி 37-26, பத் 30-9, ரா 14-6, த். தினஸ்பிருக் |
| சி | 32 | 28 | 7 | 5 | 22 | தி | அஷ் 3-25, ரே 16-17, சிவ 39-26, பால 36-28 |
| சி | 21 | 28 | 8 | 6 | 23 | செ | நவ 9-16, அசு 23-0, சித் 40-37, தை 41-43, தி 11-56, ரா 20-51 |
| சிஅ | 10 | 29 | 9 | 7 | 24 | பு | தச 13-47, பர 28-20, சாத் 40-36, வணி 45-22 |
| மஉ | 0 59 | 29 | 10 | 8 | 25 | வி | எகா 16-32, கிரு 31-57, சுப 39-14, பவ 47-12, தி 0-21, ஸர்வஜீவவார வைகுண்டஏகாதசி, மன்வாதிகிருத்தி |
| மசி | 48 | 30 | 11 | 9 | 26 | வெ | த்வா 17-26, ரோ 33-43, சுப் 36-26, கவு 47-11, தி 13-20, ரா 19-23, பிரதோஷம் |
| சி | 37 | 31 | 12 | 10 | 27 | ச | த்ர 16-30, மிரு 33-53, பிரா 32-15, கர 45-24, ரா 26-3, கற்போட்ட முடிவு 10-23 |
| ெ | 27 | 32 | 13 | 11 | 28 | ஞா | சசி 13-57, திரு 32-29, மா 26-50, பத் 42-8, ஆருத்ராதர்சனம், இராமா |
| அசி | 0 16 | 2832 | 14 | 12 | 29 | திங் | ○ 10-3, புன 29-53, வை 20-27, பால 37-42, தி 1-19, ரா 20- 5, சாபப்ரதமாதி, வைசிரா, இஷ்டி, போகிப்பண்டிகை திவாமா |

தநுர்மீ (தமி 1); 1332-மொஹரம்மீ (துலு 1); 1914-ஜனவரிமீ (இங் 1)

| | | | |
|---|---|---|---|
| | | ச | செ |
| ரா | 4-மக-குரு<br>12-தனு-சு<br>16-தனு-பு | | கே |
| ர குரு | பு-சு | | |